ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

# வருடாந்த அறிக்கை

## 2017

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை
வருடாந்த அறிக்கை 2017

© ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

CONCEPT, LAYOUT & DESIGN

613/3, High Level Road, Gangodawila,
Nugegoda, Sri Lanka.
+94 11 302 4950 | +94 71 224 11 00
kalawainfo@gmail.com

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

**வருடாந்த அறிக்கை 2017**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை
முதலாம் மாடி, தொழிற் செயலகம், கொழும்பு 05.
தொ.பேசி: 011 2581704 / தொ.நகல்: 011 2806832
மின்னஞ்சல்: finance@etfb.lk / இணையம்: www.etfb.lk

# உள்ளடக்கம்

## 01 தாபனப் பகுப்பாய்வு


| | | |
|---|---|---|
| 1.1 | இந்த அறிக்கை குறித்து | 126 |
| 1.2 | நாங்கள் யாவர் | 127 |
| 1.3 | எமது பெறுமானங்கள் | 127 |
| 1.4 | நிறுவனஞ்சார் மீளாய்வு | 129 |
| 1.5 | செயலாற்றுகையின் முக்கிய பதிவுகள் | 132 |
| 1.6 | 2017 ஆம் ஆண்டு ஒரே பார்வையில் | 135 |
| 1.7 | மைல்கற்கள் | 137 |
| 1.8 | பின்னணிப் பகுப்பாய்வு | 139 |


## 02 தாபன நிர்வாகம்


| | | |
|---|---|---|
| 2.1 | பணிப்பாளர் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் | 145 |
| 2.2 | தவிசாளரின் மீளாய்வு | 147 |
| 2.3 | தவிசாளரின்/ பணிப்பாளர் சபையின் மீளாய்வு | 149 |
| 2.4 | ஆளுகை அறிக்கை | 151 |
| 2.5 | இடநேர் முகாமைத்துவ அறிக்கை | 156 |


## 03 நிதித் தகவல்கள்


| | | |
|---|---|---|
| 3.1 | விரிவான வருமானக் கூற்று | 162 |
| 3.2 | நிதி நிலமைக் கூற்று | 164 |
| 3.3 | உரிமைப்பங்கு மாற்றத்திற்கான கூற்று | 165 |
| 3.4 | நிதிப்பாய்ச்சல் கூற்று | 167 |
| 3.5 | முதலீட்டுக் கூற்று | 168 |
| 3.6 | நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 170 |


## 04 துணைத் தகவல்கள்


| | | |
|---|---|---|
| 4.1 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 கான சபையின் அவதானிப்புக்கள் | 207 |
| 4.2 | புள்ளிவிபரப் பின்னிணைப்பு | 353 |
| 4.3 | ஏனைய பின்னிணைப்பு | 357 |



# 01

# தாபனப் பகுப்பாய்வு

# இவ்வறிக்கையைப் பற்றி

2017 ஆம் ஆண்டில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நலன்பெறுநர்களுக்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் முக்கியமான பெறுமானத்தைத் தாபனம் எவ்வாறு உருவாக்கியது என்பதற்கான விரிவான கணக்கொன்றினை வழங்கும் பொருட்டு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் சமர்ப்பிக்கப்படும் 36ஆவது வருடாந்த அறிக்கை இதுவாகும். இவ்வறிக்கையானது தாபனத்தின் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால தனித்துவமிக்க பெறுமான உருவாக்கத்தினை தமது பிரபலமிக்க பங்குதாரர்களுடன் பகிர்ந்துகொள்வதனை நோக்காகக் கொண்டுள்ளது. அதன் மூலம் நிதியத்தின் தந்திரோபாயம், ஆளுகை மற்றும் நிதி முகாமைத்துவம் குறித்து சுருக்கமான தொடர்பாடலையும் இது வழங்குதுடன் அதன் நிதிசார் செயலாற்றுகை மற்றும் தாபனத்தினால் உருவாக்கப்பட்ட சமூகத்தடங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான உறவினையும் நிரூபணஞ் செய்கின்றது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆளுகை அறிக்கையானது பொது தொழில் முயற்சிகளுக்கான கூட்டுரு ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக்கான விதி மற்றும் 1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம் என்பவற்றுடன் நிறுவனம் எவ்வாறு இணங்கி ஒழுகுகின்றது என்பது குறித்து கலந்துரையாடுகின்றது.

இவ்வறிக்கையானது அளவு மற்றும் தர ரீதியான தரவுகளைக் கொண்டுள்ளதுடன், ஒப்புநோக்கு மற்றும் மேலதிக பகுப்பாய்வினை எளிதாக்குவதற்கு முடியுமான அளவு ரீதியான தரவுகளை வழங்குவதே எமது நோக்காகும். நிதிக் கூற்றுக்களும் அதனுடன் தொடர்பான குறிப்புக்களும் அரச கணக்காய்வாளரால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளதுடன் உத்தரவாத அறிக்கையும் இவ்வறிக்கையில் உள்ளது.

2017 டிசம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் காலப்பிரிவிற்கு நிதியத்தினதுதலைமை அலுவலகத்தினால்மற்றும் கிளை வலையமைப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் 2017ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கை மற்றும்மிக அண்மைய ஆண்டறிக்கையான 2016 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான அறிக்கையுடன் 2017 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கை ஒப்புநோக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையின் உள்ளடக்கங்கள் இந்நிறுவனத்திற்கும் அதன் முக்கிய பங்குதாரர்களுக்கும் பொருந்தக்கூடிய அம்சங்கள் மீது முக்கியத்துவமளிக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்டுள்ளன.

# நாம் யாவர்

ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியமானது 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு 1981 ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் திகதி செயற்பாடுகளை ஆரம்பித்தது. இது தொழில் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டு, தற்போது அபிவிருத்திப் பணிகள் அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரித்தாகாத எல்லா அரச துறை ஊழியர்களும் மற்றும் தனியார் துறை ஊழியர்களும் இந்நிதியத்தில் அங்கத்தவர்களாவதுடன், அவர்களது தொழில்தருநர்கள் அவ்வூழியர்களின் மொத்த உழைப்பிலிருந்து 3%இனை நிதியத்திற்கு மாதாந்தம் அனுப்பவேண்டியுள்ளனர். எனவே ஊழியர் சேமலாப நிதியத்தைப்போலன்றி, தொழில்தருநர் மாத்திரமே ஊழியர்∴ அங்கத்தவர் சார்பாகப் பங்களிப்பொன்றை மேற்கொள்வதுடன் அங்கத்தவர்கள் பங்களிப்புச் செய்யாத ஒரு நலனாகும். நாட்டின் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்கும் சுயதொழில் முயற்சியாளர்களினதும் புலம்பெயர் தொழிலாளர்களினதும் தன்னார்வ அங்கத்துவத்தினை அதிகரிப்பதற்கு விசேட கவனஞ் செலுத்தப்படுகின்றது.

**சபையின் குறிக்கோள்கள்**

(அ) நிதியிடல் மற்றும் முதலீட்டில் பங்குபெறுவதன் ஊடாக ஊழியர் உடைமையாண்மை, ஊழியர் நலன்புரி, பொருளாதார சனநாயகம் ஆகியவற்றை ஊக்குவித்தல்

(ஆ) தொழில் முயற்சிகளில் உரிமை பங்கினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் முகாமைத்துவத்தில் ஊழியர் பங்களிப்பினை ஊக்குவித்தல்

(இ) ஊழியர்கள் ஓய்வு பெறும் போது தான் பங்களிப்புச் செய்யாத நலன்களை வழங்குதல் மற்றும்

(ஈ) மேலே (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களிற்குத் தேவையான ஏனைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

# எமது பொறுப்புக்கள்

## எமது நோக்கு

நிறுவன ரீதியான திறமையினூடாக அனைத்து பங்குதாரர்களுக்கும் செயலூக்கமிக்க மற்றும் சாத்தியமிக்க முதன்மையான நம்பிக்கைப் பொறுப்பாக விளங்குதல்

## எமது செயற்பணி

நிதிசார் உறுப்பினர் நலன்கள் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவைகளை பரந்த அளவில் வழங்குவதில் மிகவும் அக்கறையுள்ள மற்றும் விவேகமுள்ள நம்பிக்கைப் பொறுப்பாக விளங்குதல்

## எமது பெறுமானங்கள்

- ஆக்கத்திறனமிக்க, புத்தாக்கமிக்க மற்றும் அர்ப்பணிப்புமிகு பணிக்குழாம்
- மக்கள் நேயமிகு வேலைச் சூழல்
- ஆதரவுமிக்க கொள்கைகள் மற்றும் செயன்முறைகள்
- சிறந்த அமைப்புக்கள் மற்றும் நடைமுறைகள்
- நிறைவான நிதி
- மகிழ்ச்சிமிக்க வாடிக்கையாளர்கள்





# நிறுவனஞ்சார் மீளாய்வு




ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது ஒரு நம்பிக்கையாளர் அல்லது பொறுப்பாளரின் வகிபங்கினைக் கொண்ட ஓர் ஒழுங்கான நிறுவனக் கட்டமைப்பைக் கொண்டுள்ளதுடன், எதிர்காலத்தில் ஒரு உன்னதமான நிதி நிறுவனமாகச் செயற்பட வைப்பதே முகாமைத்துவத்தின் நோக்கமாகும். நிறுவனக் கட்டமைப்பினைப் பற்றி சட்டவிதிகளில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும் சட்டப் பிரிவு 5 இன் கீழ், சபையானது அதன் செயற்பாட்டு விதிமுறைகளை நெறிப்படுத்தலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதியச் செயற்பாட்டின் ஒட்டுமொத்த முகாமைத்துவப் பொறுப்புக்களும் அதன் பணிப்பாளர் சபையிலேயே தங்கியுள்ளது. பணிப்பாளர் சபையானது 9 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இவ் ஒன்பது உறுப்பினர்களில் 4 பேர் சம்பந்தப்பட்ட அமைச்சராலும் தலா ஒரு உறுப்பினர் வீதம் நிதி மற்றும் வணிக விடயங்களிற்கு பொறுப்பான அமைச்சர்களாலும் ஒரு உறுப்பினர் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்ததாலும் இரு உறுப்பினர்கள் 100,000 இற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களாலும் நியமிக்கப்படுவார்கள்.

இச்சபைக்குப் பொறுப்பான அமைச்சரின் தீர்மானத்திற்கமைய சபைத் தலைவர் தெரிவு செய்யப்படுவதுடன் சட்டவிதியின் படி சபைத் தலைவரே சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் (ஊநுமு) ஆவார். மேல் மாகாணத்திலேயே பெரும்பாலான தொழில்தருநர்கள் உள்ளபடியால் நுவுகுடீஆரம்பத்திலே ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பாக மேல்மாகாணத்திலே உருவாக்கப்பட்டது. முக்கிய பிரதேசங்களான பிராந்திய மற்றும் மாவட்ட அலுவலகங்கள் திறக்கப்பட்டதும் பிராந்திய அலுவலக வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மறுசீரமைப்பு பூர்த்தியானதன் பின்னர் அமுலாக்கம் மற்றும் சட்ட நடவடிக்கைகளில் துரித முன்னேற்றம் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து கோரல்களை ஏற்றல், கோரல் கொடுப்பனவுகள், உறுப்பினர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்ற பல உறுப்பினர் சேவைச் செயற்பாடுகள் பரவலாக்கப்பட்டன.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளானது பரந்த அளவில் செயற்பாட்டுப் பிரிவு மற்றும் ஆதரவுச்சேவைப் பிரிவு என இரு வகைப்படுத்தப்படும். சேகரிப்பு மற்றும் தொழில்தருநர் தொடர்புகள், உறுப்பினர் சேவைகள் மற்றும் முதலீடுகள் என்பன செயற்பாட்டுப் பிரிவில் அடங்கும். நிர்வாகம் மற்றும் மனிதவளம், நிதி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் ஆதரவுச் சேவைகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தலைவர் அவர்கள் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகக் கடமைபுரிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் (ஊநுமு) நேரடிக் கண்காணிப்பின் கீழ் பொதுமுகாமையாளர் மற்றும் மேலதிகப் பொதுமுகாமையாளர் ஆகியோர் செயற்படுவர். ஒவ்வொரு செயற்பாட்டுப் பிரிவும் ஒவ்வொரு பிரதிப் பொதுமுகாமையாளர் (னுபுஆ) தலைமையில் செயற்படும். செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவியானது தலைவருக்கு உதவிபுரிவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இதன்படி, நிறுவனம் சுமுகமாகச் செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு ஒரு முழுமையான நிறுவனக் கட்டமைப்பு விருத்தி செய்யப்பட்டுள்ளது.

# சபையின் திணைக்களங்கள்/ பிரிவுகள்/ அலகுகள் ஆகியவற்றின் தொழிற்பாடுகள்

## 1 சேகரிப்பு மற்றும் தொழில் தொடர்புகள் பிரிவு



தனியார் நிறுவனங்களிலும் இளைப்பாற்றுச் சம்பளம் கிடைக்கப் பெறாத அரச நிறுவனங்களிலும் பணிபுரியும் ஊழியர்களின் மொத்த வருவாயில் 3% இனைப் பங்களிப்புச் செய்வது கட்டாயமாகும். தொழில்தருநர்களிடமிருந்து உரிய நேரத்தில் பங்களிப்புக்களைச் சேகரித்தல், மேலதிக கட்டண அறவீடுகளைச் சேகரித்தல், தவறுபவர்களை/ பங்களிக்காதோரை அடையாளங்காணுதல், தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் போன்றன பங்களிப்புச் சேகரித்தல் படிமுறையுடன் தொடர்புடைய முக்கியமான செயற்பாடுகளாகும். சபையின் சேகரிப்பு இலக்குகளை அடைவதே சேகரிப்பு மற்றும் தொழில்தருநர் தொடர்புப் பிரிவின் பொறுப்பு ஆகும்.

## முதலீட்டுப் பிரிவு 2




சபையின் பல்வேறு முதலீட்டு நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள முதுலீட்டுப் பிரிவு நிறுவனத்தின் முக்கிய வர்த்தக அலகாகும். முதலீடுகள் மற்றும் திரவத்தன்மையின் பாதுகாப்பினைப் பேணும் அதே வேளையில் உச்ச வருவாயை ஈட்டுவதே இவ்வலகின் முக்கிய நோக்கமாகும். முதலீட்டுத் தீர்மானங்களுக்கான வழிகாட்டியாக விரிவான முதலீட்டுக் கொள்கை ஒன்று உள்ளது.

## 3 அங்கத்தவர் சேவைகள் பிரிவு



இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன, அங்கத்தவர் கணக்குகளை இற்றைப்படுத்தல் மற்றும் பேணுதல், அங்கத்தவர்களுக்கு வருடாந்த அங்கத்தவர் கூற்றுக்களை வெளியிடுதல், பொது நலன்களின் (சாதாரண மற்றும் மரண நலன் கோரல்கள்) துரித செயலாக்கம் மற்றும் செயற்படு அங்கத்தவர்களுக்கான ஏனைய நலன்புரித் திட்டங்களைப் பேணுதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. இப்பிரிவின் செயற்பாடுகளை மேலும் வலுவூட்டுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நிதிப் பிரிவு 4



நிதிப் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாவன, மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகள், வருடாந்த வரவு செலவுதிட்டம் மற்றும் பணிக்குழாத்தினரதும் ஏனையவற்றினதும் கொடுப்பனவுகள் ஆகியவற்றை அரச வரிகளுக்கு உட்பட்டவாறு தயாரித்தல், அரச கணக்காய்வு விடயங்களை ஒருங்கிணைத்தல், கூட்டிணைந்த திட்டம் மற்றும் ஏனைய முகாமைத்துவ தகவல் அறிக்கைகள் ஆகியவற்றைத் தயாரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

## 5 நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவு



தற்போதைய போட்டிமிக்க வர்த்தகச் சூழலில் இன்றியமையாத நவீன மனித வள நுட்பங்கள் மற்றும் சிறந்த அலுவலக நடைமுறைகள் ஆகியவற்றை பின்பற்றுவதன் தேவை அறியப்பட்டுள்ளது. ஒரு சேவை நிறுவனமான நுவுகு சபை மக்கள் மீது (ஊழியர்கள்) தங்கியிருக்கும் தன்மையானது மிகவும் உயர்வானது. எனவே, நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை அபிவிருத்தி மற்றும் விருத்தி செய்வதற்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவினால் பின்பற்றப்படும் வழிமுறைகள் மற்றும் காணப்படும் முறைமைகளை இற்றைப்படுவதற்கும் விருத்தி செய்வதற்கும் மற்றும் பணிக்குழாத்தினருக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தகவல் தொழில்நுட்பப் பிரிவு 6



தகவல் தொழில்நுட்பப் பிரிவானது பிரதானமாக அங்கத்தவர் நிர்வாக மென்பொருள் முறைமையினை முகாமை செய்வதற்கும் பேணுவதற்கும் பொறுப்பாயுள்ளது. இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்துடன் இணைந்து தொழில்நுட்பப் பிரிவை மறுசீரமைப்பதற்கு தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 7 கணக்காய்வு மற்றும் உத்தரவாதப் பிரிவு



உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது போதிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் நிறுவப்பட்டுள்ளன எனவும் அவ்வாறான முறைமைகள் தொடர்ச்சியாகவும் பொருத்தமாகவும் பிரயோகிக்கப்படுகின்றன எனவும் உறுதிப்படுத்தவதற்கு பொறுப்பாயுள்ளது. பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) நேரடியாகவே தலைவருக்கு அறிக்கையிடுவார். உள்ளகக் கணக்காய்வின் ஏற்கனவே உள்ள முறைமைகள் மற்றும் நடைமுறைகளின் நம்பகத்தன்மையை மீள்மதிப்பீடு செய்வதற்கு ஓர் ஆய்வினை மேற்கொள் வேண்டும் என்றும் நிறுவனத்தின் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் பயனுறுதிமிக்க கருவியொன்றாக உள்ளகக் கணக்காய்வின் வகிபங்கினை வலுவூட்டுவதற்கும் முகாமைத்துவம் கருத்திற் கொண்டுள்ளது.

## சட்டப் பிரிவு 8



சட்டப்பிரிவானது சபையின் அனைத்து சட்ட விவகாரங்களுக்கும் ஆலோசனை சேவை அலகொன்றாகச் செயற்படுகின்றது. பிராந்திய அலுவலக வலையமைப்பு விரிவாக்கத்துடன் பிராந்திய மட்டத்திற்கு சட்ட நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிராந்திய அலுவலகத்திலும் சட்ட விவகாரங்களில் ஈடுபடுவதற்கு தனி ஒரு சட்ட அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். சட்டப் பிரிவானது உதவிப் பொது முகாமையாளரின் (சட்டம்) கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றது. அவர் பிரதி பொது முகாமையாளரின (சேகரிப்பு மற்றும் தொழில் தருநர் தொடர்புகள்) அறிக்கையிடுதல் வேண்டும்.

## 9 திட்டமிடல், ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு



ஒவ்வொரு ஆண்டிலும் ஜனவரி 1ஆம் திகதியாகையில் கண்காணித்தல், இற்றைப்படுத்தல் மற்றும் வருடாந்த அடிப்படையில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான கூட்டிணைந்த திட்டத்தினை திருத்தியமைத்தல் மற்றும் புதிய திட்டம் என்பன அமுல்படுத்துவதற்காக கிடைக்கப் பெறும். இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன மாதாந்த/காலாண்டு/வருடாந்த அடிப்படையில் ETFBயின் முன்னேற்றத்தினை அறிக்கையிடல், உரிய நேரத்தில் அமைச்சிற்கு, பாராளுமன்றத்திற்கு மற்றும் ஏனைய நிறுவனங்களிற்கு சட்டரீதியான அறிக்கையிடல் மற்றும் தேவையான திருத்தங்களைச் செய்தல், ETFBயின் முகாமைத்துவத்திற்குத் தேவையான பயனுறுதிமிக்க தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமான பயனுறுதிமிக்க மற்றும் உரிய நேரத்தில் ஆய்வுளை நடாத்துதல் திட்டமிடல், ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவின் முக்கிய பணியாகும்.

## புள்ளிவிபரப் பிரிவு 10



புள்ளிவிபரப் பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன பயனுறுதிமிக்க முகாமைத்துவ தீர்மானங்களை எடுத்தல், தேவையான தரவுகள் குறித்து போக்குப் பகுப்பாய்வினைத் தயாரித்தல் மற்றும் பகுப்பாய்தல் ஆகியவற்றிற்காக அனைவருக்கும் ரியல் டைம் தரவுத்தளத்தினைக் கிடைக்கப் பெறச் செய்தல், நேர அடிப்படையில் எதிர்கால வருடங்களுக்கான எதிர்வுகூறல் மற்றும் திட்டமிடல், அவ்வப்போது முகாமைத்துவத் தீர்மானங்களை எடுப்பதற்கு தேவையான முக்கிய குறிப்புக்களை வழங்குதல், தேசிய திட்டமிடல் மற்றும் அமுலாக்கத்திற்கான வகைப்படுத்தப்பட்ட மற்றும் குறிபிடப்பட்ட தகவல்களைத் தேவையான நிறுவனங்களுக்கு வழங்குதல் என்பனவாகும்

# செயலாற்றுகையின் முக்கிய பதிவுகள்




## அங்கத்தவர் நோக்கு

வட்டி மற்றும் பங்கிலாபம் ரூ.பில்.




செயற்பாட்டுச் செலவுகள் எதிர் வருமானம்



முதலீட்டுச் செயன்முறை 2017




# ஊழியர் நோக்கு

ஊழியர் தலைப்பு எண்ணிக்கை




பயிற்சி மற்றும் அபிவிருத்திச் செலவு (ரூ.மில்.)




மொத்த ஆளணிச் செலவு (ரூ.மில்.)



## அரசாங்கத்தின் நோக்கு

### அரசுக்கு செலுத்தப்பட்ட வரி (ரூ.மில்)




### அரசாங்க பிணையங்களில் மொத்த முதலீடு (ரூ.மில்)




## சமூக நோக்கு

### நலத்திட்டங்கள் (ரூ.மில்)





# 2017 ஆம் ஆண்டு ஒரே பார்வையில்...

2017 ஆம் ஆண்டினுள் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தினையும் முக்கியமான அடைவுகளையும் பதித்துள்ளது. சில அடைவுகள் கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

- கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12% அதிகரிப்பான இவ் ஆண்டிற்கான தொழில் தருநர்களிடமிருந்து கிடைத்த மொத்தப் பங்களிப்புகள் 22.8 பில்லியன் ரூபாவாகும்.
- அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் பல்வேறு முதலீட்டுப் பெறுமானம் 235 பில்லியன் ரூபாவிலிருந்து 262 பில்லியன் ரூபா வரை அதிகரித்ததுடன் 2016 ஆம் ஆண்டில் 24.0 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 17% வளர்ச்சியான 28.1 பில்லியன் ரூபா என மொத்த முதலீட்டு வருமானம் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- கடந்த ஆண்டில் 20.4 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் சபையானது இந்த வருடத்தில் தேறிய இலாபமாக 24.4 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது.
- வருட இறுதியில் நிதியத்தின் மொத்த தேறிய சொத்துப் பெறுமதி 279 பில்லியன் ரூபாவையும் விஞ்சியது.
- சபையினால் 2017 ஆம் ஆண்டிற்கான வட்டடியாகவும் பங்கிலாபமாகவும் அதன் அங்கத்தவர்களுக்கு 9% மொத்த வீதத்தினை அறிவிக்க முடிந்தது. இது அரச வங்கிகளினால் அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேமிப்பு வீதங்களுடன் ஒப்பிடுகையில் ஒரு கவர்ச்சிமிகு வீதமாகும்.
- மொத்த வருமானத்தின் வீதமொன்றாக தொழிற்படு செலவினங்கள் 2016 ஆம் ஆண்டின் 7.2% இலிருந்து 2017 ஆம் ஆண்டின் 6.6%இற்கு குறைவடைந்துள்ளது. இது இக்காலப்பிரிவிற்கான தாபனத்தின் மேம்படுத்தப்பட்ட தொழிற்படு வினைத்திறனின் பிரதிபலிப்பாகும்.
- செலுத்தப்படாத பங்களிப்புத் தொகைகள், மிகை அறவீடுகள் மற்றும் சட்ட நிலுவைகள் ஆகியவற்றின்



மீது விசேட கவனஞ் செலுத்தப்பட்டதுடன் இவ்வாண்டினுள் பிராந்திய அலுவலக வலையமைப்பு மற்றும் வவுனியா மற்றும் நுவரெலியா பிரதேசத்தில் 02 புதிய கிளைகள் நிறுவப்பட்டமை தொடர்ந்தும் பயனுறுதிமிக்கதாகத் தொழிற்பட வாய்ப்பை ஏற்படுத்தியது.

- அங்கத்தவர்களுக்கு வினைத்திறன்மின்ன சேவையை வழங்கும் பொருட்டு பரவலாக்கப்பட்ட கோரல்கள் கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம் கம்பஹ, கண்டி, மாத்தறை, பதுளை, குருணாகலை பிராந்திய அலுவலங்கள் ஊடாக வெற்றிகரமாக தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.
- மாதாந்த பங்களிப்புக் கொடுப்பனவுகளை காசோலையினால் தொழில்தருநர்கள் தலைமை அலுவலகத்தில் செலுத்துவதற்கு மேலதிகமாக எமது பிராந்திய அலுவலக வலையமைப்பிலும் நகர அலுவலகம், இலங்கை வங்கியில் எமது சேகரிப்பு அலுவலகத்திலும் கொடுப்பனவுகளை மேற்கொள்ள இயலுமாகியது.
- மீளாய்வுக்குரிய வருடத்திற்குள் "அயிஸா" (ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பரிசோதனை மற்றும் முறை நிர்வாகம்) கருத்திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இந்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முக்கிய நோக்கம் யாதெனில், பங்களிப்புத் தொகை அறவிடல் துறையின் விடயப் பரப்பை விரிவுபடுத்துவதற்காக வெளிக்களப் பரிசோதனைகளை துரிதப்படுத்துவதாகும்.
- இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்தின் (ICTA) நிபுணத்துவ மற்றும் நிதியுதவியுடன் சபையின் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பை மறுசீரமைக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டில் பங்குரிமை முதலீட்டின் மீதான உழைப்பாக ரூ.மில் 552 உடன் ஒப்பிடும் போது பின்தங்கிய சந்தை நிலைமையின் கீழும் அந்த முதலீட்டின் மீது ரூ.மில். 972 ஈட்டிக்கொள்வதற்கு சபைக்கு இயலுமாகியது.

# மைல்கற்கள்

## 1986 முதல் 2017 வரை



**1986**

மரண நலத்திட்டம்:
ரூ.**100,000/=**

**1989**

மரண நலத்திட்டம்:
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்:
ரூ. **200,000/=**





**1991**

மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி :
ரூ. **300,000/=**

**1992**

மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி
கண்பளிங்கு வில்லை செலவிற்கான மீளளித்தல்:
ரூ. **18,000/=**





**1994**

மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி:
கண்பளிங்கு வில்லை செலவிற்கான மீளளித்தல்:
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
ரூ. **15,000/=** –
**9,000** புலமைப்பரிசில்கள்

## 1997

மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி :
கண்பளிங்கு வில்லை செலவிற்கான
மீளளித்தல்
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
“சிரமசுவ ரெக்கவரண”
சிகிச்சையகத் திட்டம்
முழு சேவைக் காலத்தின் போதும்
வருடத்திற்கு ரூபா **25,000/=** வீதம்
கூடியபட்டசம் **50,000** வரை

## 2002

மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி :
கண்பளிங்கு வில்லை செலவிற்கான
மீளளித்தல்:
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்:
“சிரமசுவ ரெக்கவரண”
சிகிச்சையகத் திட்டம்
“வியன” குறைந்த வட்டி வீட்டுக்
கடன் திட்டம்

## 2006

மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி :
கண்பளிங்கு வில்லை செலவிற்கான
மீளளித்தல்:
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்:
“சிரமசுவ ரெக்கவரண”
சிகிச்சையகத் திட்டம்
“வியன” குறைந்த வட்டி வீட்டுக்
கடன் திட்டம்
சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு
நிதியுதவி ரூ. **300,000/=**

## 2010

மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி :
கண்பளிங்கு வில்லை செலவிற்கான
மீளளித்தல்:
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்:
“சிரமசுவ ரெக்கவரண”
சிகிச்சையகத் திட்டம்:
“வியன” வீட்டுக் கடன் திட்டம்:
சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி:
55ஆம் ஆண்டு புலமைப் பரிசில் ரூ. **15,000/=**
(நிரந்தர ஊனமுற்றதன் காரணமாக
பணியிலிருந்து நீங்கிய ETF
அங்கத்தவர்கள்) கபொத (உ/த)
மாணவர்களுக்கான நிதியுதவி ரூ. **12,000/=**

## 2016

2010 ஆம் ஆண்டின்
சகல அடைவுகளும்
மற்றும் கண்பளிங்கு
வில்லை செலவிற்கான
மீளளித்தல்
ரூ. **30,000/=**

# பின்னணிப் பகுப்பாய்வு

## I) SWOT பகுப்பாய்வு

உள் காரணிகள்

**உதவக்கூடிய காரணிகள்**

### பலன்கள் (S)

1. சேகரித்தல், செயற்படுத்துதல், விநியோகத்தல் நடவடிக்கைகளின் போது பாதுகாப்பான மற்றும் சீரான வழிமுறைகள் கையாளப்படல்
2. பலமான நலன் முறைமைகள் காணப்படுகின்றமையால் அங்கத்துவத்திற்கான கவர்ச்சி
3. உயர் திரவத்தன்மை நிலை
4. சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட தனியுரிமை நிலை
5. வருமானம் உருவாக்கும் பெறுமதிமிக்க சொத்து உடைமையாண்மை காணப்படுகின்றமை
6. நிதிய முகாமைத்தவத்திற்கான சுயாதீனம் காணப்படுகின்றமை
7. விரைவான விநியோக வசதிகள் உள்ளமை
8. தக்கவைப்பதற்காக தனிச்சிறப்பு மிக்க பணியாளர் வெகுமதி முறைமை
9. பயனுறுதிமிக்க அமுலாக்கம், சட்டத்தொகுதி மற்றும் வலையமைப்பு உள்ளமை

**தீங்கு விளைவிக்கும் காரணிகள்**

### பலவீனங்கள் (W)

1. பயனுறுதிமிக்க செயற்பாடுகளுக்கான வசதிகளின் பற்றாக்குறை
2. சேகரிப்பிற்கு உள்ளடங்கும் பகுதிகள் போதியளவில் வரையறுக்கப்படவில்லை
3. சொந்த அலுவலக வளாகமொன்று இல்லாமை மற்றும் தற்பொதைய செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான இடவசதிப் பற்றாக்குறை
4. பயனுறுதிமிக்க தீர்மானங்களை எடுப்பதற்கான தரவுகளைப் பெறுவதற்கு பொதிய முறைமைகளின் பற்றாக்குறை
5. தற்போது பயன்பாட்டிலுள்ள காலங்கடந்த கணினி நிகழ்ச்சித்திட்டம் செயன்முறையின் வேகத்திற்கு தடையாகவும் தவறுகளை ஏற்படுத்துவதாகவும் உள்ளது
6. தரவுத்தளம் போதாமை செயற்பாடுகளின் ஊடகத்தில் (விசேடமாக தமிழ் மற்றும் ஆங்கிலம்) சமநிலையற்றதன்மை

வெளிக் காரணிகள்

### வாய்ப்புக்கள் (O)

1. அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் ஒரு மில்லியன் தொழில்களை வழங்குவதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கை
2. தனியார் துறை மற்றும் பகுதி அரசாங்க சம்பள அதிகரிப்பு
3. தொழில் முயற்சியாண்மைக் கலாசாரத்தில் அதிகரிப்பு
4. வெளிநாட்டு முதலீட்டாளர் உட்பாய்ச்சலின் அதிகரிப்பு
5. நுண்நிதிக்கான அதிகரிக்கும் போக்கு
6. தேசிய ஆகக்குறைந்த ஊதியத்தின் அதிகரிப்பு
7. புதிய அரசாங்கத்தின் அபிவிருத்தி உபாயங்கள

### அச்சுறுத்தல்கள் (T)

1. முதலீட்டில் சந்தை இடர்பாடுகள்
2. சந்தையில் உயர் வருவாயைத்தரக்கூடிய முதலீடுகள் இல்லாமை
3. உலகளாவிய முரண்பாடுகள் தற்போதைய போக்கு
4. கடுமையான சுற்றாடல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அதிகரித்த போக்கு
5. ளைப்பாறும் வீதத்தில் அதிகரித்த போக்கு
6. காணப்படும் குறை வட்டி வீதங்கள் காரணமாக குறைந்த பங்கிலாப வீதம்

## II) பொருளாதாரப் போக்குப் பகுப்பாய்வு

மெய் மொ.உ.உ. வளர்ச்சி




Source: CBSL & ADB (Asian Development Outlook 2017)

பணவீக்கம்




Source: Department of Census and Statistics

2016 ஆம் ஆண்டின் காலாண்டுகளுடன் ஒப்பிடும் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2017 ஆம் ஆண்டின் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டில் 3.9% மற்றும் 4% அதிகரிப்பைக் காட்டியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மொத்த வளர்ச்சி வீதம் வருடத்திற்குள் 4.5% ஆக பதிவுசெய்யப்பட்டது. 2013 ஆம் ஆண்டிலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் காணப்பட்ட மந்தமான போக்கு தொடர்ந்தும் நிலவியது. நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக விவசாய உற்பத்தியின் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வழங்கப்படும் பங்களிப்பு மிகவும் பாதிப்பை ஏற்படுத்தியது. அதற்கிணங்க விவசாயத்துறையில் மூடுண்ட நிலை காணப்பட்டதோடு அதற்கு இணைவாக

வட்டி மற்றும் பங்கீடு (பில். ரூ.)




2017 ஆம் ஆண்டு பூராகவும் அனைத்து பங்குச் சந்தை சுட்டியில் மந்தமான வளர்ச்சிப் போக்கொன்று அவதானிக்கப்பட்டது. மூலதனச் சந்தை நடவடிக்கையில் தேறிய வெளிநாட்டுப் பங்களிப்பின் கலந்த உணர்திறன் அவதானிக்கப்பட்டது. அபாயங்களை ஏற்காத முதலீட்டு வாய்ப்புக்களை நோக்கிச் செல்லும் பின்னணியுடன் கூடிய முதலீட்டுக்கான நம்பிக்கை இழப்பு பங்குச் சந்தையில் காணப்பட்ட இந்த மந்தமான அசைவுக்கு ஏதுவாகிய பிரதான காரணியாக அடையாளப்படுத்த முடியும்.

உள்நாட்டு வர்த்தகத்தில் காணப்பபடட பலவீனங்கள் குறைந்தளவிலான வளர்ச்சிப் போக்கொன்றை பதிவுசெய்தது. ஒவ்வொரு வருடத்திலும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெணில் காணப்படும் வித்தியாசத்திற்கு அமைய சுழற்சி முறையிலான அசைவுப் போக்கொன்று அவதானிக்கப்பட்டது. உணவுப் பண்டங்களில் வருடாந்தம் நிகழும் பணவீக்கம் ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையிலும் ஜூலை முதல் செப்டம்பர் வரையிலும் அதிகரித்து காணப்பட்டது. உணவுப் பண்டமல்லாத பொருட்களில் சிறிதளவு ஏற்றஇறக்கத்துடன் வீழ்ச்சிப் போக்கொன்று வருடம் முழுவதும் அவதானிக்கப்பட்டது.

கொமர்ஷல் வங்கிக்கடன் மற்றும் வைப்பு விகிதம்




வணிக வங்கிகளினால் வழங்கப்படும் சராசரி கடன் வழங்கும் வீதங்களிலும் சராசரி வைப்பு வீதங்களிலும் அதிகரித்த போக்கொன்று அவதானிக்கப்பட்டது. கடன் தருனர் மற்றும் கடன்படுநர்களுக்கிடையில் அதிகரிக்கும் பணவீக்கம் தொடர்பில் பரிமாற்ற அனுமானங்கள் மற்றும் கேள்வி நிரம்பல் எனும் சக்திகளினால் முடிவுசெய்யப்படும் வீதங்கள் போன்ற நிதியங்களின் மீது தடைகள் உள்ளடக்கப்பட்ட கடன்களுக்கான கேள்வியின் அதிகரிப்பும் அவ்வாறே ஒவ்வொரு கடனாளியினதும் செலவை அதிகரிக்கும் புறக்கணிப்புச் செய்யப்படும் போது ஏற்படும் அதற்கெதிரான கொடுப்பனவுகளும் அதற்கு எதிர் எல்லையான சந்தையில் காணப்படும் கடன் பெறுமானங்களின் நிச்சயமற்ற தன்மையும் வட்டி வீதங்களை தீர்மானிக்கின்ற போது அரசின் தலையீடும் இந்த துரித அதிகரிப்புக்கு காரணமாக இருக்கலாம்.

2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட திறைசேரி உண்டியல்களின் வீதங்களில் அதிகரிப்பினது வீழ்ச்சிப் போக்கின் பின்னர் 2017 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்திலிருந்து அதன் உச்சத்தை நோக்கி அண்மித்துள்ளது. ஏதேனுமொரு பொருளாதாரம் மந்தமான வளர்ச்சியை கொண்டுள்ள போது திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணைமுறிகள் போன்ற குறைந்த அபாயமுள்ள மூதலீடுகளை நோக்கி முதலீட்டாளர்கள் கவரப்படும் போக்கொன்று காணப்படும். அதன் பெறுபேறாக அரசாங்க பிணையங்களின் முகப்பெறுமதி அதிகரிப்பதோடு அதன் மூலம் பிறப்பிக்கப்படும் நலன்களில் குறைவான போக்கொன்று அவதானிக்கப்படும். மேலும், குறைந்த பணவீக்க நிலமையில் திறைசேரி உண்டியல்களின் விலைகளில் அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட போதிலும் அதன் மூலம் கிடைக்கும் நலனில் மீண்டும் குறைவு ஏற்படலாம்.

டீ - பில் விகிதங்கள்




திறைசேரி பிணைமுறி வீதம் (%) - வருடாந்த சராசரி திறைசேரி உண்டியல் வீதத்தின் மீது பெறுமதி தங்கியுள்ளது.

| | 2 ஆம் வருடம் | 3 ஆம் வருடம் | 4 ஆம் வருடம் | 5 ஆம் வருடம் | 6 ஆம் வருடம் | 7 ஆம் வருடம் | 8 ஆம் வருடம் | 9 ஆம் வருடம் | 10 ஆம் வருடம் | 12 ஆம் வருடம் | 15 ஆம் வருடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2012 | 11.29 | 11.77 | 11.57 | 12.75 | 11.84 | 12.50 | 14.40 | - | 12.50 | - | - |
| 2013 | - | 10.93 | - | 11.01 | 10.97 | - | 11.57 | 11.77 | 11.78 | 12.12 | 12.14 |
| 2014 | - | - | - | 8.79 | - | - | 8.58 | - | 9.23 | | 10.18 |
| 2015 | 7.42 | 8.03 | 8.80 | 8.88 | 9.37 | 8.81 | 9.69 | - | 9.68 | 10.77 | 10.49 |
| 2016 | 11.11 | 11.61 | 11.84 | 12.05 | 12.01 | 12.18 | 12.07 | 13.11 | 12.19 | 13.72 | 12.41 |
| **2017** | **10.90** | **-** | **11.48** | **11.51** | **11.36** | **12.78** | **11.22** | **12.91** | **11.05** | **-** | **-** |

வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிரான ரூபா மாற்றம்




வரைபின் மூலம் எடுத்துக்காட்டப்படும் வெளிநாட்டு நாணயப் பயன்பாட்டுடன் ஒப்பிடும் போது இலங்கை ரூபாயின் பெறுமதி துரிதமாக குறைந்து செல்லும் போக்கொன்று அவதானிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் என்ற ரீதியில் இப் போக்கானது நாட்டின் சென்மதி நிலுவை மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகள் மீது நேரடி பாதிப்பை ஏற்படுத்தலாம். ஆயினும், இலங்கையின் ரூபா மதிப்பிழக்கும் போது சர்வதேச சந்தையில் உள்நாட்டு ஏற்றுமதிகளுக்கு குறைந்த பெறுமதியே கிடைக்கின்றது. இதன் மூலம் நாட்டுக்கு கிடைக்கக்கூடிய நலன்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான கேள்வியில் காணப்படும் நெகிழ்ச்சியின் ஊடாகவே குறிப்பாக கணக்கிட முடியும். மேலும், சுற்றுலா கைத்தொழில் போன்ற வியாபார முயற்சிகள் உள்நாட்டு பயன்பாட்டு நாணயத்தின் பெறுமதி குறைவடையும் போது அதன் மூலம் நன்மை கிடைக்கும்.

கடந்த தசாப்த காலத்தில் மத்திய அரசாங்கத்தின் கடனிறுத்தல் நிலமையை கருத்திற்கொள்ளும் போது அதில் குறிப்பிட்டளவு அதிகரிப்பு அவதானிக்கப்படுகின்றது.

மத்திய அரசுக் கடன் கலவை




அரசு கடன் சேவை கொடுப்பனவுகளின் தொகுப்பு



அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்களின் பயன்பாட்டு நாணய அமைப்பு **(%)**

| பயன்பாட்டு நாணயம் | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விசேட உள்ளீட்டு உரிமைகள் | 38.3 | 36.7 | 44.6 | 28.3 | 25.8 | 24.6 | 24 | 22.7 | 20.7 | 18.7 |
| அமெரிக்க டொலர் | 20.1 | 19.4 | 26 | 23.5 | 29.1 | 30.9 | 34.1 | 52.5 | 48.9 | 54.6 |
| ஜப்பான் யென் | 25.5 | 30.8 | 35.6 | 25.1 | 24.1 | 20.8 | 16.4 | 14.4 | 13.3 | 12.3 |
| யூரோ | 9.2 | 9.1 | 11.3 | 7 | 6.3 | 6.3 | 6.3 | 5.6 | 5.1 | 4.5 |
| வேறு | 6.9 | 4.1 | 20.9 | 16 | 14.7 | 17.4 | 19.2 | 4.8 | 12 | 9.9 |
| மொத்தம் | 100 | 100 | 138.5 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| மொத்த வெளிநாட்டுக் கடன் (இலங்கை ரூ. பில்.) | 1,327 | 1,449 | 1,761 | 2,025 | 2,329 | 2,767 | 2,96 | 3,113 | 3,544 | 4,046 |

*Source: Ministry of Finance*

வியாபாரங்களை மேற்கொள்ளும் வசதிக்காக தரப்படுத்தல்

| | இலங்கை | ஆப்கானிஸ்தான் | வங்காள தேசம் | பூட்டான் | இந்தியா | மாலைத்தீவு | நேபாளம் | பாகிஸ்தான் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த தரப்படுத்தல் | 110 | 183 | 176 | 73 | 130 | 135 | 107 | 144 |
| வியாபாரமொன்றை ஆரம்பித்தல் | 74 | 42 | 122 | 94 | 155 | 65 | 109 | 141 |
| நிர்மாண அனுமதி மற்றும் செயற்படுத்தல் | 88 | 186 | 138 | 97 | 185 | 62 | 123 | 150 |
| மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளல் | 86 | 159 | 187 | 54 | 26 | 145 | 131 | 170 |
| ஆதனங்களை பதிவுசெய்தல் | 155 | 186 | 185 | 51 | 138 | 172 | 72 | 169 |
| கடன் பெற்றுக்கொள்ளல் | 118 | 101 | 157 | 82 | 44 | 133 | 139 | 82 |
| சிறு முதலீட்டாளர்களை பாதுகாத்தல் | 42 | 189 | 70 | 27 | 13 | 123 | 63 | 27 |
| வரி செலுத்தல் | 158 | 163 | 151 | 109 | 172 | 134 | 142 | 156 |
| நாட்டு எல்லைகளினூடாக வர்த்தகம் | 90 | 175 | 173 | 56 | 143 | 147 | 69 | 172 |
| ஒப்பந்தங்களை அமுலாக்கல் | 163 | 180 | 189 | 51 | 172 | 105 | 152 | 157 |
| வங்குரோத்து நிலைக்கான தீர்வு | 75 | 159 | 151 | 23 | 136 | 135 | 89 | 85 |

*Source: CBSL & World Bank - http://www.doingbusiness.org*

"இலங்கையில் வியாபாரங்களை ஆமற்கொள்வதற்கான வசதி" சார்க் வலயத்தின் அதன் அங்கத்துவ நாடுகளுடன் ஒப்பிட்டு மேலே அட்டவணையில் தரப்பட்டுள்ளது. இலங்கையின் வர்த்தக நகரமான கொழும்பை அண்டிய பிரதேசத்தை உள்ளடக்கி பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில் ஏற்புடைய தரப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டளவில் சார்க் நாடுகளுக்கிடையில் மூன்றாவது இடம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. புதிதாக விநியோகிக்கப்பட்ட பங்குகள் மீதான முத்திரைக் கட்டணத்தை நீக்கியதன் மூலமும் "தொடர்புற்ற தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களுக்கு" ஏற்புடைய தேவைப்பாடுகளுக்கு அமைய சிறு முதலீட்டாளர்களை பாதுகாப்பதற்காக இனம்காணப்பட வேண்டுமென்றும் பூர்வாங்க பதிவுகளின் முறைமையை சரளமான முறையில் மேற்கொள்வதற்கும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இலங்கை குறித்த சாதகமான விடயங்களாக குறிப்பிட முடியும்.

| வருடம் | வியாபாரம் மேற்கொள்வதற்கான தரம் | வருடம் | வியாபாரம் மேற்கொள்வதற்கான தரம் | வருடம் | வியாபாரம் மேற்கொள்வதற்கான தரம் | வருடம் | வியாபாரம் மேற்கொள்வதற்கான தரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2010 | 105 | 2012 | 89 | 2014 | 85 | 2016 | 107 |
| 2011 | 98 | 2013 | 81 | 2015 | 99 | 2017 | 110 |

ஆயினும் இலங்கை அடைந்துகொண்டுள்ள நிலமை 2013 ஆம் ஆண்டிலிருந்து கீழ் நோக்கிச் செல்வதை அவதானிக்க முடியும். 2017 ஆம் ஆண்டு 190 நாடுகளை அடிப்படையாகக் கொண்டு தரப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. ஒரு நாட்டினது

வெளிநாட்டு நேரடி முதலீடு (நிகர உட்பாய்ச்சல்கள்)




*Source: Ministry of Finance, World Bank (IAB Report), www.ceicdata.com and tradingeconomics.com*

நேரடி முதலீடு மற்றும் பொருளாதார வளர்ச்சி வீதத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்புள்ளது. மிகவும் பயனுறுதிமிக்க முதலீட்டு வாய்ப்புக்களை கவருவதற்கு முதலீட்டுக்கு உகந்த சூழல் நாட்டில் நிலவுதல் வேண்டும். 2017 ஆம் ஆண்டில் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட நேரடி முதலீகளில் 35ஸ சீனாவிடமிருந்து பெறப்பட்டதாகும். உலக வங்கியின் இடைதொடர்பு அமுலாக்கல் பிரச்சார பணியகத்தின் அறிக்கைக்கு அமைய வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் இலங்கையில் காணப்படும் உள்ளக கட்டுப்பாடுகள் நாட்டினுள் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் உட்பாய்வதை பலவீனப்படுத்தியுள்ளன.



02

# தாபன நிர்வாகம்

# பணிப்பாளர் சபை
# (2017)

**திரு. மஹிந்த மடிஹஹேவா**
தவிசாளர்/ பி.நி. அதிகாரி
அபிவிருத்திப் பணிகள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. பீ.பி. மெதகெதர**
செயற்பாட்டுப் பணிப்பாளர்
அபிவிருத்திப் பணிகள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. கே.எஸ். குருகுலசிங்க**
பணிப்பாளர்
அபிவிருத்திப் பணிகள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. ஜூட் டினால் பீரிஸ்**
பணிப்பாளர்
அபிவிருத்திப் பணிகள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. டப்ளியூ.எம்.கே.எல். வீரசிங்க**
பணிப்பாளர்
இலங்கை தொழில் வழங்குநர் பேரவையின் பிரதிநிதி

**திருமதி. சம்பா பாலசூரிய**
பணிப்பாளர்
நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திருமதி. சீதா சேனாரத்ன**
பணிப்பாளர்
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. பீ. ரணவக்கஆரச்சி**
பணிப்பாளர்
தொழிற்சங்கப் பிரதிநிதி

**திரு. எல்.எஸ். தேவேந்திர**
பணிப்பாளர்
தொழிற்சங்கப் பிரதிநிதி

**திரு. எச்.எம்.ஏ.ஜே. குமார**
சபைச் செயலாளர்

## சிரேஷ்ட முகாமைத்துவம்

**தவிசாளர்/ பி.நி. அதிகாரி**
திரு. மஹிந்த மடிஹஹேவா

**செயற்பாட்டுப் பணிப்பாளர்**
திரு.பீ.பி. மெதகெதர

**மேலதிகப் பொது முகாமையாளர்**
திருமதி. ஆர்.என். ஞாணசேகர

## பிரதிப் பொது முகாமையாளர்கள்

| | |
|---|---|
| திரு. டப்ளியூ.எஸ். திசாநாயக்க | (அங்கத்தவர் சேவைகள்) |
| திரு. எல்.எச். நிஹால் | (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்) |
| திரு. கே.எஸ். வெலிவிட்ட | (உள்ளகக் கணக்காய்வு) |
| திரு. என்.டப்ளியூ. விமலவீர | (நிதி) |
| திரு. ஏ.ஜே.எம்.எஸ். ஜயசுந்தர | (சேகரிப்பு மற்றும் தொழில் தருநர் தொடர்புகள்) |
| திரு. உதய விக்கிரமசிங்க | (முதலீடுகள்) |

## உதவிப் பொது முகாமையாளர்கள்

| | |
|---|---|
| திரு. சீ.மல்லிகாரச்சி | (அங்கத்தவர் கணக்குகள்) |
| திரு. எச்.எம். செனெவிரத்ன | (அங்கத்தவர் சேவைகள்) |
| திரு. எம்.எஸ். திசாநாயக்க | (சுய தொழில்) |
| திரு. எம்.ஏ.கே. அளுத்கமகே | (நிதி) |
| திருமதி. எச்.ஏ.வை.ஆர். பெர்னாண்டோ | (பங்களிப்பு சேகரித்தல்) |
| திரு. டப்ளியூ.எஸ். தர்மசிறி | (தகவல் தொழில்நுட்பம்) |
| திருமதி. ஆர்.ஏ.எஸ். ரூப்பசிங்க | (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்) |
| திரு. ஜே.கே.பீ. ரஞ்சித் | (செயற்படுத்தல் - பிராந்தியம் 1) |
| திரு. பி.ஆர். ஆரியவன்ச | (செயற்படுத்தல் - பிராந்தியம் 11) |
| திரு. டபிள்யு. ஜினதாஸ | (புள்ளி விபரம்) |
| திருமதி. எஸ்.ராஜபதிரண | (சட்டம் / பதில் கடமை) |
| திரு. டபிள்யு.ஆர்.எல். டி சில்வா | (பெறுகை / பதில் கடமை) |

# தவிசாளரின் மீளாய்வு

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை முன்வைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் நாட்டின் இரண்டாவது பாரிய சமூகப் பாதுகாப்பு நிதியமாகக் காணப்படுகின்றது. தனியார் துறை அதே போன்று அரச சார்பு துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்குவது மற்றும் ஏனைய விடயங்களை நோக்காகக் கொண்டு 1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதயச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை தனது செயற்பாடுகளை 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் திகதி ஆரம்பித்தது. அதன் பின்னர் சுயதொழிலாளர்கள் மற்றும் இடம்பெயர்ந்து தொழில்புரிபவர்கள் நிதியத்திற்குள் உள்வாங்கப்பட்டு நிதியத்தின் பரப்பு மேலும் வரிவுபடுத்தப்பட்டது. நிதியத்தின்  அங்கத்தவர்கள் தமது அங்கத்துவ கணக்கில் காணப்படும் மீதியின் அடிப்படையில் வருடாந்த வட்டி மற்றும் பங்கிலாபத்தைப் பெற்றுக்கொள்வதோடு, அதற்கு மேலதிகமாக, கல்வி சுகாதாரம் மற்றும் வீடமைப்பு துறைகளை உள்ளடக்கிய 10 விதமான நலன்கள் இந்த நிதியத்தின் மூலம் வழங்கப்படுகின்றது.

இந்த வருடத்தினுள் நாட்டின் பொருளாதாரம் முகம்கொடுக்க நேரிட்ட பேரின பொருளாதார சவால்கள் பலவற்றுக்கு மத்தியிலும் நிதியம் 2017 ஆம் ஆண்டு  சிறந்த செயலாற்றுகையை பேணி வந்துள்ளது. ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை தனது நிறுவனத் திட்டத்தில் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ளவாறு வருடத்தினுள் பல்வேறுபட்ட மூலோபாய திட்டங்களுக்கு காலடி எடுத்து வைத்து தனது செயலாற்றுகையை உரிய முறையில் அளவிடுவதற்கும் தனது தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் எல்லைகளை பரீட்சிக்கும் பொருட்டும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தள்ளது.

மீளாய்வுக்குரிய வருடத்தில் நிதியத்திற்குரிய தேறிய சொத்துக்களின் பெறுமதி 278 பில்லியன் ரூபாவை நெருங்கியுள்ளதோடு மொத்த சொத்துக்களின் அளவு 29 பில்லியன் ரூபா என  அறிக்கையிடப்பட்டுள்ளது. அது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது இலாபம் வீதம் நூற்றுக்கு 18 வீதம் அதிகரித்துள்ளது. இங்கு உண்மையில் அதற்குரிய காரணம் முதலீடுகள் மீதான உருவாக்கம் நூற்றுக்கு 9.8 வீதம் வெற்றிகரமான  இலாப வீதத்தை உழைத்துள்ளமையாகும். விசேடமான இந்த வரவேற்கத்தக்க விளைப்பயன், நிலவிய மந்தமான பங்குச் சந்தையின் கீழும் பெற்றுக்கொள்ள முடிந்ததையிட்டு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் வலுவான நிதிய முகாமைத்துவம் மற்றும் முதலீட்டுப் பரீட்சியத்தை எடுத்துக்காட்டுகின்றது. ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் தனது மேலதிக நிதியங்களை ஆரம்பமாக அரசாங்க பிணையப் பத்திரங்களில் முதலீடு செய்வதோடு பங்குச் சந்தை பங்குகளிலும் முதலீடு செய்கின்றது. அத்தோடு, நிறுவனத்தின் கடன் செயலாற்றுகை பத்திரங்களில் முதலீடு செய்வதோடு பல்வேறுபட்ட தொடர்ச்சியான தொழிற்பாட்டு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. நாட்டின் பிரதான ஓய்வூதியப் பணிக்கொடை நிதியங்களில் ஒன்றாக அடிக்கடி நிதிச் சந்தையில் காணப்படும் தளம்பல்களுக்கு மத்தியிலும் தனது அங்கத்தவர்களுக்கு வருடாந்தம்  நிலையான வட்டி வீதத்தை செலுத்துவதற்கு சபைக்கு இயலுமாகியுள்ளது.

மீளாய்வுக்குரிய வருடத்தில் நிதியத்தின் அங்கத்துவம் 12.6 மில்லியன் என அறிக்கையிடப்பட்டுள்ளது.  அதில் 2.6 மில்லியன் அளவு தற்போது செயலூக்க நிலையில் காணப்படுகின்றது. ஏற்புடைய காலப்பகுதியல் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சமூகத்தின் அளவு 81’515 ஆக அறிக்கையிடப்பட்டுள்ளது. நிதியத்திற்கு அனுப்பப்படும் மொத்த பணங்களின் அளவு 22.7 பில்லியன் ஆகும். அது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது நூற்றுக்கு 12 வீத விருத்தியாகும். அங்கத்துவ கணக்குகள் செயலூக்கமுள்ளதாக காணப்படுகின்றனவா அல்லது செயலூக்கமற்று காணப்படுகின்றனவா என்பதை கருத்திற் கொள்ளாது முழுமொத்த அங்கத்துவ நிதியத்தின் மீது நூற்றுக்கு 09% உழைப்பு வீதத்தை  வெளியிடுவதற்கு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபைக்கு முடியுமாகியுள்ளது. ஒரே காலப்பகுதியில் நிறுவனங்களினால் வழங்கப்படும் உழைப்புடன் ஒப்பிடும் போது இந்த உழைப்பு கவர்ச்சிமிக்கதாகவும் அதேபோன்று உறுதிப்படுத்தப்பட்ட உச்ச பாதுகாப்பையும் இது எடுத்துக்காட்டுகின்றது.

வியாபார உபாய முறைகளாக சுயதொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் குடிபெயர்ந்து தொழிற்படக்கூடிய அங்கத்தவர்களின் பங்களிப்பை மேலும் வரிவுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் தற்போதுள்ள போக்குகள் மற்றும் அதன் பெறுபேறுகள் அடிப்படையில் அங்கத்துவ நிதி மீள் அளிப்புக்களின் அதிகரிப்பினையும் கருத்திற்கொண்டு நிதியத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்

## மீளாய்வுக்குரிய வருடத்தில் நிதியத்தின் அங்கத்துவம் 12.6 மில்லியன் என அறிக்கையிடப்பட்டுள்ளது. அதில் 2.6 மில்லியன் அளவு தற்போது செயலூக்க நிலையில் காணப்படுகின்றது.

சபை தனது நிதிய முகாமைத்துவ மூலோபாய வழிமுறைகளில் பொறுத்தமான மாற்றங்களையும் செய்துள்ளது.

மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழில்நுட்ப உதவியுடன் மற்றும் நிதி அமைச்சின் நிதியுதவியுடன் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பரீட்சிப்பு செயன்முறையின் வினைத்திறனை விருத்திசெய்தவதற்காகவும் தொழில் வழங்குனர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகிய இரு தரப்பினர்களையும் உள்ளடக்கிய வகையில் விரிவாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் பரீட்சிப்பு கட்டமைப்பு உள்ளீடு (EISA) என புதியதொரு கருத் திட்டத்தை ஆரம்பித்தள்ளது.

வவுனியா மற்றும் நுவரெலியா நகரங்களில் புதிதாக கிளை அலுவலகங்கள் இரண்டு ஆரம்பிக்கப்பட்டு சபையின் கிளை அலுவலக வலையமைப்பு மேலும் விரிவுபடுத்தப்பட்டது. சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட 6 வங்கிகளின் ஊடாக பணம் அனுப்புவதற்கும் தனது அறிக்கைகளை சபைக்கு இணையத்தளத்தின் ஊடாக தொடர்றா முறையில் அனுப்புவதற்கும் தொழில் வழங்குனர்களுக்கு வசதியளிக்கப்பட்டது. மேலும் தற்போது காணப்படும் தொழில்வழங்குனர் மையப்படுத்திய முறையை அங்கத்தவர் (தொழிலாளர்) மையப்படுத்திய முறையாக மாற்றுவதற்கும் பொது சமூக பாதுகாப்பு திட்டமுறையில் உள்ளடங்கும் சகல அங்கத்தவர்களுக்கும் ஒப்பற்ற முறையொன்றை பரீட்சித்துக் கொள்வதற்காக தேசிய அடையாள அட்டை இலக்கத்தை பொதுவாக செல்லுபடியாக்குவதனை நோக்காகக் கொண்டு ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் தொழில் திணைக்களத்துடன் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் புதிதாக ஏற்படுத்திய மாற்றங்களில் நிருவாக மற்றும் நிதிய முகாமைத்துவ கட்டமைப்பிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட மற்றும் தனது சேவையை மிகவும் வினைத்திறனுடன் மற்றும் விளைபயனுடன் வழங்குவதற்காக தமது செயற்பாட்டு நடவடிக்கைகள் அனைத்தையும் தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தும் பூரணமுறையொன்றை நோக்கி கொண்டு செல்வதற்கு நடவடிக்கையெடுத்தள்ளது. தற்போது இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA) நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் சபையின் தகவல் தொழில்நுட்பப் பிரிவை மறுசீரமைப்பதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கில மொத்த நிருவாக கட்டமைப்பிலும் ஏனைய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதோடு, ஆளணியினரிடமுள்ள திறமைகளை விருத்தி செய்துகொள்வதற்காக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் தனது கவனத்தை செலுத்தியுள்ளது. இந்த விடயத்தை பொறுத்த வரையில் வெளிநாட்டு வளத் திணைக்ளம் மற்றும் வேறு உதவி வழங்கும் முகவராண்மை நிதியங்களின் உதவியையும் பெற்றுக்கொண்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தேவையான அறிவு ரீதியான மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கும் வசதியளிக்கப்பட்டுள்ளது.

மொத்தமாக நோக்குகின்ற போது 2017 ஆம் ஆண்டு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் அடைந்து கொண்ட சகல வெற்றிகளுக்கும் பணிப்பாளர் சபை மற்றும் நிதியத்தின் ஊழியர்களது சேவைக்கான அர்ப்பணிப்பு மற்றும் சேவை மீதுள்ள பற்று என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றது. இங்கு அவர்களது ஒப்பற்ற பங்களிப்பு தொடர்பில் மிகவும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தை நாட்டின் முக்கிய சமூக பாதுகாப்பு நிறுவனமாக பரிணமிப்பதற்கு அவர்களது செயலூக்கமுள்ள பங்களிப்பை எதிர்காலத்திலும் நான் எதிர்பார்க்கின்றேன்.

இறுதியாக எங்களுடைய சகல செயற்பாடுகளிலும் எங்களுக்கு தலைமைத்துவத்தையும் வழிகாட்டலையும் வழங்கிய அபிவிருத்திப் பணிகள் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ திலக் மாரப்பண அவர்களுக்கும் எமக்கு பின்னணியாக நின்று ஒத்துழைப்பு வழங்கிய அமைச்சின் செயலாளர் தர்சன சேனாநாயக்க அவர்களுக்கும் அவர்களது ஆளணியினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மஹிந்த மடிஹஹேவா
தவிசாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

# பணிப்பாளர் சபையின் மீளாய்வு

2017 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் மற்றும் அந்நிதிசார் கூற்றுக்களுக்கான கணக்காய்வாளர்களின் அறிக்கை ஆகியவற்றுடனான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய 37 ஆவது வருடாந்த அறிக்கையை முன்வைப்பதில் பணிப்பாளர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். இது நற்பரிபாலனத்திற்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிடல் தேவைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்குவதாக உள்ளது.

## நிதி அறிக்கையிடல் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புடைமை

நிறுவனத்தின் நிதிசார் நிலைமை மற்றும் செயலாற்றுகையின் உண்மைத்தன்மை மற்றும் நியாயமான நோக்கினைப் பிரதிபலிக்கும் நுவுகு இன் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்களாவர். 170 முதல் 204 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள வருமானக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, உரிமையாண்மையில் மாற்றங்கள் கூற்று, பணப்பாயச்சல்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் என்பன 1995 இன் 16 ஆவது இலக்க இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியதிகள் சட்டத்தினால் கட்டளையிடப்பட்டுள்ளவாறு இலங்கை கணக்கீட்டு நியதிகள் மற்றும் தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. மேற்கண்டவற்றின் அடிப்படையில் பணிப்பாளர் சபையானது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி அறிக்கையிடல் முறைமை இலங்கை கணக்கீட்டு நியதிகள் மற்றும் நியதிச்சட்ட வழிகாட்டல்களின் பிரகாரம் நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை மற்றும் வெளிவாரி நோக்கங்களுக்கான நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு செய்யப்பட்டுள்ளன என்பது தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தினை வழங்குவதை உறுதிப்படுத்துகின்றது.

## பிரதான செயற்பாடுகளின் மீளாய்வு

பங்களிப்புத் தொகை சேகரிப்பு நடவடிக்கைகள், தொழில் வழங்குநர் தொடர்புகள், அங்கத்தவர் சேவை நடவடிக்கைகள் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகள் என்பன சபைக்குரிய பிரதான செயற்பாடுகளாக கருதப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டின் சபையினது பிரதான செயற்பாடுகள் பற்றிய மீளாய்வு பின்வருமாறு.

## பங்களிப்புத் தொகை சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள்

2017 ஆம் ஆண்டில் மொத்தம் 7,639 புதிய தொழில்தருநர்கள் அவர்களது பங்களிப்புக்களை நிதியத்திற்கு வழங்கினர். அவ்வாறே 2017 ஆம் ஆண்டின் போது தொழில் வழங்குநர்களிடமிருந்து அவர்களது ஊழியர்களின் சார்பாக பெறப்பட்ட மொத்த பங்களிப்புக்கள் 2016 ஆம் ஆண்டின் 20.3 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டு அது 22.7 பில்லியன் ரூபாவாக இருந்தது. மேலும், மீளாய்வாண்டின் இறுதியின் போது அங்கத்தவர் நிதியத்தின் பெறுமதி 245.6 பில்லியன் ரூபாவிலிருந்து 274 பில்லியன் ரூபா வரை அதிகரித்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பிராந்திய அலுவலகங்கள் 19 ஊடாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பெறுபேறுகளின் பிரகாரம் தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கை 81,515 வரை அதிகரித்திருந்தது. அதற்கு ஏற்புடைய தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் சபையின் தகவல் தொழில்நுட்ப வலையமைப்பின் ஊடாக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. அதற்கிணங்க, 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட பங்களிப்புத் தொகைகளின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டை விஞ்சி ரூ. மில். 2,446 ஆக அதிகரித்திருந்தது.

இணையத்தளத்தினூடாக தொடரறா முறையிலான வங்கிச் சேவைகள் ஊடாக பணம் செலுத்துதல் மற்றும் அங்கத்தவர் தகவல்களை அனுப்பும் நடவடிக்கைகள் வர்த்தக வங்கிகள், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, சம்பத் வங்கி, ஹற்றன் நெசனல்



வங்கி மற்றும் தேசிய அபிவிருத்தி வங்கி ஆகிய வங்கிகள் ஊடாக வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது. அதன் மூலம் சேகரிக்கப்பட்ட பங்களிப்புத் தொகைகள் மொத்த பங்களிப்புத் தொகை சேகரிப்பில் 50% ஐ நெருங்கியது. அத்தோடு இணக்கப்பாட்டை தெரிவிக்கும் வீதம் 2017 ஆம் ஆண்டில் 75% வரை கொண்டு செல்வதற்கு நிறுவனத்திற்கு இயலுமாகியது.

பிராந்திய அலுவலகங்கள் ஊடாக தொடர்ச்சியான அடிப்படையில் செயற்படுத்தப்பட்ட அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த சாதகமான நிலையைப் பேணுவதற்கு பாரிய ஒத்துழைப்பு வழங்கின. பங்களிப்புத் தொகை சேகரிப்பு எல்லையை விரிவுபடுத்துவதற்கு தேவையான களப் பரிசோதனைகளை துரிதப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் பற்றி குறிப்பிடும் போது மீளாய்வுக்குரிய வருடத்தில் 'அசிசா/EISA' (ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பரிசோதனை கட்டமைப்புக் கட்டுப்பாடு) கருத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது.

## அங்கத்துவ சேவைகள்

### அங்கத்தவர் நலன்கள் மற்றும் நலன்புரி நலன்கள்

ஆண்டின் போது, 179,176 மீளளிப்புக் கோரல்கள் முறைவழியாக்கப்பட்டதுடன் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையானது 16.8 பில்லியன் ரூபாவாக இருந்தது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 171,801 கோரல்கள் முறைவழிாக்கப்பட்டு 12.5 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டிருந்தது. இவ்வருடத்தில் கோரல் ஒன்றிற்கான சராசரி கொடுப்பனவுத் தொகை கடந்த வருடத்தின் 78,451 ரூபாவிலிருந்து 93,983 ரூபா வரை அதிகரித்தது. 2017 ஆம் ஆண்டின் போது, 3,302 நலன் கோரல்கள் முறைவழியாக்கப்பட்டு 280 மில்லியன் ரூபா செலுத்தபட்டு இருந்தது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொது 3,654 கோரல்கள் முறைவழியாக்கப்பட்டு 299 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டு இருந்தது. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு 2017 ஆம் ஆண்டில் 299 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த நுவுகு அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு அவர்களது உயர் கல்விக்கு உதவும் வழியாக 36 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டது.

### அங்கத்தவர் கணக்குகளைப் பேணுதல்

வருட இறுதியில், நிதியத்துக்கு பங்களிக்கும் செயற்படு மற்றும் செயற்பாடற்ற அங்கத்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஏறக்குறைய 12.6 மில்லியனை எட்டியுள்ளது. நிதியம் அனைத்து செயற்படு மற்றும் செயற்பாடற்ற அங்கத்தவர் கணக்குகளையும் பேணி வருகின்றது. 2017 ஆம் ஆண்டு வரை வருட இறுதியில் 96மூ அங்கத்தவர் கணக்குகள் இற்றைப்படுத்தப்பட்டன. இக்கணக்குகளில் 10 மில்லியன் செயற்பாடற்றவையாகவும் 2.6 மில்லியன் அங்கத்தவர் கணக்குகள் செயற்படுபவையாகவும் உள்ளதுடன் அவற்றிற்கான வருடாந்த அங்கத்தவர் கூற்றுக்கள் இவ்வருடத்தின் பொது உரிய தொழில் வழங்குநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### முதலீடுகள்

கடந்த வருடத்தை விட 2017 ஆம் ஆண்டில் 11.5மூஅதிகரிப்பைக் கொண்டதாக, முதலீட்டுக் தொகை235 பில்லியன் ரூபாவிலிருந்து 262 பில்லியன் ரூபா வரையில் அதிகரித்துள்ளது.2017 ஆம் ஆண்டில் சபை முதலீட்டுக் கொள்கையின் வழிகாட்டல்களை கடுமையாகக் கடைப்பிடித்து, மூலதனத்தைப் பாதுகாத்துக் கொண்ட அதேவேளை, நியாயமானதொரு வருவாயையும் பெற்றுக் கொண்டது. முதலீட்டுக் கலவையின் பெரும் பகுதியான ரூபா 205 பில்லியன் (78%) அரசாங்கப் பிணைகளில் முதலீடு செய்யப்பட்டதுடன்,ரூபா 2.0 பில்லியன் (0.7%) அரச உத்தரவாதமளிக்கப்பட்ட நிலையான வருமானக் கருவிகளிலும் ரூபா 10.8 பில்லியன் (4.1%) உரிமைப் பங்குகளிலும் ரூபா 44.2 பில்லியன் (16.8%) ஏனைய முதலீடுகளிலும் முதலீடு செய்யப்பட்டன. சபை 2017 ஆம் ஆண்டு மூலதன இலாபம் மற்றும் பங்கிலாபமாக பங்கு உரிமை கலவையில் ரூ.மில். 908 ஐ உழைத்துள்ளது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் மொத்த முதலீட்டு வருமானம் ரூ.பில். 28 உழைக்கப்பட்டிருந்தது. அது 2016 ஆம் ஆண்டின் அடையப்பெற்ற ரூ.பில் 24 உடன் ஒப்பிடும் போது 4 பில்லியன் ரூபா அதாவது 17% அதிகரிப்பாகும்.

பணிப்பாளர் சபையின் சார்பாக தவிசாளரினால் கையொப்பமிடப்பட்டது.

**திரு. மஹிந்த மடிஹஹேவா**
தவிசாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி

# ஆளுகை அறிக்கை

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அரசாங்க நிறுவனமாக இருக்கும் நிலையில், எல்லா நியிதிச்சட்ட மற்றும் ஒழுங்குமுறை ரீதியான தேவைகளுக்கும் இணங்கக் கூடிய உறுதியான ஆளுகை நடைமுறைகள் ஊடாக அங்கத்தவர்களுக்கு உயர் பெறுமானத்தை உருவாக்குவதைஅடிப்படையாகக்கொண்டுசெயற்படுகின்றது. சபையின் செயற்பர்டுகளின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு வெளிப்படைத்தன்மையினை மிக உயர்ந்த தரத்திற்கு கடைபிடித்தல், நம்பகத்தன்மை மற்றும் இணங்கி ஒழுகுதல் என்பன நன்கு நிறுவப்பட்ட வழிகாட்டல் நெறிமுறைகளாகும். இந்த அறிக்கையானது தாபன ஆளுகையின் உயர்ந்த தரத்தினைப் பேணுவதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் எவ்வாறு தம்மை அர்ப்பணித்துள்ளனர் மற்றும் பொறுப்பக்களை ஏற்றுள்ளனர் என்ற தெளிவினை வழங்குகின்றது

## தாபன ஆளுகையின் செயல் சட்டகம்



# தாபன ஆளுகை பற்றிய விவரணம்

| நிர்வாக செயற்பாட்டின் கொள்கைகள் | | 2017 ஆம் ஆண்டுக்கு கருத்துத் தெரிவித்தல் |
|---|---|---|
| I. பணிப்பாளர் சபை | | |
| 1.1. | பணிப்பாளர் சபை | அரசாங்க மற்றும் அதன பங்குதாரர்கள் சார்பாக நிதியத்தின் நிர்வாகத்தில் பணிப்பாளர் சபைக்கு சட்டபூர்வமான பொறுப்பு உள்ளது. |
| 1.1.1. | பணிப்பாளர் சபைக்கான நியமனங்கள் | சபையானது அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br>• அமைச்சரினால் நிமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்கள்<br>• நிதி விடயம் தொடர்பாக பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்<br>• வர்த்தக விடயம் தொடர்பாக பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்<br>• இலங்கை பணிகொள்வோர் கழகத்தினால் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்<br>• ஒவ்வொன்றும் 100,000 அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களின் நிறைவேற்றுக் குழுவுடன் ஆலோசித்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் |
| 1.1.2. | பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் | சபையானது வழமையாக ஒரு மாத இடைவெளியில் மற்றும் தேவைப்படும் போது ஒன்றுகூடும். இவ்வாண்டினுள் சபை பதின்மூன்று (13) தடவைகள் ஒன்றுகூடியது. சபைக் கூட்டங்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக சபைக் கூட்டங்களுக்கு மூன்று நாட்களுக்குக் குறையாத வேலை நாட்களுக்கு முன்னர் மற்றும் நன்கு முன்கூட்டியே சபை குறிப்பாணைகள் வழங்கப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டில் சபைக் கூட்டங்களின் போதான வரவு கீழே தரப்பட்டுள்ளது.<br>**சபை கூட்டத்தின் வருகை 2017**<br> |
| 1.1.3. | பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள் | பொதுமக்கள் வளங்களின் பாதுகாவலனாகப் பணிப்பாளர் சபையானது அதன் கட்டாயமான உரிமைகளையும் பொறுப்புக்களையும் நடைமுறைப்படுத்தல் வேண்டும். முறையான திட்டமிடலின்றி மேற்கொள்ளப்படும் எந்தவிதமான முடிவுகளும் நடவடிக்கைகளும் பொது மக்களைப் பெருமளவில் பாதிக்கும் என்பதால் சபையானது அதன் பாரதுரமிக்க பொறுப்புக்கள் குறித்து எல்லா வேளைகளிலும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.<br>• பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்களும் பிரச்சினைகளும்:-<br>• கொள்கையாக்கம்<br>• நிதியத்தின் செயலாற்றுகையைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்<br>• துணை:கூட்டு மற்றும் ஏனைய முதலீடுகளின் செயலாற்றுகையைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்<br>• வருடாந்த செயலாற்றுகை மீள்நோக்கு<br>• தொழிற்படு மூலதனம்<br>• காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்<br>• பணிப்பாளர் சபை குறிப்பாணைகள |

| நிர்வாக செயற்பாட்டின் கொள்கைகள் | | 2017 ஆம் ஆண்டுக்கு கருத்துத் தெரிவித்தல் |
|---|---|---|
| 1.1.4. | சபையின் செயலாளர | பணிப்பாளர் சபைக்குத் தேவையான நம்பகமான மற்றும் நம்பகமான மற்றும் பொருத்தமான தகவல்களை உரிய நேரத்தில் வழங்குவதை உறுதிப்படுத்தவதற்காக மற்றும் சபை நடைமுறைகள், சட்டங்கள் மற்றும் பொருத்தமான சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் இணங்கி ஒழுகுவது குறித்து சபைக்கு ஆலோசனை வழங்குவதற்காகப் பொறுப்பாகவுள்ள தொழில்வாண்மை தகுதியுள்ள தாபனச் செயலாளரின் ஆலோசனை மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுமதி உண்டு. உரிய நேரத்தில் சபை குறிப்பாணைகளை வழங்குவதுடன் சபையின் வினைத்திறன்மிக்க செயற்பாட்டினை மற்றும் சபைக் கூட்டங்கள் கொண்டிருக்க வேண்டிய நடைமுறைகளைச் செயலாளர் உறுதிப்படுத்துவார். |
| 1.1.5. | சபைச் செயலாளரின் வகிபங்கு | சபை நடைமுறைகள் பின்பற்றுவது குறித்து சபைச் செயலாளர் உறுதிப்படுத்த வேண்டியதுடன், சபை நடைமுறைகள் தொடர்பான சட்டரீதியான தேவைகளைக் குறித்து வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக செயலாளரின் கடமைகள் :<br>• சபைக் கூட்டங்களின் அறிவித்தல், கூட்ட நடவடிக்கைக் குறிப்புக்கள், சபைக் குறிப்பாணைகள் ஆகியவற்றுடன் ஏனைய உரிய ஆவணங்களைச் சுற்றனுப்புதல்.<br>• சபைத் தீர்மானங்கள் தொடர்பிலான பின்தெதாடர் நடவடிக்கைகள்<br>• உள்ளக மற்றும் வெளிவாரித் தகவல்களை வழங்குவதன் மூலம் சபை உறுப்பினர்களுக்கு உதவுதல் |
| 1.1.6. | சபைச் சமநிலை | (நிதி, வர்த்தகம், பணிகொள்வோர் சம்மேளனம், தொழிற்சங்கம் போன்ற) வேறுபட்ட துறைகளிலிருந்து வரும் பணிப்பாளர்கள் சபைக்கு சமநிலையான தளத்தினை வழங்குவர். அவர்கள் ஒவ்வொரு விடயமும் தொடர்பாக அவர்களது சுதந்திரமான கருத்தக்களைத் தெரிவிப்பர். |
| 1.1.7. | பயனுறுதிமிக்க சபைக் கூட்டத்திற்கான போதிய கால அவகாசம் | சபையானது வழமையாக மாதாந்த இடைவெளியில் கூடுகின்றது. ஒரு சபைக் கூட்டத்திற்குச் செலவிடப்படும் சராசரி நேரம் 3 மணித்தியாலங்களாகும். |
| **1.2.** | தவிசாளர் | |
| 1.2.1. | தவிசாளரின் நியமனங்கள் | சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியானசபையின் தவிசாளர் அமைச்சரினால் நியமிக்கப்படுவார். |
| 1.2.2. | தவிசாளரின் பொறுப்புக்கள | ஒட்டுமொத்த நிர்வாக அமைப்பிலும் முக்கியமான இணைப்பாளராக உள்ள தவிசாளர்ஃபிரதான நிறைவேற்று அதிகாரி அணியையும் நிறுவனத்தையும் சரியான திசையில் வழிநடத்திச் செல்வார். அவர் முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு முக்கிய நடவடிக்கைகள் தொடர்பிலான பொள்கைகளைச் செயற்படுத்துதல் மற்றும் திட்டங்களையும் நிகழ்ச்சிகளையும் தயாரித்தல் ஆகியவற்றிற்குப் பொறுப்பாயுள்ளார். |
| **2.** | கணக்கியல் மற்றும் கணக்காய்வு | |
| 2.1. | நிதி அறிக்கையிடல | சபையின் நிதிக் கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரமும் மற்றும் கண்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்களைக் கண்காணிக்கும் சபைச் சட்டத்திற்கு இணங்கவும் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படுகின்றன. |
| 2.1.1. | நியதிச்சட்ட மற்றும் ஒழுங்குவிதி சார் அறிக்கையிடல் | 1971இன் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) பிரிவின் மற்றும் சட்டவாக்கத்தின் பிரகாரம் கணக்காய்வளர் தலைமை அதிபதியே அனைத்து அரச தாபனங்களினதும் கணக்காய்வாளராக இருத்தல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமை அதிபதி தமது வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டிற்குள் செயற்படக்கூடிய தகுதிமிக்க எவரேனும் கணக்காய்வாளரை நியமிக்கலாம். |
| 2.1.2. | நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வாளரின் பொறுப்பு | கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கையை உசாவவும். |
| 2.1.3. | வருடாந்த அறிக்கையில் பணிப்பாளர்களின் அறிக்கை | பணிப்பாளர் சபையின் மீளாய்வினை உசாவவும். |
| 2.1.4. | நிதிக் கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு குறித்து கூற்று | பணிப்பாளர் சபையின் மீளாய்வினை உசாவவும். |
| 2.1.5. | முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு | முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வினை உசாவவும். |
| 2.2. | உள்ளகக் கட்டுப்பாடு | |
| 2.2.1. | உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடு | ETFB அதன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினைக் கொண்டுள்ளது. |
| 2.2.2. | கணக்காய்வுக் கமிட்டியினால் உள்ளகக் கட்டுப்பாட்டு பயனுறுதித் தன்மையின் மீளாய்வு | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் உள்ளடங்கலாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் பயனுறுதித்தன்மை குறித்து கணக்காய்வுக் கமிட்டிக்கு தொடர்ந்தும் அறிக்கை அளிக்கின்றது. |

# கணக்காய்வுக் கமிட்டி

## I. கணக்காய்வுக் கமிட்டி

இக்கமிட்டி குறைந்தபட்சம் நிறைவேற்று சபை உறுப்பினர்களல்லாத மூவரைக் கொண்டிருக்க வேண்டியதுடன் முடிந்தால் திறைசேரிப் பிரதிநிதி ஒருவரால் அல்லது நிதி முகாமைத்துவத் திறன்களைக் கொண்ட ஒருவரால் தலைமைத் தாங்கப்படுதல் வேண்டும். இந்த கமிட்டி வழக்கமான அடிப்படையில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை அவைக் கூட்டுநராக பிரதான உள்ளகக் கணக்காய்வாளருடன் ஒன்றுகூடுவதுடன், தேவையான நடவடிக்கைகளுக்காக அதன் அவதானிப்புக்களை பரிந்துரைகளுடன் பணிப்பளர் சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கணக்காய்வுக் கமிட்டியின் அமைப்பு

- திருமதி சம்பா பாலசூரிய
  கணக்காய்வுக் கமிட்டியின் தலைவர்/பணிப்பாளர்
  நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

- திருமதி க்ஷிதா சேனாரத்ன
  மேலதிகச் செயலாளர்/பணிப்பாளர்
  கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

- திரு. பீ. ரணவக்கஆரச்சி
  பணிப்பாளர்
  தொழிற்சங்கப் பிரதிநிதி

- மேலதிக பொது முகாமையாளர்

- அனைத்து பிரதிப் பொது முகாமையாளர்கள் மற்றும் அனைத்து உதவிப் பொது முகாமையாளர்கள்

## II. முகாமைத்துவக் கமிட்டி

நிதியத்தின் செயற்பாடுகளின் முகாமைத்துவத்திற்கான பொறுப்பு தலைவர் மற்றும் சிரேக்ஷ்ட முகாமைத்துவத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்களை பயனுறுதிமிக்கதாகச் செயற்படுத்துவதற்கு அவர்கள் பொறுப்பாயுள்ளனர். நன்கு கவனத்திற்கொண்ட தீர்மானங்களைப் பெறுவதற்கு இயலுமாக்க சபைக்கு தகவல்களையும் தேவையான விளக்கங்களையும் தலைவரும் சிரேக்ஷ்ட முகாமைத்துவக் குழுவும் வழங்கும். சபையின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைவதுடன் நிதியத்தின் பயனுறுதிமிக்க முகாமைத்துவத்திற்கு செயற்படு திட்டங்கள், வரவுசெலவுகள், முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளைப் பேணுதல் ஆகியவற்றை அவர்கள் முறைப்படுத்துவார். எனவே, பருவகால முன்னேற்றக் கண்காணிப்பிற்காக சபையிலுள்ள முக்கியமானதொரு கருவியாக முகாமைத்தவக் கமிட்டி உள்ளது. இக்கமிட்டி கவனஞ் செலுத்தவேண்டிய முக்கிய விடயங்களாக உள்ளடங்க வேண்டியவை:-

- இன்னும் செயற்படுத்தப்படாத முன்னைய கூட்டங்களில் எடுத்த சபைத் தீர்மானங்கள்
- மாற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு அவசியமான விலகல்களுக்கான காரணங்களை இனங்காணல் மற்றும் இலக்குகளுக்கு எதிரான உண்மையான செயலாற்றுகைகளை மீளாய்தல்
- பணப்பாய்ச்சல்களின் விமர்சனமிக்க மதிப்பீடு மற்றும் எதிர்வரும் காலாண்டிற்கான திட்டமிடப்பட்ட தேவைகள்
- கடன் ∴காசு முகாமைத்தவம்
- அவசரக் கொள்வனவுகளைத் தவிர்ப்பதற்கு கொள்வனவுத் தாமதங்களை (ஏதேனும் இருப்பின்) பின்னூட்டம் செய்தல்
- நீகு,நுவுகு மற்றும் வரிகள் போன்ற சட்ட ரீதியான கட்டணங்களின் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தல்
- சபையினால் தீர்மானங்களை எடுத்தலை எளிதாக்குவதற்கு நியாயப்படுத்துகைகளுடன் தேவையான தொழில்நுட்ப மேம்பாடு
- மேம்படுத்தல் ∴திருத்தியமைத்தல் ஆகியவற்றிற்கான மாற்று நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்கு ஊடகங்கள் ஊடான முறைபாடுகள் உள்ளடங்கலாக வாடிக்கையாளர் திருப்தி ∴அதிருப்தி குறித்து பின்னூட்டஞ் செய்தல்

- திருத்தப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய ஏதேனும் புதிய முன்மொழிவுகள்
- நிர்வாகம் மற்றும் தாபனத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்களும்
- வேறு ஏதேனும் நாளாந்த செயற்பாட்டுப் பிரச்சினைகள்

## III. முதலீட்டுக் கமிட்டி

சபையின் நிதிக் கடப்பாடுகளை செலுத்துவதற்கு திரவத்தன்மையினை நிர்வகித்தல் மற்றும் அதிகாரம் பெற்ற முதலீடுகளைப் பயன்படுத்தி உகந்த முதலீட்டு வருவாயினை வழங்குதல் ஆகியவற்றுடன் சபையின் நிதியினை முதலீடு செய்வதில் சபையின் முதன்மை நோக்கமாவது அசல் தொகையின் பாதுகாப்பினை உறுதி செய்வதாகும். எனவே முதலீட்டுக் கமிட்டி அம்மூன்று இலக்குகளையும் உறுதிப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது.

- **பாதுகாப்பு**

மூலதனத்தின் பாதுகாப்பே சபையின் முதன்மைமிகு நோக்கமாகும். மூலதனத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு முதலீட்டுக் கலவையின் கணிசமான பகுதியினை சிறைகாப்புடைய அரசாங்க பிணையப் பத்திரங்களில் முதலீடு செய்யப்படும்.

- **திரவத்தன்மை**

நியாயமாகத் திட்டமிடப்பட்ட எல்லா செயற்பாட்டுத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு சபையினால் முடியுமாவதற்கு முதலீட்டுக் கலவையானது போதுமான திரவமாக இருத்தல் வேண்டும்.

- **முதலீடு மீதான வருவாய்**

அதிகாரம்பெற்ற முதலீட்டுக் கருவிகளைப் பயன்படுத்தி இருக்கும் உயர் வருவாயினைப் பெறுவதற்கு முதலீட்டுக் கலவை வடிவமைக்கப்படுதல் வேண்டும்.

முதலீட்டுக் கமிட்டி நாளாந்த அடிப்படையில் ஒவ்வொரு வேலை நாளிலும் ஒன்று கூடக்கூடிய ஆறு உறுப்பினர்களைக் கொண்டது. சந்தை நிலைமையை அடிப்படையாகக் கொண்டு நிதியத்திலிருந்து பொருத்தமான முதலீடுகளை அவர்கள் தீர்மானிப்பர்.

## துணைக் கமிட்டிகள் நிறைவேற்றுச் சுருக்கம்

| Board Sub Committees | Coverage | Composition |
|---|---|---|
| I. கணக்காய்வுக் கமிட்டி | • உள்ளகக் கட்டுப்பாடுகளை மீளாய்தல்<br>• உள்ளகக் கணக்காய்வினை மீளாய்தல்<br>• வெளிவாரி கணக்காய்வினை மீளாய்தல்<br>• நிதிக் கூற்றுக்களை மீளாய்தல் | • மூன்று பணிப்பாளர்கள்<br>• எல்லா பிரதிப் பொது முகாமையாளர்களும் எல்லா உதவிப் பொது முகாமையாளர்களும் |
| II. முகாமைத்துவக் கமிட்டி | • செயற்பாட்டுடன் பிரச்சினைகளை மீளாய்தல்<br>• தேவையான மேம்பாடுகளை மீளாய்தல்<br>• செயலாற்றுகைகளை மீளாய்தல் | • தவிசாளர்<br>• தொழிற்படுப் பணிப்பாளர்<br>• சிரேக்ஷ்ட முகாமைத்துவம் |
| III. முதலீட்டுக் கமிட்டி | • சபை முதலீட்டுக் கொள்கை<br>• முதலீட்டுக் கலவைகள் மற்றும் அவற்றின் செயலாற்றுகை<br>• தற்போதைய சூழற் காரணிகளை மீளாய்தல் | **முதலீட்டுக் கமிட்டி**<br>• திறைசேரி பிரதிநிதிகள்<br>• தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் பிரதிநிதி<br>• அபிவிருத்திப் பணிகள் அமைச்சின் பிரதிநிதி<br>• மேலதிக பொது முகாமையாளர்<br>• பிரதிப் பொது முகாமையாளர் (முதலீடு)<br>• பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)<br>• பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) - அவதனிப்பு பிரதிநிதி<br><br>**உரிமைப்பங்கு கமிட்டி**<br>• உதவிப் பொது முகாமையாளர் (நிதி)<br>• நிதிப் பிரிவிலிருந்து ஒரு முகாமையாளர்<br>• மூன்று முதலீட்டு பகுப்பாய்வாளர்கள் |

# இடர் நேர்வு முகாமைத்துவ அறிக்கை




## இடர்நேர்வு முகாமைத்தவம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை இலங்கையில் செயற்பட்டு வரும் முதன்மை ஓய்வூதியப் பணிக்கொடை நிதியமாக காணப்படுகின்றது. மாதாந்த அடிப்படையில் நிதியத்திற்கு கிடைக்கும் தனியார் மற்றும் அரச சார்பு நிறுவனங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள ஓய்வுதியத்திற்கு உரிமையற்ற ஊழியர்களிடமிருந்து நீண்ட காலத்திற்குப் பெற்றுக்கொள்ளப்படும் பங்களிப்புத் தொகைகளைப் பயன்படுத்தி அவர்களுக்கு நிதிப் பாதுகாப்பொன்றை வழங்கும் நன் நோக்கில் சபை தன்னை அர்ப்பணித்துள்ளது. மேலும், சகல ஊழியர்களும் தனது சேவையிலிருந்து ஓய்வுபெறும் போது அவர்களுக்குரிய குறிப்பிட்ட நலன்கள் அவர்களுக்கு கிடைப்பதை சபை உறுதிசெய்ய வேண்டியுள்ளது. நிதியத்திற்குரிய பல்வேறுபட்ட முதலீட்டுக் கருவிகளில் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் பாதுகாப்பையும் உறுதி செய்தல் வேண்டும். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குரிய முதலீட்டுகளில் கனிசமானவை அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் 2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் கொழும்பு பங்குச் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட மொத்த சந்தை மூலதனம் 0.4மூ ஆக இருந்தது. அதற்கிணங்க, இடர்நேர்வு முகாமைத்துவம் வியாபார செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குரிய சகல கட்டங்களிலும் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பிரதான விடயமாக கருதப்படுகின்றது.

**சமகால வியாபார அமைப்பில் சபை முகங்கொடுக்கும் முக்கிய இடர்நேர்வுகளாவன கடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு, செயற்பாட்டு இடர்நேர்வு என்பனவாகும்.**

## கடன் இடர்நேர்வு

ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் கடன்பெறுநர் கடன் கொடுநருக்கு கடனனை திருப்பிச் செலுத்தாத போது கடன் இடர் நேர்வு நிகழ்கின்றது. இதனால் ஒரு கடனாளிக்காக ஏற்க வேண்டிய செலவு அதிகரிக்கின்றது. கடன் கொர்டனரின் பார்வையில் நோக்கும் போது அதனை கடன் ஒன்றுதிரள்வாகவும் கருதப்படும். இடர்நேர்வுகள், நிச்சயமாக பெறுமதிமிக்க நிதி வசதிகளின் பெறுபேறாக ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் கடன் கொடுநர் ஒருவர் அடைந்துகொள்ள இருந்த ஏதேனும் பொருளாதார அல்லது நிதிப் பெறுபேறுகள் மீது அது வரையறைகளை ஏற்படுத்தும். 2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சபையின் நிதியங்களில் 77.79 வீதம் இடர்நேர்வு அற்ற அரச பிணைப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. ஆகவே, கடன் இடர்நேர்வை குறைந்த மட்டத்தில் பேண முடிந்துள்ளது. எதிர்மறையான பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்ட மொத்த திரண்ட முதலீடு 0.81 ஆக கணக்கிடப்பட்டது. முழுமையாக பகுப்பாய்வுக்கு உட்படுத்திய பின்னர் தரப்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களின் கடன் கடன் செயலாற்றுகைப் பத்திரங்களில் மாத்திரம் சபை பணத்தை முதலீடு செய்கின்றது. மேலும் உரிய மீளெடுத்தல் ஒப்பந்தங்கள் மற்றும் எதிர்பாரா ஓர் இரவில் நடைப்பெறும் மீளெடுத்தல் ஒப்பந்தங்கள் அரச பிணையப்பத்திரங்கள் ஊடாக போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த இடர்நேர்வுகளை தவிர்க்கும் செயற்பாடானது கடன் இடர்நேர்வை குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கு சபைக்கு உதவுகின்றது.

## சந்தை இடர்நேர்வு

சந்தை இடைநேர்வுகளுக்கு ஒரு நிறுவனம் உட்படுவதற்குரிய இடைநேர்வு நிதிச் சந்தையில் நிலவும் தளம்பல் நிலமைகள் மூலம் அதிகரிக்கின்றது. வட்டி வீதத்தில் காணப்படும் தளம்பல் மற்றும் பங்குரிமை இடைநேர்வுகள் சந்தை இடைநேர்வின் அடிப்படை அங்கங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. சந்தை இடைநேர்வு முதலீடுகளின் மீதான நலன்களின் வீழ்ச்சிக்கு காரணமாக அமையலாம். திறைசேரி பிணைமுறிகள் மீதான வட்டி வீதங்கள் உயர் பெறுமானத்தைக் காட்டும் போது பெறுமதியில் குறைவு ஏற்படலாம். அதற்கு நேர் மாற்றமாக வட்டி வீதத்தில் படிப்படியான வீழ்ச்சி (விலை இடைநேர்வு) காணப்படும் போது குறைந்த வட்டி வீதத்தின் மீது நிதியங்களை மீள் முதலீடு செய்ய வேண்டி ஏற்படும். அதன் மூலம் வருமான உருவாக்கத்தின் கொள்திறன் வீழ்ச்சியடையும். மாறுபட்ட காலப் பிரிவுகள் மற்றும் நலன்களின் கீழ் திறைசேரி பிணைமுறிகளைப் பெற்றுக்கொள்ளும் மூலோபாயத்துடன் நடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலம் சந்தை இடைநேர்வுக்கு உட்படும் நிலையை ஓரளவுக்கு தணிக்க முடியும். மூலதனச் சந்தைகளில் நிகழும் ஏதேனும் எதிர்மறையான தளம்பல்கள் பிரதானமாக பங்குகளின் மூலதனச் சந்தைப் பத்திரங்களின் பெறுமதியை குறைப்பதற்கு காரணமாக அமையலாம். முதன்மை செயற்பாட்டுடன் பல்துறை சந்தைகளில் நிலைத்திருப்பதை விரிவு படுத்துவதன் மூலம் பல்வேறுபட்ட முதலீட்டுப் பணிகளுக்கான பிரவேசத்தை ஏற்படுத்திக்கொள்ளல் மற்றும் விலைத் தொகுதிகளை பின்பற்றுதல் போன்ற தணிப்பு நடவடிக்கைகள் நிகழும் ஏதேனும் நிதி இழப்புக்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எதிர்மறையான முதலீடுகளில் பணத்தை இடுவதற்கு முன்னர் அது தொடர்பான பூரண பகுப்பாய்வொன்றை மேற்கொள்ளல் வேண்டும். ஆயினும், சபையின் சிறு முதலீட்டு விபரக் குறிப்பில் பங்குகள் மீது செய்யப்படும் முதலீடு நூற்றுக்கு 4‘41வீதமாக கணக்கிடப்பட்டதனால் சபையின் பங்கு உரிமைகள் திரட்சியின் மீது ஏற்படுத்திய மொத்த தாக்கம் ஒப்பீட்டளவில் குறைந்த பெறுமானத்தைக் கொண்டுள்ளது.

## திரவத்தன்மை இடர்நேர்வு

திரவத்தன்மை இடர் நேர்வு என்பது குறுகிய கால நிதிக் கேள்விகளைப் பூர்த்தி செய்ய முடியாமையினால் எழும் இடர் நேர்வு என சரளமாக வரைவிலக்கணப்படுத்தலாம். சபையின் கண்ணோட்டத்தில் இந்தப் பிரிவுக்குள் உள்ளடக்கப்படும் இடைநேர்வின் மூலம் அதிகார முதலீட்டுக்கான சந்தர்ப்பங்களை தடுக்க முடியும். நிதி செயலாற்றுகைப் பத்திரங்களின் மூலம் விற்பனை செய்வதன் மூலமும் அது வீழ்ச்சியடையக் கூடும். சாதாரணமாக நலன்களை செலுத்திய பின்னர் சபையின் தேறிய பங்களிப்புத் தொகைகளின் மூலம் மாதந்தம் ரூ.மில். 1.69 நேர்மறையான நிதி உட்பாய்ச்சல் உருவாக்கப்பட்டதோடு, அதன் மூலம் சபையின் திரவத்தன்மை நிலையான உயர் பெறுமானத்தைக் காட்டியது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் வருமானம் மற்றும் முதிர்வுத் தொகை போன்ற ஏனைய நிதிஉட்பாய்ச்சல் நூற்றுக்கு 74 வீத உழைப்பைக் காட்டியது. மிகவும் திரவத்தன்மையான முறையில் முதலீட்டு வகையினுள் உள்ளடங்கும் அரசாங்க பிணையப் பத்திரங்களின் குறிப்பிட்டதொரு அளவு முதலீடு செய்யப்படுவதனால் திரவத்தன்மை பொறியில் சிக்காது தவிர்ந்திருப்பதற்கு சபைக்கு இயலுமாகியது. இந்தப் பொறிமுறையினூடாக ஏற்பட முடியுமான எந்தவொரு திரவத்தன்மை பின்னடைவுக்கும் எதிராக மேலதிக பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படுகின்றது. செயலிழந்த நிதியங்களின் நியாயமான நலனொன்றை உருவாக்கிக் கொள்ளும் நோக்கில் நாளாந்த திரவத்தன்மையை முகாமை செய்யும் கருவியொன்றாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை நாளாந்தம் ஓரிரவில் பணம் ஈட்டிக்கொள்ளும் மீள் கொள்வனவு சந்தையில் நிதியங்களை முதலீடு செய்துள்ளது. எனவே, நிதியம் தொடர்பான விடயத்தில் காணப்படும் திரவத்தன்மை இடைநேர்வு குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது.

## செயற்பாட்டு இடர் நேர்வு

செயற்பாட்டு இடைநேர்வுகளுக்கு நிறுவனமொன்றுக்கு உள்ள தொழிற்பாட்டு இயலுமை வீழ்ச்சியடைவதற்கு காரணமாக அமையலாம், அது நிதியிடல் மற்றும் முறையான இடைநேர்வை தீர்மானித்ததன் பின்னர் தோற்றம் பெறும் விசேட இடைநேர்வு ஆகும். அதற்கு உள்ளக நடவடிக்கை முறையின் வீழ்ச்சி மற்றும் தனிநபர் மற்றும் தொகுதி தகர்ந்து விழும் இடைநேர்வுகளும் உள்ளடக்கப்படும். சபையின் தொழிற்பாட்டு இடைநேர்வின் பிரதான மூலங்களாக தகவல் தொழில்நுட்ப அழிவுகள், மானிட தவறுகள், தலையீடுகள் மற்றும் இயற்கை அழிவுகள் போன்றன காணப்படுகின்றன. இந்த இடைநேர்வினை கட்டுப்படுத்துவதற்கு வலுவான தொழிற்பாட்டு இடைநேர்வு முகாமைத்துவ செயன்முறையொன்று சபையினால் உருவாக்கப்பட்டுள்ளது. ஏற்புடைய தொழிற்பாட்டு நடவடிக்கைகள் சுயாதீன உள்ளக கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்படுவதோடு, அவற்றின் குறைபாடுகள் மற்றும் முரண்பாடுகளை உடனடியாக தீர்ப்பதற்கு மாதாந்தம் அத்தகைய கணக்காய்வின் மூலம் எழக்கூடிய முடிவுகள் தொடர்பில் கலந்துரையாடப்படுகின்றது.




110
262
63
455
3 494
138
95 153
293
720
12 251
338
46
542
9 570



# 03

# நிதித் தகவல்கள்

## இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விபரமான வருமானக் கூற்று

2017 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | | குழுமம் | | ஊ.ந.பொ.நி. சபை | |
|---|---|---|---|---|---|
| | | 2017 | 2016 | 2017 | 2016 |
| | | | | | மீள் குறிக்கப்பட்ட |
| | குறிப்பு | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **மொத்த வருமானம்** | | | | | |
| வட்டி வருமானம் | 4 | 27,303,884 | 23,530,300 | 27,239,114 | 23,492,350 |
| '(-) வட்டிச் செலவினம்- 3.0% ஊழியர் ந.பொ.நிதியச் சட்டத்தின் 22ஆவது பிரிவின் பிரகாரம்) ' | | (7,545,681) | (6,759,768) | (7,545,681) | (6,759,768) |
| தேறிய வியாபார வருமானம் | 5 | 566,370 | 1,114,228 | - | - |
| பங்கிலாப வருமானம் | 6 | 373,739 | 486,194 | 373,739 | 486,194 |
| நட்டம்/இலாபத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் மீதான ஆதாயம்/இழப்பு | 7 | 535,345 | 68,592 | 535,345 | 68,592 |
| ஏனைய வருமானங்கள் | 8 | 860,876 | 540,511 | 851,903 | 531,650 |
| | | **22,094,532** | **18,980,056** | **21,454,420** | **17,819,018** |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | | | | | |
| ஊழியர் செலவினங்கள் | 9 | 1,174,842 | 1,059,412 | 1,053,611 | 985,963 |
| நிர்வாகச் செலவினங்கள் | 10 | 232,510 | 164,581 | 167,809 | 143,887 |
| நிதிச் செலவினங்கள் | 11 | 11,529 | 7,967 | 2,401 | 2,904 |
| அங்கத்தவர் செலவினங்கள் | 12 | 460,603 | 454,466 | 460,603 | 454,466 |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன்கழிப்பு | 13 | 61,622 | 40,660 | 14,196 | 15,290 |
| நடப்பு ஆண்டில் அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி | | 208,429 | 173,630 | 208,429 | 173,630 |
| உரிமையாண்மை முதலீடுகளின் பெறுமதி இழப்பு | 17.1 | 13,050 | 283 | 13,050 | 283 |
| | | **2,162,584** | **1,900,999** | **1,920,098** | **1,776,422** |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | **19,931,948** | **17,079,058** | **19,534,322** | **16,042,596** |
| வருமானவரிச் செலவினங்கள் | 14 | (2,779,214) | (2,733,111) | (2,705,842) | (2,394,498) |
| **வரிக்கு பின்னரான இலாபம்** | | **17,152,734** | **14,345,946** | **16,828,480** | **13,648,098** |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **17,152,734** | **14,345,946** | **16,828,480** | **13,648,098** |
| **இலாபம் குறிக்கக்கூடியது:** | | | | | |
| கம்பனி பங்குதாரர்கள் | | 17,120,308 | 14,276,161 | 16,828,480 | 13,648,098 |
| கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சொத்துக்கள் | | 32,425 | 69,785 | - | - |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **17,152,734** | **14,345,946** | **16,828,480** | **13,648,098** |
| நிறுத்தி வைத்த இலாபம் முன் கொண்டுவரப்பட்ட | | 3,473,280 | 3,345,119 | 3,473,280 | 3,345,119 |
| **ஒதுக்கீட்டுக்கு கிடைகக்கூடிய இலாபம்** | | **17,152,734** | **14,345,946** | **16,828,480** | **13,648,098** |
| **ஒதுக்கீட்டுக்கு கிடைகக்கூடிய மொத்த இலாபம்** | | **20,626,014** | **17,691,065** | **20,301,760** | **16,993,217** |
| கழிக்க: உத்தேசிக்கப்பட்ட பகிர்வு -பங்கிலாபம் 6.0% | | 15,091,362 | 13,519,936 | 15,091,362 | 13,519,936 |
| கழிக்க: பங்கிலாபம் - இலங்கை உப்புக் கம்பனி | | - | 180,000 | - | - |
| **ஒதுக்கீட்டுக்குப் பின்னரான இலாபம்** | | **5,534,652** | **3,991,129** | **5,210,398** | **3,473,280** |

170 முதல் 204 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகும்.

சரியென உறுதிப்படுத்தப்பட்டது.

எம்.ஏ.வீ. குமுதுனீ
நிதி முகாமையாளர்

என்.டப்ளியூ. விமலவீர
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

பணிப்பாளர் சபை இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் தொடர்பில் பொறுப்புடையவர்கள் சபைக்காகவும் சபை சார்பாகவும் அனுமதித்து கையொப்பமிடப்பட்டது.

மஹிந்த மடிஹஹேவா
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

ப.பீ.மெதகெதர
தொழிற்பாட்டுப் பணிப்பாளர்

## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விபரமான வருமானக் கூற்று

2017 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | | குழுமம் | | ஊ.ந.பொ.நி. சபை | |
|---|---|---|---|---|---|
| | | 2017 | 2016 | 2017 | 2016 |
| | | | | | மீள் குறிக்கப்பட்ட |
| | குறிப்பு | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **ஏனைய விபரமான வருமானம்** | | | | | |
| **விபரமான வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தக்கூடிய அல்லது மீள்வகைப்படுத்தப்படும் உருப்படிகள்** | | | | | |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய நிதிச் சாதனங்கள் ஒதுக்கீட்டுக்கு மாற்றம் | | (211,202) | (964,030) | (211,202) | (964,030) |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய ஒதுக்கு (அலகுகள்) | | 8,484 | (3,846) | 8,484 | (3,846) |
| **விபரமான வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்படாத உருப்படிகள்** | | | | | |
| இளைப்பாற்று நலன் கடப்பாடு மீது காப்பீட்டு ஆதாயம்/ (இழப்பு) | | (11,599) | 500 | (11,599) | 500 |
| ஆண்டிற்கான ஏனைய விபரமான வருமானம் மீது வருமான வரி / (செலவினங்கள்) | | | | - | - |
| **ஆண்டிற்கான மொத்த ஏனைய விபரமான வருமானம் தேறிய வரி** | | **(214,317)** | **(967,376)** | **(214,317)** | **(967,376)** |
| **ஆண்டிற்கான மொத்த விபரமான வருமானம் தேறிய வரி** | | **16,938,416** | **13,378,570** | **16,614,163** | **12,680,722** |
| **மொத்த விபரமான வருமானம் குறிக்கக் கூடியது** | | | | | |
| கம்பனி பங்குதார்கள் | | 16,905,991 | 13,308,785 | 16,614,163 | 12,680,722 |
| கட்டுப்பாடற்ற உரிமைகள் | | 32,425 | 69,785 | - | - |
| **வரிக்குப் பின்னரான மொத்த விபரமான வருமானம் தேறிய வரி** | | **16,938,416** | **13,378,570** | **16,614,163** | **12,680,722** |

170 முதல் 204 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகும்.

சரியென உறுதிப்படுத்தப்பட்டது.

.........................................................
எம்.ஏ.கே. குமுதுனி
நிதி முகாமையாளர்

.........................................................
என்.டப்ளியூ. விமலவீர
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

பணிப்பாளர் சபை இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் தொடர்பில் பொறுப்புடையவர்கள் சபைக்காகவும் சபை சார்பாகவும் அனுமதித்து கையொப்பமிடப்பட்டது.

.........................................................
மஹிந்த மடிஹஹேவா
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

.........................................................
ப.பீ.மெதகெதர
தொழிற்பாட்டுப் பணிப்பாளர்

| | | குழுமம் | | ஊ.ந.பொ.நி. சபை | |
|---|---|---|---|---|---|
| | | 2017 | 2016 | 2017 | 2016 |
| | | | | | மீள் குறிக்கப்பட்ட |
| | குறிப்பு | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **சொத்துக்கள்** | | | | | |
| காசும் காசுக்கு சமமானவையும் | | 929,141 | 748,033 | 743,124 | 614,332 |
| விற்பனைக்காக நிறுத்தி வைக்கப்பட்ட ஏனைய நிதிச் சொத்துக்கள் | 15 | 2,511,005 | 1,955,837 | 2,511,005 | 1,955,837 |
| துணை நிறுவனங்களில் முதலீடு | 16 | - | - | 470,961 | 470,961 |
| நிதிசார் முதலீடுகள் - விற்பனைக்கு கிடைக்கக்கூடியவை | 17 | 7,845,694 | 9,209,233 | 7,845,694 | 9,209,233 |
| நிதிசார் முதலீடுகள் - முதிர்ச்சிக்கு விடப்பட்டவை | 18 | 250,864,335 | 223,110,604 | 250,616,892 | 222,454,509 |
| நிதிசார் முதலீடுகள் - கடன்கள் மற்றும் வருமதிகள் | 19 | 1,788,104 | 1,357,817 | 1,782,340 | 1,343,876 |
| ஏனைய சொத்துக்கள் | 20 | 11,920,568 | 9,621,688 | 11,050,045 | 9,244,193 |
| சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் | 21 | 1,184,809 | 1,101,719 | 173,586 | 176,378 |
| குத்தகைச் சொத்துக்கள் | 22 | 4,879 | 5,576 | - | - |
| அருவச் சொத்துக்கள் | 23 | 140 | 192 | 140 | 192 |
| முதலீட்டுச் சொத்துக்கள் | 24 | 3,812,500 | 3,400,000 | 3,812,500 | 3,400,000 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **280,861,175** | **250,510,700** | **279,006,286** | **248,869,511** |
| | | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| வட்டிக் கடன்களும் கடன்களும் | 25 | 183,045 | 227,124 | - | - |
| மானியங்கள் மற்றும் உதவித் தொகைகள் | 26 | 35,521 | 38,042 | - | - |
| நிலையான நலன் கடப்பாடு | 27 | 454,311 | 401,707 | 225,391 | 202,603 |
| நடப்பு வரிப் பொறுப்புக்கள் | 28 | 266,777 | 270,909 | 211,536 | 81,082 |
| ஏனைய பொறுப்புக்கள் | 29 | 604,068 | 510,550 | 157,269 | 104,569 |
| ஏற்பாடுகள் | 30 | 81,910 | 87,841 | 81,910 | 87,841 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,625,632** | **1,536,175** | **676,106** | **476,094** |
| | | | | | |
| உரிமையாண்மை | | 279,097,910 | 248,869,319 | 278,330,180 | 248,393,417 |
| கட்டுப்பாடற்ற வட்டிகள் | | 137,632 | 105,207 | - | - |
| **மொத்த உரிமையாண்மை** | | **279,235,543** | **248,974,526** | **278,330,180** | **248,393,417** |
| **மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை** | | **280,861,175** | **250,510,700** | **279,006,286** | **248,869,511** |

170 முதல் 204 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்ககள் இந்நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகும்.

சரியென உறுதிப்படுத்தப்பட்டது.

..........................................................
எம்.ஏ.வீ. குமுதுனீ
நிதி முகாமையாளர்

..........................................................
என்.டப்ளியூ. விமலவீர
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

பணிப்பாளர் சபை இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் தொடர்பில் பொறுப்புடையவர்கள் சபைக்காகவும் சபை சார்பாகவும் அனுமதித்து கையொப்பமிடப்பட்டது.

..........................................................
மஹிந்த மடிஹஹேவா
தவிசாளர் ∴ பிரதம நிறைவேற்று அதிகாரி

..........................................................
ப.பீ.மெதகெதர
தொழிற்பாட்டுப் பணிப்பாளர்

## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

உரிமையாண்மை மாற்றக் கூற்று

**2017 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது**

| குழுமம் | கம்பனியின் பங்குதாரர்களுக்கு குறிக்கப்பட்டவை | | | | | | | | | | கட்டுப்படுத்தப் பட்ட உரிமை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கத்தவர் நிதியம் | | | | | | | | | | | |
| | பங்களிப்பு | வட்டி | பங்கிலாபம் | அங்கத்தவர் நிதியம் | நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | விற்பனைக்கு கிடைக்கக் கூடியவை | ஏனைய ஒதுக்குகள் | பங்கிலாபம் சமப்படுத்தும் ஒதுக்கு நிதியம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | கையகப்படுத்திய பின்னரான ஒதுக்குகள் | | |
| **2016.01.01.ஆந் திகதியில் நிலுவை** | | | | **218,504,948** | **3,345,119** | **182,466** | **(29,794)** | **142,000** | | **27,838** | **55,422** | **222,227,999** |
| கடந்த ஆண்டு சரிப்படுத்தல்கள் - (குறிப்பு 2.6) | | | | | | | | | | | | - |
| கடந்த ஆண்டு சரிப்படுத்தல்கள் - வரி | | | | | 30,376 | | | | | | | 30,376 |
| வரிச் செலவினங்களை பதிவுசெய்தல் - 2016 | | | | | (30,376) | | | | | | | (30,376) |
| பங்குகள் மீது தேறக்கூடிய மூலதன ஆதாயம் - பங்கு ஒதுக்கு கணக்கு | | | | | | (15,395) | | | | | | (15,395) |
| பங்களிப்பு தொகை சீராக்கம் | | | | (16,607) | | | | | | | | (16,607) |
| கிடைக்கப்பெற்ற பங்களிப்பு தொகை | 20,318,193 | | | 20,318,193 | | | | | | | | 20,318,193 |
| பங்களிப்பு தொகை மீளளித்தல் | (13,478,002) | | | (13,478,002) | | | | | | | | (13,478,002) |
| அங்கத்தவர் நிதிய நிலுவை மீது வட்டி 3.0% | | 6,759,768 | | 6,759,768 | (6,759,768) | | | | | | | - |
| பங்கிலாபம் 6.0% | | | 13,519,936 | 13,519,936 | (13,519,936) | | | | | | | - |
| ஆண்டிற்கான திரண்ட இலாபம் | | | | | 20,407,866 | | | | | | 69,785 | 20,477,651 |
| விற்பனைக்கு உள்ள ஒதுக்குகள் | | | | | | (173,479) | | | | | | (173,479) |
| விற்பனைக்கு உள்ள ஒதுக்குகள் (அலகுகள்) | | | | | | (3,846) | | | | | | (3,846) |
| துணை நிறுவனங்களின் முதலீடுகளுக்கு நியாயமான பெறுமதிகளை முன்னைய நிலைக்கு கொண்டுவரல் | | | | | | (790,551) | | | | | | (790,551) |
| மீள் மதிப்பிடப்பட்ட ஒதுக்குகள் | | | | | | | | | 200,000 | | | 200,000 |
| முதலீட்டுச் சொத்தின் முன்னர் இனங்காணப்பட்ட மீள்மதிப்பீட்டு ஆதாயத்தின் மாற்றம் | | | | | | | | | (200,000) | | | (200,000) |
| காப்பீட்டு ஆதாயம் / (இழப்பு) | | | | | | | 500 | | | | | 500 |
| துணை நிறுவனங்களால் செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | | | | | | | | | | (20,000) | (20,000) |
| துணை நிறுவன உரிமையாண்மையில் அசைவு | | | | | | | | | | 448,064 | | 448,064 |
| **2017.01.01.ஆந் திகதியில் நிலுவை** | **6,840,190** | **6,759,768** | **13,519,936** | **245,608,236** | **3,473,280** | **(800,805)** | **(29,295)** | **142,000** | **-** | **475,902** | **105,207** | **248,974,526** |
| **2017.01.01.ஆந் திகதியில் நிலுவை** | | | | **245,608,236** | **3,473,280** | **(800,805)** | **(29,295)** | **142,000** | **-** | **475,902** | **105,207** | **248,974,526** |
| கடந்த வருட சீராக்கங்கள் (வலுக்குறைவு பங்குகள்) | | | | | - | 283 | | | | | | 283 |
| விற்பனைக்கு உள்ள ஒதுக்குகள் | | | | | | (211,202) | | | | | | (211,202) |
| விற்பனைக்கு உள்ள ஒதுக்குகள் (அலகுகள்) | | | | | | 8,484 | | | | | | 8,484 |
| பங்குகள் மீது உழைக்கப்பட்ட மூலதனங்கள் - பங்கு ஒதுக்குக் கணக்கு | | | | | | (150,881) | | | | | | (150,881) |
| பங்கு முதலீடுகளின் வலுக்குறைவு | | | | | | 13,050 | | | | | | 13,050 |
| பங்களிப்புத் தொகை சீராக்கம் (3.1 குறிப்பு) | | | | (10,718) | | | | | | | | (10,718) |
| கிடைக்கப்பெற்ற பங்களிப்புத் தொகை | 22,764,642 | | | 22,764,642 | | | | | | | | 22,764,642 |
| பங்களிப்புத் தொகை மீளளித்தல் | (16,839,456) | | | (16,839,456) | | | | | | | | (16,839,456) |
| அங்கத்துவ நிதியத்திற்கான வட்டி 3.0% | | 7,545,681 | | 7,545,681 | (7,545,681) | | | | | | | - |
| பங்கிலாபம் 6.0% | | | 15,091,362 | 15,091,362 | (15,091,362) | | | | | | | - |
| ஆண்டுக்கான திரண்ட இலாபம் | | | | | 24,374,161 | | | | | | 32,425 | 24,406,586 |
| உண்மை இலாபம் (நட்டம்) | | | | | | | (11,599) | | | | | (11,599) |
| துணை நிறுவனங்களினால் செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | | | | | | | | | | | - |
| துணை நிறுவனங்களின் மாறுதல்கள் | | | | | | | | | | 291,828 | | 291,828 |
| **2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிலுவை** | **5,925,186** | **7,545,681** | **15,091,362** | **274,159,747** | **5,210,398** | **(1,141,071)** | **(40,894)** | **142,000** | **-** | **767,730** | **137,632** | **279,235,543** |

## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

உரிமையாண்மை மாற்றக் கூற்று

2017 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

| ஊ.ந.பொ.நி. சபை | கம்பனியின் பங்குதாரர்களுக்கு குறிக்கப்பட்டவை | | | | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கத்தவர் நிதியம் | | | | | | | | | |
| | பங்களிப்பு | வட்டி | பங்கிலாபம் | அங்கத்தவர் நிதியம் | நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | விற்பனைக்கு கிடைக்கக் கூடியவை | ஏனைய ஒதுக்குகள் | பங்கிலாபம் சமப்படுத்தும் ஒதுக்கு நிதியம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | |
| **2016.01.01.ஆந் திகதியில் நிலுவை** | | | | **218,504,948** | **3,345,119** | **182,466** | **(29,794)** | **142,000** | **-** | **222,144,738** |
| கடந்த ஆண்டு சரிப்படுத்தல்கள் - வரி | | | | | 30,376 | | | | | 30,376 |
| வரிச் செலவினங்களை பதிவுசெய்தல் - 2016 | | | | | (30,376) | | | | | (30,376) |
| முதலீட்டுச் சொத்தின் முன்னர் இனங்காணப்பட்ட மீள்மதிப்பீட்டு ஆதாயத்தின் மாற்றம் | | | | | | (15,395) | | | | (15,395) |
| பங்களிப்பு தொகை சீராக்கம் | | | | (16,607) | | | | | | (16,607) |
| கிடைக்கப்பெற்ற பங்களிப்பு தொகை | 20,318,193 | | | 20,318,193 | | | | | | 20,318,193 |
| பங்களிப்புத் தொகை மிளளித்தல் | (13,478,002) | | | (13,478,002) | | | | | | (13,478,002) |
| அங்கத்துவ நிதியத்திற்கான வட்டி 3.0% | | 6,759,768 | | 6,759,768 | (6,759,768) | | | | | - |
| பங்கிலாபம் 6.0% | | | 13,519,936 | 13,519,936 | (13,519,936) | | | | | - |
| ஆண்டுக்கான திரண்ட இலாபம் | | | | | 20,407,866 | | | | | 20,407,866 |
| விற்பனைக்கு உள்ள ஒதுக்குகள் | | | | | | (173,479) | | | | (173,479) |
| விற்பனைக்கு உள்ள ஒதுக்குகள் (அலகுகள்) | | | | | | (3,846) | | | | (3,846) |
| துணை நிருவனங்களின் முதலீடுகளுக்கு நியாயமான பெறுமதிகளை முன்னைய நிலைக்கு கொண்டுவரல் | | | | | | (790,551) | | | | (790,551) |
| மீள் மதிப்பிடப்பட்ட ஒதுக்குகள் | | | | | | | | | 200,000 | 200,000 |
| முதலீட்டுச் சொத்தின் முன்னர் இனங்காணப்பட்ட மீள்மதிப்பீட்டு ஆதாயத்தின் மாற்றம் | | | | | | | | | (200,000) | (200,000) |
| உண்மையான இலாபம் (நட்டம்) | | | | | | | 500 | | | 500 |
| **2017.01.01.ஆந் திகதியில் நிலுவை** | **6,840,190** | **6,759,768** | **13,519,936** | **245,608,236** | **3,473,280** | **(800,805)** | **(29,295)** | **142,000** | **-** | **248,393,417** |
| **2017.01.01.ஆந் திகதியில் நிலுவை** | | | | **245,608,236** | **3,473,280** | **(800,805)** | **(29,295)** | **142,000** | **-** | **248,393,417** |
| கடந்த வருட சீராக்கங்கள் (வலுக்குறைவு பங்குகள்) | | | | | | 283 | | | | 283 |
| விற்பனைக்கு உள்ள ஒதுக்குகள் | | | | | | (211,202) | | | | (211,202) |
| விற்பனைக்கு உள்ள ஒதுக்குகள் (அலகுகள்) | | | | | | 8,484 | | | | 8,484 |
| பங்குகள் மீது உழைக்கப்பட்ட மூலதனங்கள் - பங்கு ஒதுக்குக் கணக்கு | | | | | | (150,881) | | | | (150,881) |
| பங்கு முதலீடுகளின் வலுக்குறைவு | | | | | | 13,050 | | | | 13,050 |
| **பங்களிப்புத் தொகை சீராக்கம் (3.1 குறிப்பு)** | | | | (10,718) | | | | | | (10,718) |
| கிடைக்கப்பெற்ற பங்களிப்புத் தொகை | 22,764,642 | | | 22,764,642 | | | | | | 22,764,642 |
| பங்களிப்புத் தொகை மிளளித்தல் | (16,839,456) | | | (16,839,456) | | | | | | (16,839,456) |
| அங்கத்துவ நிதியத்திற்கான வட்டி 3.0% | | 7,545,681 | | 7,545,681 | (7,545,681) | | | | | - |
| பங்கிலாபம் 6.0% | | | 15,091,362 | 15,091,362 | (15,091,362) | | | | | - |
| ஆண்டுக்கான திரண்ட இலாபம் | | | | | 24,374,161 | | | | | 24,374,161 |
| பங்கு முதலீடுகளின் வலுக்குறைவு | | | | | | | (11,599) | | | (11,599) |
| **2017.12.31.ஆந் திகதியில் நிலுவை** | **5,925,186** | **7,545,681** | **15,091,362** | **274,159,747** | **5,210,398** | **(1,141,071)** | **(40,894)** | **142,000** | **-** | **278,330,180** |

## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

காசுப் பாய்ச்சல் கூற்று

2017 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | குழுமம் | | ஊ.ந.பொ.நி. சபை | |
|---|---|---|---|---|
| | 2017 | 2016 | 2017 | 2016 |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | மீள் குறிக்கப்பட்ட ரூ. '000 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகள்** | | | | |
| இலாப நட்டக் கணக்கின் நிதிச் சாதனத்தின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 2,004,630 | 264,734 | 2,004,630 | 264,734 |
| முதிர்ச்சிக்கு விடப்பட்ட நிதிச் சாதனங்ளின் முதிர்வுகள் | 144,902,638 | 226,866,952 | 144,902,638 | 226,866,952 |
| நிதிச் சாதனங்கள் கடன் மற்றும் வருமதிகளின் முதிர்வுகள் | 100,047 | 128,216 | 100,047 | 128,216 |
| இலாப நட்டக் கணக்கின் நிதிச் சாதனத்தின் கொள்வனவிற்கான செலவு | (1,230,718) | (2,105,430) | (1,230,718) | (2,105,430) |
| முதிர்ச்சிக்கு விடப்பட்ட நிதிச் சாதனத்தின் கொள்வனவிற்கான கொடுப்பனவு | (172,194,646) | (250,088,421) | (172,194,646) | (250,088,421) |
| நிதிச் சாதனங்கள் கடன் மற்றும் வருமதிகளைப் பெறுவதற்கு வழங்கப்பட்ட கடன் | (628,139) | (215,730) | (628,139) | (215,730) |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட பணங்கள் | 1,797,418 | 2,137,602 | - | - |
| வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்ட பணங்கள் | (1,747,492) | (1,160,490) | - | - |
| கிடைக்கப்பெற்ற வட்டி | 21,957,755 | 19,493,760 | 21,957,755 | 19,493,760 |
| கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | 590,871 | 329,938 | 590,871 | 329,938 |
| கிடைக்கப்பெற்ற ஏனைய வருமானம் | 574,201 | 306,894 | 574,201 | 306,894 |
| செலுத்தப்பட்ட செயற்பாட்டுச் செலவினங்கள் | (1,137,322) | (1,047,671) | (1,137,322) | (1,047,671) |
| செலுத்தப்பட்ட அங்கத்தவர் செலவினங்கள் | (296,644) | (315,819) | (296,644) | (315,819) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | 29,219 | (713) | 29,219 | (713) |
| செலுத்தப்பட்ட வட்டி | (220,011) | (181,210) | (211,060) | (176,512) |
| செலுத்தப்பட்ட நிலையான நலன் திட்டச் செலவுகள் | (13,947) | (23,142) | - | - |
| பிரதேச செயலகங்களுக்கு செலுத்தப்பட்ட நில வாடகை | (9,477) | (25,095) | - | - |
| ஆண்டு 5 புலமைப்பரிசில் கொடுப்பனவு/ மீளளித்தல் | (83,641) | (178,314) | (83,641) | (178,314) |
| உயர்கல்விப் புலமைப்பரிசில் கொடுப்பனவு / மீளளித்தல் | (41,496) | (41,908) | (41,496) | (41,908) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல்** | **(5,646,753)** | **(5,855,848)** | **(5,664,304)** | **(6,780,024)** |
| **முதலீட்டு நடவடிக்கைகள்** | | | | |
| சொத்துக்கள் மற்றும் கருவிகளின் கொள்வனவு | (196,211) | (271,465) | (20,544) | (24,990) |
| சொத்துக்கள் மற்றும் கருவிகளின் விற்பனை மூலம் வருமானம் | 503 | 470 | 218 | 73 |
| முதலீடுகளின் கையகப்படுத்துகை | 408,652 | (585,903) | - | - |
| கிடைக்கப் பெற்ற வட்டி | 66,092 | 40,087 | - | - |
| பணிக்குழாத்தினர் கடன்கள் மீள்கொடுப்பனவுகள் / தேறிய (ஆதாயங்கள்) | 8,177 | 13,882 | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல்** | **287,214** | **(802,930)** | **(20,326)** | **(24,917)** |
| **நிதியிடல் நடவடிக்கைகள்** | | | | |
| கிடைக்கப் பெற்ற பங்களிப்பு | 22,630,429 | 20,053,869 | 22,630,429 | 20,053,869 |
| நலக் கொடுப்பனவுகள் | (16,814,982) | (13,473,997) | (16,814,982) | (13,473,997) |
| செலுத்தப்பட்ட நிதிச் செலவினங்கள் | (2,026) | (2,547) | (2,026) | (2,547) |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | (228,695) | (200,000) | - | - |
| வட்டிக் கடன்களும் கடன்களின் மீள்கொடுப்பனவுகள் | (7,260) | (24,038) | - | - |
| நிதிக் குத்தகைப் பொறுப்புக்களின் கீழ் பிரதான கொடுப்பனவு | (5,157) | (4,425) | - | - |
| **நிதியிடல் நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல்** | **5,572,309** | **6,348,862** | **5,813,421** | **6,577,325** |
| **காசும் காசுக்கு சமமானவையில் தேறிய அதிகரிப்பு** | **212,770** | **(309,916)** | **128,791** | **(227,616)** |
| ஜனவரி 01ஆந் திகதியில் காசும் காசுக்கு சமமானவையும் | 545,704 | 855,620 | 614,332 | 841,949 |
| **திசெம்பர் 31ஆந் திகதியில் காசும் காசுக்கு சமமானவையும்** | **758,474** | **545,704** | **743,124** | **614,332** |

**விற்பனை செய்யப்படவுள்ள பட்டியலிடப்பட்ட பங்குச் சந்தை முதலீடுகள்**

| | நிறுவனத்தின் பெயர் | கொள்வனவு விலை (Rs.) | சாதாரண பெறுமதி (Rs.) | சந்தைப் சந்தைப் (Rs.) |
|---|---|---|---|---|
| 1 | ஏசீஎல் கேபல்ஸ் பீஎல்சீ | 98,712 | 114,448 | 78,532 |
| 2 | ஏஹொடி ஆதனக் கம்பனி | 58,213 | 43,746 | 40,523 |
| 3 | எயிட்கன் ஸ்பேன்ஸ் பீஎல்சீ | 297,844 | 170,422 | 141,843 |
| 4 | எயிட்கன் ஸ்பேன்ஸ் ஹொடல் பீஎல்சீ | 206,275 | 102,652 | 69,699 |
| 5 | பைரஹா பார்ம்ஸ் பீஎல்சீ | 287,633 | 217,186 | 175,669 |
| 6 | காசன் கம்பர்பெச் பீஎல்சீ | 16,147 | 6,427 | 6,499 |
| 7 | சென்ட்ரல் பினேன்ஸ் பீஎல்சீ | 256,280 | 226,335 | 208,681 |
| 8 | சிலோன் இன்வென்ஸ்ட்மென்ட்ஸ் | 8,523 | 3,489 | 3,058 |
| 9 | சிலோன் காடியன் முதலீட்டுக் கம்பனி | 143,302 | 54,992 | 42,717 |
| 10 | கலம்பு போட்லன்ட் பீஎல்சீ | 55,323 | 13,231 | 13,301 |
| 11 | கொமர்க்ஷல் வங்கி பீஎல்சீ | 1,066,007 | 1,080,308 | 1,045,665 |
| | கொமர்க்ஷல் வங்கி (நூஒ) பீஎல்சீ | 464,740 | 406,541 | 382,421 |
| 12 | சீஜசீ ஹோல்டின்ஸ் பீஎல்சீ | 28,170 | 20,479 | 15,177 |
| 13 | டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ | 646,944 | 488,524 | 494,506 |
| 14 | டொக்யார்ட் பீஎல்சீ | 442,105 | 131,986 | 152,479 |
| 15 | டிப்ட் புரொடக்ட்ஸ் பீஎல்சீ | 2,120 | 1,431 | 1,402 |
| 16 | ஈடன் ஹொடல்ஸ் பீஎல்சீ | 75,886 | 21,356 | 22,464 |
| 17 | எக்ஸ்போ லங்கா பீஎல்சீ | 43,026 | 21,966 | 18,828 |
| 18 | ஹேர்காபி பீஎல்சீ | 138,996 | 117,124 | 113,611 |
| 19 | ஹற்றன் நெக்ஷனல் வங்கி (நூஒ) பீஎல்சீ | 96,736 | 106,221 | 110,485 |
| 20 | ஜனசக்தி இன்சுவரன்ஸ் பீஎல்சீ | 14,093 | 10,024 | 9,655 |
| 21 | ஜோன் கீல்ஸ் பீஎல்சீ | 15,800 | 10,199 | 9,162 |
| 22 | ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பீஎல்சீ | 2,780,328 | 2,440,894 | 2,504,523 |
| 23 | களனி கேபல்ஸ் பீஎல்சீ | 9,032 | 12,424 | 9,461 |
| 24 | லங்கெம் சிலோன் பீஎல்சீ | 16,823 | 4,937 | 3,291 |
| 25 | லாப் கேஸ் பீஎல்சீ | 1,631 | 1,557 | 1,083 |
| 26 | தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ | 815,942 | 891,477 | 809,793 |
| 27 | பீபல்ஸ் லீசிங்க பீஎல்சீ | 57,407 | 40,289 | 40,053 |
| 28 | பிரமல் கிளாஸ் பீஎல்சீ | 32,246 | 20,035 | 21,925 |
| 29 | புரொபர்டி டிவலொப்மன்ட்ஸ் பீஎல்சீ | 5 | 31 | 29 |
| 30 | ரேணுகா ஹோல்டிங்ஸ் பீஎல்சீ | 114,533 | 61,492 | 71,984 |
| 31 | ரிசர்ஸ் வலுச்சக்தி பீஎல்சீ | 48,544 | 34,108 | 28,714 |
| 32 | ரோயல் செரமிக் பீஎல்சீ | 52,567 | 55,604 | 54,885 |
| 33 | சம்பத் வங்கி பீஎல்சீ | 83,148 | 107,366 | 136,975 |
| 34 | செலான் வங்கி பீஎல்சீ | 303,014 | 278,582 | 267,432 |
| | செலான் வங்கி (நூஒ) பீஎல்சீ | 42,486 | 35,177 | 34,546 |
| 35 | சிங்கர் பினேன்ஸ் பீஎல்சீ | 23,608 | 23,153 | 17,540 |
| 36 | இலங்கை டெலிகொம் பீஎல்சீ | 110,326 | 120,530 | 93,782 |
| 37 | டிரான்ஸ் ஏசியா பீஎல்சீ | 37,073 | 53,191 | 50,903 |
| 38 | வெலிபல் பவர் பீஎல்சீ | 46,779 | 45,740 | 39,503 |
| 39 | வெலிபல் வன் பீஎல்சீ | 43,227 | 31,860 | 30,482 |
| | **மொத்தம்** | **9,081,594** | **7,627,534** | **7,373,281** |

பட்டியல் படுத்தப்படாத கம்பனிகளின் பங்குகள் 2017 12 31 ஆம் திகதிக்கு

| | நிறுவனத்தின் பெயர் | விற்பனை விலை (ரூ) | தேறிய சொத்துக்களின் பெறுமதி (ரூ) |
|---|---|---|---|
| 1 | வரையறுக்கப்பட்ட பிச் ரேடிங் லங்கா | 1,649 | 2,477 |
| 2 | வரையறுக்கப்பட்ட பெஸ்ட் கெபிடல் டிசரீஸ் | 73,650 | 130,567 |
| | **மொத்தம்** | **75,299** | **133,044** |

31/12/2017 ஆம் திகதியன்று துணை நிறுவனங்களின் முதலீடுகள்

| | நிறுவனத்தின் பெயர் | விற்பனை விலை (ரூ) |
|---|---|---|
| 3 | இலங்கை உப்புக் கம்பனி | 470,961 |
| | | **470,961** |

பட்டியலிடப்பட்ட பங்குகள் - வியாபாரம் செய்தல்

| | நிறுவனத்தின் பெயர் | விற்பனை விலை (ரூ.'000) | சாதாரண பெறுமதி (ரூ. '000) | சந்தை பெறுமதி (ரூ. '000) |
|---|---|---|---|---|
| 1 | ஏசீஎல் கேபல்ஸ் பீஎல்சீ | 153,062 | 157,816 | 108,290 |
| 2 | கொமர்க்ஷல் வங்கி பீஎல்சீ | 1,117,913 | 1,099,886 | 1,073,141 |
| | கொமர்க்ஷல் வங்கி (டிஓ) பீஎல்சீ | 114,495 | 113,261 | 106,541 |
| 3 | டிப்ட் புரொடக்ட்ஸ் பீஎல்சீ | 163,099 | 114,130 | 111,764 |
| 4 | ஹற்றன் நெக்ஷனல் வங்கி பீஎல்சீ | 144,705 | 153,181 | 172,050 |
| | ஹற்றன் நெக்ஷனல் வங்கி (டிஓ) பீஎல்சீ | 57,739 | 62,650 | 65,164 |
| 5 | ஜோன் கீல்ஸ் பீஎல்சீ | 588,903 | 634,888 | 656,796 |
| 6 | இலங்கை ஐஓசீ பீஎல்சீ | 92,236 | 75,334 | 65,947 |
| 7 | லாப் கேஸ் பீஎல்சீ | 6,393 | 5,382 | 3,742 |
| 8 | செலான் வங்கி பீஎல்சீ | 16,146 | 15,118 | 14,513 |
| | செலான் வங்கி (டிஓ) பீஎல்சீ | 87,667 | 87,667 | 84,436 |
| 9 | சிங்கர் பினேன்ஸ் பீஎல்சீ | 48,443 | 44,976 | 34,073 |
| 10 | டிபே லங்கா பீஎல்சீ | 11,529 | 18,230 | 14,550 |
| | **மொத்தம்** | **2,602,329** | **2,582,518** | **2,511,005** |

31/12/2017 ஆம் திகதியன்று பட்டியலிடப்பட்ட அலகு பொறுப்புக்கள்

| | நிறுவனத்தின் பெயர் | விற்பனை விலை (ரூ. '000) | சாதாரண பெறுமதி (ரூ. '000) | சந்தை பெறுமதி (ரூ. '000) |
|---|---|---|---|---|
| 1 | கொம்டிரஸ்ட் பங்கு நிதியம் | | 40,021 | 40,000 |
| 2 | தேசிய பங்கு நிதியம் | 47,549 | 162,505 | 163,770 |
| 3 | நாமல் குரொத் நிதியம் | 10,000 | 128,360 | 135,600 |
| | **நிதியம்** | **77,744** | **330,886** | **339,370** |

## 1. தாபனத் தகவல்கள்

### 1.1. சட்ட மற்றும் இட அமைவு

1980ம் ஆண்டின் 46 ஆவது இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் 1981ம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி நிறுவப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை (ETF) ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனமாகும். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அபிவிருத்திப் பணிகள் அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது.

இலங்கை சோல்ட் லிமிடட் எனப்படும் வரையறுக்கப்பட்ட உப்புக் கம்பனி இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு வரையறுக்கப்பட்ட பொது கம்பனியாகும். கம்பனியின் பிரதான வர்த்தகத் தளம் மற்றும் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் ஹம்பாந்தோட்டை, மகாலேவாயாவில் அமைந்துள்ளது.

### 1.2. பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

இவ்வாண்டினுள், இந்நிதிக் கூற்றுக்களுக்குள் இருந்த வண்ணம் செயற்படுத்தப்பட்ட கம்பனியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு :

| கம்பனியின் பெயர் | வியாபாரத்தின் தன்மை |
|---|---|
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை | அரசாங்க ஓய்வூதியத் திட்டத்திற்கு உரித்தாகாத எல்லா அரசாங்கத் துறை ஊழியர்களும் எல்லா தனியார் துறை ஊழியர்களும் இந்நிதியத்தின் உறுப்பினர்களாவதுடன், அவர்களின் தொழில்தருநர்கள் அவ்வூழியர்கின் மொத்த வருவாயில் 3% இனை மாதாந்தம் நிதியத்திற்குப் பங்களித்தல் வேண்டும். மேலும் இந்த நிதியமானது புலம்பெயர் மற்றும் சுய தொழில் துறையினரையும் உள்ளடக்குகின்றது. இது எதிர்காலத்தில் மேலும் விரிவுபடுத்தப்படவுள்ளது. நிதியத்தினை நிர்வகித்தல் தவிர, ETF சபை, அதன் உறுப்பினர்களுக்கு அவர்களது பணிபுரியும் காலப்பகுதியில் சமூக மற்றும் நலன்புரி நன்மைகள் பலவற்றை நிறைவேற்றுவதில் ஈடுபடுகின்றது. |
| இலங்கை உப்புக் கம்பனி | கம்பனியின் பிரதான செயற்பாடுகளாக உப்பு உற்பத்தியும் விநியோகித்தலும் காணப்படுகின்றது. |

### 1.3 தாய் நிறுவனம் மற்றும் இறுதித் தாய் நிறுவனம்

கம்பனிக்கான இறுதித் தாய் நிறுவனம் ஒன்று இல்லை. - ETFB தாய் நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது.

### 1.4 வெளியிடுவதற்கான அதிகாரம் பெறும் திகதி

2017 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ETF சபையின் நிதிக் கூற்றுக்களை 2018 மார்ச் மாதம் 02 ஆந் திகதியன்று பணிப்பாளர் சபையின் தீர்மானம் பிரகாரம் வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 2. முக்கியமான கணக்கியற் கொள்கைகளின் சுருக்கம்

### 2.1 பொதுவான கொள்கைகள்

#### 2.1.1 நிதி நிலைமைக் கூற்றுக்களை முன்வைத்தல்

நிதி நிலைமைக் கூற்றில் முன்வைக்கப்பட்ட நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தன்மையைக் கொண்டு வகைப்படுத்தப்பட்டு மற்றும் அவை தொடர்பில் திரவத்தன்மையைப் பிரதிபலிக்கும் பொருட்டு பட்டியலிடப்படுகின்றன. நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்கு சரிப்படுத்தல்கள் ஏற்படுத்தப்படவில்லை. 12 மாதங்களுக்குள் மற்றும் அறிக்கையிடும் திகதியிலிருந்து 12 மாதங்களுக்குப் பிறகு மீட்சி அல்லது தீர்த்தல் மீதான பகுப்பாய்வொன்று இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

#### 2.1.2 இணக்கக் கூற்று

2017 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மற்றும் அப்போது முடிவுற்ற ஆண்டிற்கான, நிறுவனத்தின் கணக்கியற் கொள்கைள் மற்றும் குறிப்புக்கள் ('நிதிக் கூற்றுக்கள்') உள்ளடங்கலாக நிதி நிலைமைக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (SLFRS/LKAS) இணங்குகின்றன. இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் என்பன 2007 இன் கம்பனிகள் சட்ட இல. 07 இன் தேவைகளின் பிரகாரம் இணங்குகின்றன.

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (SME களுக்கான SLFRS) வழங்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் டுளுடு இன் நிதிக் கூற்றுக்கள்

தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் என்பன 2007 இன் கம்பனிகள் சட்ட இல. 07 இன் தேவைகளின் பிரகாரம் ஆகும்.

### 2.1.3 முக்கியமான கணக்குகளின் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

சபை எதிர்காலத்திற்காக குறிப்பிட்ட சில மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்கின்றது. எதிர்காலத்திற்கான எதிர்பார்ப்புகள் உட்பட வரலாற்று ரீதியான அனுபவம் மற்றும் ஏனைய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புக்கள் தொடர்ச்சியாக கணிக்கப்படுகின்றன.

SME களுக்கான SLFRS உடன் இணங்குமாறு இலங்கை உப்புக் கம்பனி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு சில தீர்க்கமான கணக்கீட்டு மதிப்பீடுகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. நிதிக் கூற்றுக்களுக்கு முக்கியமான ஊகங்கள் மற்றும் மதிப்பீடுகள் கொண்ட விடயங்கள் அல்லது உயர்ந்த அளவிலான தீர்ப்பு அல்லது சிக்கல் கொண்ட விடயங்கள் என்பன பின்வருமாறு எடுத்துக்காட்டப்படுகின்றன.

#### தீர்ப்புக்கள்

#### பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்:

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், இழப்புக்கள் பயன்படுத்தக்கூடியதற்கு மாறாக வரிக்குட்பட்ட இலாபம் கிடைப்பதில் சாத்தியப்பாடு உள்ளது என்ற அளவிற்கு எல்லா பயன்படுத்தப்படாத வரி இழப்புக்களும் இனங்காணப்படும். முக்கியமான முகாமைத்துவத் தீர்ப்பு, எதிர்கால வரித் திட்டமிடல் உபாயங்களுடன் எதிர்கால வரிக்குட்பட்ட இலாபங்களின் வாய்ப்பு மற்றும் மட்டத்தின் அடிப்படையில் இனங்காண முடியுமான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் அளவினைத் தீர்மானிப்பதற்கு தேவைப்படுகின்றது.

### 2.1.4 அளவிடுதலின் அடிப்படை

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சிலவற்றைத் தவிர நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவின் அடிப்படையாகக் கொண்டு நியாயமான விலையில் அளவிடப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

LSL இன் நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.1.5 தொழிற்படு மற்றும் முன்வைத்தல் நாணயம்

கம்பனியின் புழக்கத்திலுள்ள நாணயமான இலங்கை ரூபாவில் இந்நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எல்லா நிதிசார் தகவல்களும் இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளன.

### 2.1.6 தொடர்ச்சியான வியாபார நிலமை

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் முகாமை தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடர்வதற்கான சபையின் இயலுமையை மதிப்பீடு செய்துள்ளதுடன், எதிர்வரும் எதிர்காலத்திற்கு வர்த்தகத்தில தொடர்ந்தும் ஈடுபடுவதற்கான வளங்களை சபை கொண்டுள்ளது என்பதில் திருப்தியடைந்துள்ளது. மேலும், தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடருவதற்கு சபையின் இயலுமை மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை ஏற்படுத்தக் கூடிய ஏதேனும் நிச்சயமற்ற தன்மைகள் குறித்து முகாமை அறியவில்லை. அதனால், நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தும் தொடர்ச்சியான நிலைப்பாட்டின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

இலங்கை உப்புக் கம்பனியின் பணிப்பாளர்கள் தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடர்வதற்கான சபையின் இயலுமையை மதிப்பீடு செய்துள்ளதுடன், அவர்கள் வர்த்தகத்தை நிறுத்தவோ அல்லது கலைப்பதற்கோ எண்ணவில்லை.

### 2.1.7 ஒப்பீட்டுத் தகவல்

கணக்கியற் கொள்கைகள் கம்பனியால் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் கடந்த ஆண்டுடன் இசைவானவையாகவும் உள்ளன.

### 2.2 ஒருங்கிணைவின் அடிப்படை

#### அ) ஒருங்கிணைவு

ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2017 டிசம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குகின்றன.

துணை நிறுவனமானது, குழுமம் கட்டுப்பாட்டினைப் பெற்றுக்கொண்ட நாளாகிய, கையகப்படுத்திய நாள் முதல் ஒருங்கிணைக்கபட்டுள்ளதுடன் அத்தகைய கட்டுப்பாடு முடிவடையும் நாள் வரை தொடர்ந்தும்

ஒருங்கிணைக்கபட்டிருக்கும். துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் தாய் நிறுவனத்தைப் போன்றே அறிக்கையிடும் அதே காலப்பகுதியில் தயாரிக்கப்படும்.

எனினும், குழு கணக்கியற் கொள்கைகளுள் முன்னிலைப்படுத்தப்பட்ட இரு நிறுவனங்களினதும் கணக்கியற் கொள்கைகள் வித்தியாசமானவை. அவை குழுமத்திற்குரிய கணக்கீட்டுக் கொள்கைகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

**ஆ) துணை நிறுவனங்கள்**

துணை நிறுவனங்களாவன, வாக்குரிமைகளின் அரைப்பகுதிக்கும் மேலாக பங்குரிமையினைப் பொதுவாகக் கொண்ட செயற்பாட்டு மற்றும் நிதிசார் கொள்கைகளை நிர்வகிப்பதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆற்றலைக் கொண்ட குழுமத்தாலான நிறுவனங்களாகும். குழுமம் வேறோரு நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகின்றதா என மதிப்பிடும் போது நடைமுறைப்படுத்தக் கூடியதும் அல்லது மாற்றக்கூடியதுமான சாத்தியமான வாக்குரிமைகளின் நிலைப்பாடு மற்றும் விளைவு கருத்திற் கொள்ளப்படும். குழுமத்திற்கு கட்டுப்பாட்டினை மாற்றப்பட்ட நாள் முதல் துணை நிறுவனங்கள் முற்றாக ஒருங்கிணைக்கப்படும். கட்டுப்பாடு நிறுத்தப்பட்ட நாளிலிருந்து அவை ஒருங்கிப்பினை இழக்கும்.

கம்பனியிதும் மற்றும் அதன் துணை நிறுவனங்களினதும் எல்லா சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிலும் மற்றும் ஒருங்கிணைப்பிலும உள்ளடங்கிய கம்பனியின் மற்றும் ஒருங்கிணைப்பில் உள்ளடங்கிய அதன் துணை நிறுவனங்களின் வருடத்திற்கான மொத்த இலாபங்கள் மற்றும் நட்டங்கள் முறையே விபரமான வருமானத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட கூற்றில் மற்றும் நிதி நிலைமைக் கூற்றிலும் காட்டப்பட்டுள்ளன.

**இ) அறிக்கையிடும் திகதி**

12 மாதங்களுடன் முடிவடையும் டிசம்பர் 31ஆந் திகதியான பொதுவான அறிக்கையிடும் காலப்பகுதியில் துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும்.

## 2.3 இலாபம் மற்றும் நட்டத்தினை அளவிடுவதன் அடிப்படை

### 2.3.1 வருவாய்

பொருட்களின் விற்பனை மூலமான வருவாய் பொருட்கள் வழங்கப்படும் போது மற்றும் உரிமை கடந்து விட்ட போதும் இனங்காணப்படும். கிடைத்தவை அல்லது கிடைக்க வேண்டியவை, கழிவுகளின் தேறிய தொகை மற்றும் அரசாங்கத்தின் சார்பாக சேகரிக்கப்பட்ட விற்பனை தொடர்பிலான வரிகள் ஆகியவற்றின் நியாயமான பெறுமதியினைக் கருத்திற் கொண்டு வருவாய் அளக்கப்படும். வருவாய் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் திட்டவட்டமான இனங்காணல் பிரமாணங்கள் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

**பொருட்களின் விற்பனை**

பொருட்களின் விற்பனை மூலமான வருவாய் சாதாரணமாக பொருட்களை வழங்குகையில் கொள்வனவாளருக்கு பொருட்களின் உடைமையுரிமையின் குறிப்பிடத்தக்க இடர்கள் மற்றும் வெகுமதிகள் மாற்றப்படும் போது இனங்காணப்படும்.

**சேவைகளை வழங்குதல்**

சேவைகளை வழங்குவதன் மூலமான வருவாயானது, ஒவ்வொரு ஒப்பந்தத்திற்குமான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட ஊழிய மணித்தியாலங்களின் வீதமாக நடைபெற்ற ஊழிய மணித்தியாலத்தினைக் கணக்கிடுவதன் மூலம் தீர்மானித்து நிறைவடையும் கட்டத்திற்கு குறிப்பிடுவதன் மூலம் இனங்காணப்படும். ஒப்பந்த முடிவின் நம்பகத்தன்மையை அளவிட முடியாத சந்தர்ப்பத்தில் வருவாய் மீட்டெடுக்கக் கூடிய செலவினங்களுக்கு இனங்காணப்படும்.

**வட்டி**

வருவாய் சொத்து மீதான பயனுறுதிமிக்க வட்டியை கணிப்பிடும் நேர விகித அடிப்படையில் வருவாய் இனங்காணப்படும்.

### 2.3.2 வட்டி மற்றும் ஒத்த வருமானமும் செலவும்

கடன் தீர்ப்பனவுச் செலவில் அளவிடப்படும் எல்லா நிதிச் சாதனங்களுக்காக நிதிச் சொத்துக்களையுடைய வட்டி விற்பனைக்கு உள்ளவையாகவும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் பெயர் குறிப்பிடப்பட்ட நிதிச் சாதனங்களாகவும் வகைப்படுத்தப்படுவதுடன், வட்டி வருமானம் அல்லது செலவு பயனுறுதிமிக்க வட்டி வீதத்தைப் (EIR) பயன்படுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. நிதிச்சொத்துக்கள் அல்லது நிதிப் பொறுப்புக்கள் மீதான தேறிய காவுகைத் தொகைக்கு பொருத்தமான விதத்தில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகள் அல்லது

கிடைப்பனவுகளை நிதிச் சொத்துக்களின் குறுகிய கால அல்லது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட் காலத்தினூடாக நுஜசு துல்லியமாகக் தள்ளுபடி செய்கின்றது. நிதிச் சாதனங்களின் எல்லா ஒப்பந்த ரீதியான நிபந்தனைகளையும் (உதாரணமாக, முன்கொடுப்பனவு விருப்பபப்டிகள்) மதிப்பீட்டுக் கணக்கில் வைப்பதுடன், எதிர்கால பற்று நட்டங்கள் அல்லாமல், EIR இன் முக்கிய அங்கமாக உள்ளதும் சாதனங்களுக்கு நேரடியான காரணிகளாக இருக்கக்கூடியதுமான ஏதேனும் கட்டணங்களை அல்லது ஆதாயம் சார் செலவினங்களை உள்ளடக்குகின்றது. வட்டி வருமானம் கூப்பன் வருமானத்தை மற்றும் சாதனங்களின் தவனைப்பணம் அல்லது விலைக்கழிவின் கடன்கழிப்பு மீதான ஏதேனும் இலாபத்தையோ அல்லது நட்டத்தையோ உள்ளடக்குகின்றது.

நிதிச்சொத்தொன்றின் பெறுமதி அல்லது பெறுமதி இழப்பு நட்டம் காரணமாக குறைக்கப்பட்ட ஒத்த நிதிச் சொத்துக்களின் தொகுதி பதிவு செய்யப்பட்டதும், பெறுமதி இழப்பு நட்டத்தினை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப்பாய்ச்சலை தள்ளுபடி செய்வதற்கு பயன்படும் மூல வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி வட்டி வருமானம் தொடர்ந்தும் இனங்காணப்படும்.

அவ்வருடத்தின் டிசம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு நிதியத்தின் ஒவ்வொரு அங்கத்தவரினதும் தனிப்பட்ட கணக்கின் பற்றுக்கான தொகை மீதான, நிதியத்தின் பண முதலீட்டிலிருந்து வருமானத்தின் மூலம், அவ்வப்போது அமைச்சரின் மற்றும் நிதிசார் விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒப்புதலோடு சபை நிர்ணயிக்கும் ஒவ்வொரு வருடமும் செலுத்தப்பட வேண்டிய, மூன்று சதவீதத்திற்கு குறையாத, சபை அவ்வாறான வீதத்தில் வட்டி செலுத்த வேண்டும் என்ற நுவுகுட சட்டத்தின் 22ஆவது பிரிவின் பிரகாரம் வட்டிச் செலவினம் இனங்காணப்படும்.

### 2.3.3 பங்கிலாப வருமானம்

பங்கிலாப இலாபமானது கொடுப்பனவைப் பெறுவதற்கான தாபனத்தின் உரிமை ஏற்றுக்கொள்ளப்படும் போது இனங்காணப்படுகின்றது. நிதியத்தின் பண முதலீட்டினால் தேறக்கூடிய இலாபங்களில் இருந்து சபை பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் பங்கிலாபச் செலவு இனங்காணப்படும்.

### 2.3.4 ஏனைய வருமானங்கள்

ஊழியர்களின் சேவைக் காலத்துள் கடன் கழிப்பு செய்யப்பட்ட அலுவலர் கடன்களின் நியாயமான பெறுமதி அறவீடு மீதான வட்டி வருமானத்தை தவிர்ந்த கொடுப்பனவைப் பெறுவதற்கான தாபனத்தின் உரிமை ஏற்றுக்கொள்ளப்படும் போது ஏனைய வருமானங்கள் இனங்காணப்படுகின்றன.

## 2.4 வரிவிதிப்பு

### 2.4.1 தற்போதைய வரிகள்

கடந்த ஆண்டுகளில் செலுத்த வேண்டிய வரிக்கு ஏதேனும் சரிப்படுத்தல்கள் மற்றும் அமுலாக்கப்பட்ட அல்லது அறிக்கையிடும் திகதியில் குறிப்பிடத் தக்க வகையில் அமுலாக்கப்பட்ட வட்டி வீதங்களைப் பயன்படுத்தி வருடத்திற்கான வசிக்குட்பட்ட வருமானம் அல்லது நட்டதின் மீதான எதிர்பார்க்கப்பட்ட வரி செலுத்த வேண்டியவை அல்லது கிடைக்க வேண்டியவையே தற்போதைய வரி ஆகும்.

கடன் கழிப்பு ஆதாயம் மற்றும் வருமான வரிச் செலவினம் குறித்து ஒரு நியாயமான நோக்கினை வழங்குவதற்கு கடன்கழிப்பு ஆதாயக் கணக்கிற்கு மீளச் சேர்ப்பதற்கு ஆண்டிற்ாகன திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்கள் மீதான ஈட்டப்பட்ட வருமானத்திற்கு பொருந்தக்கூடிய நிறுத்தி வைப்பு வரியின் (WHT) விகிதாசாரத்தினை இனங்காண்பதற்கு சபை அதன் கணக்கியற் கொள்கைகளை மாற்றியது.

தற்போதைய செலுத்தவேண்டிய வரி வருடத்திற்கான வரிக்குட்பட்ட இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. வருமான வரிக்கான ஏற்பாடு உள்நாட்டு வருவாய் சட்டத்தின் ஏற்பாட்டின் பிரகாரம் கணக்கிடப்பட்ட மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்டுள்ள வாறு வருமானம் மற்றும் செலவினக் கூறுகளின் அடிப்படையில் உள்ளது.

### 2.4.2 பிற்போடப்பட்ட விரிவிதிப்பு

ஐந்தொகைத் திகதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகளுக்கு இடையிலான எல்லா தற்காலிக வித்தியாசங்கள் மற்றும் அறிக்கையிடும் காலத்திற்கான அவற்றின் காவுகைத் தொகைகள் மீது பொறுப்பு முறைமையினைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி வழங்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் எதிர்காலத்தில் வரிக்குட்பட்ட இலாபத்தினை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் எல்லா தற்காலிக வித்தியாசங்களுக்கும் இனங்காணப்படும். பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் எதிர்காலத்தில் வரிக்குட்பட்ட இலாபத்தினை மற்றும் ஏதேனும் பயன்படுத்தப்படா வரி இழப்புக்களை அல்லது பயன்படுத்தப்படா வரிக்கடன்களைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் எல்லா தற்காலிக வித்தியாசங்களுக்கும் இனங்காணப்பட்டு

மீட்கப்படமாட்டாது என்பதை விட வாய்ப்பு உள்ள தற்போதைய அல்லது மதிப்பிடப்பட்ட எதிர்கால வரிக்குட்பட்ட இலாபம் மீதான உயர்ந்த தொகையில் பிற்போடப்பட்ட சொத்துக்கள் அளவிடப்படும்.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் தேறிய காவுகைத் தொகை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் எதிர்கால வரிக்குட்பட்ட இலாபங்களின் தற்போதைய மதிப்பீட்டினைப் பிரதிபலிப்பதற்கு சரிப்படுத்தப்படும். சரிப்படுத்தல்கள் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும்.

அமுலாக்கப்பட்ட அல்லது அறிக்கையிடும் திகதியில் குறிப்பிடத் தக்க வகையில் அமுலாக்கப்பட்ட வரி வீதங்களின் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரிச் சொத்து தேறப்பட வேண்டும் அல்லது பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு தீர்க்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கும் காலங்களில் வரிக்குட்பட்ட இலாபத்திற்கு (வரி இழப்பு) பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வரி வீதங்களில் பிற்போடப்பட்ட வரி கணக்கிடப்படும்.

### 2.5 வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம்

கம்பனியின் புழக்கத்திலுள்ள நாணயமான இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பரிவர்த்தனை திகதியில் நடைமுறையிலுள்ள தொழிற்பாட்டு நாணய விகிதத்தில் ஆரம்பத்தில் வெளிநாட்டு நாணயங்களில் பரிவர்த்தனைகள் பதிவுசெய்யப்படும். ஐந்தொகைத் திகதியில் நடைமுறையில் உள்ள பரிமாற்றத்தின் தொழிற்பாட்டு நாணய விகிதத்தில் மீள்பரிமாற்றம் செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நிர்ணயிக்கப்படும். எல்லா வித்தியாசங்களும் இலாபம் அல்லது நட்டத்திற்கு எடுக்கப்படும். வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்றுச் செலவின் பிரகாரம் அளவிடப்படும் நாணயமற்ற உருப்படிகள் ஆரம்ப கொடுக்கல் வாங்கல்களின் திகதியகளில் உள்ளவாறு பரிமாற்ற வீதங்களைப் பயன்படுத்தி பரிமாற்றம் செய்யப்படும். வெளிநாட்டு நாணயத்தில் நியாயமான பெறுமதியில் அளவிடப்படும் நாணயமற்ற உருப்படிகள் நியாயமான பெறுமதி தீர்மானிக்கப்பட்ட திகதியில் பரிமாற்ற வீதங்களைப் பயன்படுத்தி பரிமாற்றம் செய்யப்படும்.

### 2.6 கடந்த ஆண்டு இலாபத்திற்கு சரிப்படுத்தல்

நிதிக் கூற்றுக்களின் ஒப்பிடுகையினை மேம்படுத்துவதால் தவறுகளைத் திருத்துதல் கடந்தகால அடிப்படையில் சரிப்படுத்தப்பட்டுள்ளன. அதன் படி, வைத்திருக்கும் வருவாய்களின் ஆரம்ப நிலுவை அவ்வாறான தவறுகளைத் திருத்தியதன் பின்னர் மீளக்குறிப்பிடப்படும். பின்வரும் முன்கூட்டிய தவறுகள் 2017 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டு திருத்தப்பட்டுள்ளன.

அ) கடந்த ஆண்டுக்குரிய செம்மையாக்கல்களின் போது பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன.

| வழுவின் தன்மை | ரூ. (000) |
|---|---|
| அனுசரணையின்றி நடாத்தப்பட்ட 35 ஆம் ஆண்டு நிறைவு விழா செலவு மீதி | 823 |
| 35 ஆம் ஆண்டு நிறைவு விழாவுக்கு சபையினால் செலவிடப்பட்டட தொகை | 2,244 |
| கையளிக்கப்பட்டு உரிமைக் கோரப்படாத மீள் செலுத்துகை மீதான பங்கிலாபம் மற்றும் வட்டி - 2015 | 281 |
| கையளிக்கப்பட்டு உரிமைக் கோரப்படாத மீள் செலுத்துகை மீதான பங்கிலாபம் மற்றும் வட்டி - 2016 | 36 |
| கையளிக்கப்பட்டு மாற்றீடு செய்யப்பட்ட நலன்கள் மீதான பங்கிலாம் மற்றும் வட்டி - 2015 | 2,650 |
| கையளிக்கப்பட்டு மாற்றீடு செய்யப்பட்ட நலன்கள் மீதான பங்கிலாம் மற்றும் வட்டி - 2016 | 364 |

ஆ) அங்கத்துவ நிதியத்திற்கு செய்யப்பட்ட சீறாக்கங்கள் பின்வருமாறு

(ஆ) (1) 2016 ஆம் ஆண்டு அங்கத்துவ நிதியத்தில் மேற்கொள்ளப்பட்ட சீறாக்கங்கள்

| வழுவின் தன்மை | ரூ. (000) |
|---|---|
| பங்கிலாபம் மற்றும் வட்டி - 2016 வரை | 317 |
| பங்கிலாபம் மற்றும் வட்டி - 2016 வரை | 3,014 |

இ) சொத்தொன்றாக இனங்காணப்பட வேண்டிய வரி கிடைப்பனவு உள்ளமையால் கடந்த காலத்திற்கான தேசிய வரியிலிருந்து வரிக்கடனை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை கோரவில்லை.

கடந்த நிதி ஆண்டின் போது தவறினைத் திருத்துவதற்காக ஆரம்ப அறிக்கையிடும் திகதியில் (2015 ஜனவரி முதலாம் திகதி) வைத்திருக்கப்படும் வருவாய்கள் 128 மில்லியன் ரூபாயால் சரிப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் அந்த அந்தத் தொகை கடந்த ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்பின் ஆரம்ப மீதிகள் சீறாக்கம் செய்யப்பட்ட ரூ. 30,180,783.57 தொகையை மேலும் அதிகரிக்க வேண்டியுள்ளது

## 2.7 நிதிச் சாதனங்கள்

### 2.7.1 நிதிச் சாதனங்களின் ஆரம்ப அளவீடு

ஆரம்ப இனங்காணலில் நிதிச் சாதனங்களின் வகைப்படுத்தலானது அவற்றின் குறிக்கோளும் பண்புகளும் மற்றும் அவற்றைப் பெறுவதிலான முகாமையின் நோக்கு ஆகியவற்றில் தங்கியுள்ளது. எல்லா நிதிச் சாதனங்களும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் பதிவு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள், நிதிப் பொறுப்புக்களின் நிலைமையினைத் தவிர்ந்த கொடுக்கல் வாங்கல் செலவினங்களுடன் அவற்றின் நியாயமான பெறுமதியில் ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றன.

### 2.7.2 இனங்காணும் திகதி

எல்லா நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் வியாபாரம் நடைபெறும் நாளன்று ஆரம்பத்தில் இனங்காணப்படும், அதாவது, சாதனங்களின் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளுக்கு ஒரு தரப்பினராக சபை ஆளாகும் நாளாகும். ‘விதிமுறைக்கேற்ற வர்த்தகங்கள்’, சந்தையில் விதிகள் அல்லது மரபு முறைகளால் அமைக்கப்பட்ட நேர சட்டகத்துள் சொத்துக்களின் விநியோகம் அவசியப்படும் நிதிச் சொத்துக்களின் விற்பனைகள் அல்லது கொள்வனவுகள் என்பனவற்றை இது உள்ளடக்குகின்றது.

### 2.7.3. இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதி (FVTPL)

இப்பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப்பொறுப்புக்கள் என்பன முகாமையினால் ஆரம்ப இனங்காணலின் போது பெயர் குறிக்கப்பட்டவைகள் ஆகும். பின்வரும் பிரமாணங்கள் நிறைவேற்றப்படும் போதும் ஒவ்வொரு சாதனம் என்ற அடிப்படையில் பெயர் குறிக்கப்படல் வரையறுக்கப்படும் போதும், ஆரம்ப இனங்காணல் மீதான இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் சாதனமொன்றை முகாமை குறிப்பிட்டுத் தெரிவிக்கும்:

அ) பெயர் குறிக்கப்படுவதானது, வேறுபட்ட அடிப்படையில் அவற்றின் மீதான இலாபங்கள் அல்லது நட்டங்களை இனங்காணுதல், அல்லது சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை அளவிடுவதால் எழக்கூடிய ஒத்திசைவில்லாத கையாளுகையை இல்லாதொழிக்கும் அல்லது குறிப்பிடத்தக்களவில் குறைக்கும்.

ஆ) சொத்துக்களும் பொறுப்புக்களும் நிதிச் சொத்துக்கள் தொகுதியின் ஒரு பகுதியாகும், நிதிப் பொறுப்புக்கள் அல்லது இரண்டுமே, ஆதார மூலங்கொண்ட இடர் முகாமைத்துவம் அல்லது முதலீட்டு உபாயங்களின் பிரகாரம் நியாயமான பெறுமதி அடிப்படையில் அவற்றின் செயலாற்றுகை மதிப்பீடு செய்யப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் நியாயமான பெறுமதியிலான நிதி நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படும். நியாயமான பெறுமதி மாற்றங்கள் ‘இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் பெயர் குறிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் மீதான தேறிய இலாபம் அல்லது நட்டத்தில்’ பதிவு செய்யப்படும். ஈட்டப்பட்ட அல்லது தாங்கும் வட்டி வினைத்திறன் மிக்க வட்டி வீதத்தினைப் (EIR) பயன்படுத்தி முறையே ‘வட்டி வருமானம்’ அல்லது ‘வட்டிச் செலவினத்தில்’ சேர்க்கப்படும். அத்துடன், பங்கிலாப வருமானது கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை ஏற்றுக்கொள்ளப்படும் போது வருமானக் கூற்றில் ‘பங்கிலாப வருமானத்தின்’ கீழ் பதிவு செய்யப்படும்.

பெறுமதியில் முக்கியமான அல்லது நீடித்த சரிவினை அடையாளங் காண்பதற்கு வியாபாரத்திற்கு விடப்படாத உரிமையாண்மை முதலீடுகளின் பெறுமதி அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டது. இந்நோக்கத்திற்காக சந்தைப் பெறுமதியின் சரிவிற்கு மட்டுப்படுத்தப்படாத ஆனால் உபாயமிகு நோக்கு மற்றும் உண்மையான பெறுமதி போன்ற தரமிக்க காரணிகள் கொண்ட பெறுமதி இழப்பின் புறநிலை ஆதாரத்தினை முகாமை கருத்திற் கொள்கின்றது. அதன் படி பெறுமதியில் முக்கியமான அல்லது நீடித்த சரிவுள்ள (282,738 ரூபா தொகையான) குறிப்பிட்ட உரிமையாண்மை முதலீடுகள் மற்றும் சந்தர்ப்பத்தினை மீளத்திருப்புதலின் நியாயமான சாத்தியப்பாடு இல்லாமை தொடர்பில் பெறுமதி இழப்பு ஏற்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளது. இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக அவ்வாறான ஏற்பாடுகள் இனங்காணப்படுதல் வேண்டும்.

### 2.7.4 வியாபாரத்திற்கு விடப்பட்டவை

வியாபாரத்திற்கு விடப்பட்ட நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிப் பொறுப்புக்கள் நியாயமான பெறுமதியில் நிதி நிலைமைக் கூற்றில் பதியப்பட்டுள்ளன. நியாயமான பெறுதியில் மாற்றங்கள் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன. வட்டி மற்றும் பங்கிலாபம் அல்லது செலவினம் ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு ஏற்ப அல்லது கொடுப்பனவிற்கான உரிமை நிலைநிறுத்தப்படும் போது வருமானக் கூற்றில் பதியப்பட்டுள்ளது. அண்மித்த காலப்பகுதியில் விற்பனை செய்தல் அல்லது மிள்கொள்வனவு செய்தல் நோக்கத்திற்காக பிரதானமாகக் கையகப்படுத்தியுள்ள உரிமையாண்மைகள் இவ்வகைப்படுத்தலினுள் அடங்குகின்றன.

### 2.7.5 விற்பனைக்கு உள்ள முதலீடுகள் (AFS)

விற்பனைக்குள்ள முதலீடுகள் நீண்ட கால உரிமையாண்மை முதலீடு மற்றும் படுகடன் பிணையங்களைக் கொண்டுள்ளன. இவ்வகையில் உள்ள படுகடன் பிணையங்களாவன வரையறையற்ற காலப்பகுதிக்கு வைத்திருப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், திரவத்தன்மைத் தேவைகளுக்கு அனுகூலமாகவும் அல்லது சந்தை நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு அனுகூலமாகவும் விற்கப்படலாம். ஆரம்ப அளவீட்டின் பின்னர், விற்பனைக்குள்ள நிதி முதலீடுகள் நியாயமான பெறுமதியில் பிற்பட்ட காலத்தில் அளவிடப்படும்.

### 2.7.6 முதிச்சிக்கு விடப்பட்ட முதலீடுகள் (HTM)

முதிர்ச்சிக்கு விடப்பட்ட நிதி முதலீடுகளாவன தாபனம் முதிர்ச்சிக்கு விடுவதற்கான இயலுமையை மற்றும் நோக்கினைக் கொண்டுள்ள நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்ச்சிகளுடனான மரபு சாரா நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், முதிர்ச்சிக்கு விடப்பட்ட நிதி முதலீடுகள் பெறுமதி இழப்பைக் கழித்து, பிற்பகுதியில EIR ஐப் பயன்படுத்தி கடன்கழிப்புச் செலவில் அளவிடப்படும். கடன்கழிப்புச் செலவானது EIR இன் முக்கியமான பகுதியான ஈட்டுதல் மற்றும் கட்டணங்கள் மீதான ஏதேனும் கழிவு அல்லது மிகைக் கொடுப்பனவைக் கவனத்திற் கொண்டு கணிக்கப்படும். கடன் தீர்ப்பனவு வருமானக் கூற்றில் வட்டி வருமானத்தில் உள்ளடக்கப்படும். அவ்வாறான முதலீடுகளின் பெறுமதி இழப்பினால் ஏற்படக் கூடிய நட்டங்கள் வருமானக் கூற்றுக்கான குறிப்புகளில் இனங்காணப்படும்

### 2.7.7 கடன்கள் மற்றும் வருமதிகள்

கடன்களும் வருமதிகளும் செயற்படு சந்தையொன்றில் விலை குறிக்கப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான மரபு சாரா நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், முதிர்ச்சிக்கு விடப்பட்ட நிதி முதலீடுகள் பெறுமதி இழப்பைக் கழித்து, வினைத்திறன் மிகு வட்டி வீத முறைமை - EIR ஐப் பயன்படுத்தி கடன்கழிப்புச் செலவில் பிற்பகுதியில் அளவிடப்படும். கடன்கழிப்புச் செலவானது EIR இன் முக்கியமான பகுதியான ஈட்டுதல் மற்றும் கட்டணங்கள் மீதான ஏதேனும் கழிவு அல்லது மிகைக் கொடுப்பனவைக் கவனத்திற் கொண்டு கணிக்கப்படும். பெறுமதி இழப்பினால் ஏற்படக் கூடிய நட்டங்கள் ஏனைய தொழிற்படு செலவினங்களில் வருமானக் கூற்றில் இனங்காணப்படும். நியாயமான பெறுமதியில் நட்டமானது ஊழியர் செலவினமாக ஊழியர் சேவைக் காலப் பகுதியில் கடன்கழிப்புச் செய்யப்படும்.

### 2.7.8 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள்

மீள்கொள்வனவு ஒப்பந்தத்தில் முதலீடானது நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்ச்சி ஆகியவற்றைக் கொண்டுள்ளதுடன், முதிர்ச்சி முதலீட்டுக்கு விடுவதற்கு முடிவு செய்வதன் மூலமாக முதிர்ச்சிக்கு வைத்திருப்பதற்கான இயலுமையை மற்றும் உடன்பாடான எண்ணத்தைச் சபை கொண்டுள்ளது. இது ஆரம்பத்தில கொடுக்கல் வாங்கல் செலவு, ஏதேனும் இருப்பின், உட்பட நியாயமான பெறுமதியில் அளவிடப்படுவதுடன் பிற்பகுதியில் வினைத்திறன் மிக்க வட்டி வீதத்தைப் பயன்படுத்தி கடன் கழிப்புச் செலவில் அளவிடப்படும்.

#### அடிப்படை நிதிச் சாதனங்கள்

நிதிச் சொத்துக்கள் வியாபரத்திற்கு விடப்பட்ட நிதிச் சொத்துக்கள், முதிர்ச்சிக்கு விடப்பட்டவை, கடன்கள் மற்றும் வருமதிகள் மற்றும் விற்பனைக்கு உள்ள நிதிச் சொத்துக்கள் என வைகப்படுத்தப்பட்டுள்ளன. கம்பனி அதன் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை ஆரம்ப இனங்காணலின் போது தீர்மானிக்கின்றது.

#### கடன்கள் மற்றும் வருமதிகள்

கடன்கள் மற்றும் வருமதிகள் குறுங்கால வைப்புக்கள், நிலையான வைப்பு மற்றும் வியாபாரமும் ஏனைய வருமதிகளும் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. எல்லா நிதிச் சாதனங்களும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் தொடர்பில் தவிர அவற்றின் நியாயமான பெறுமதியில் மற்றும் கொடுக்கல் வாங்கல் செலவுகளில் ஆரம்பத்தில் அளவிடப்படும்.

கடன்களும் வருமதிகளும் செயற்படு சந்தையொன்றில் விலை குறிக்கப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான மரபு சாரா நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், அவ்வகை நிதிச் சொத்துக்கள் கடன்கழிப்புச் செலவில் பிற்பகுதியில் அளவிடப்படும். பெறுமதி இழப்பின் காரணமாக எழும் நட்டங்கள் விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

### நிதிப் பொறுப்புக்கள்

நிதிப்பொறுப்புக்களின் வரையறை மற்றும் ஒப்பந்திரீதியான உடன்படிக்கையின் உள்ளடக்கத்தின் பிரகாரம் இலாபம் அல்லது நட்டம் அல்லது ஏனைய நிதிப் பொறுப்புக்கள் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிப் பொறுப்புக்களாக நிதிப் பொறுப்புக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

எல்லா நிதிச் சாதனங்களும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் தொடர்பில் தவிர அவற்றின் நியாயமான பெறுமதியில் மற்றும் கொடுக்கல் வாங்கல் செலவுகளில் ஆரம்பத்தில் அளவிடப்படும்.

வட்டிக் கடன்கள் மற்றும் கடன்கள் மற்றும் ஏனைய நிதிப் பொறுப்புக்கள் (வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை) உள்ளடங்கலான நிதிப் பொறுப்புக்கள் முதலில் கையகப்படுத்துவதற்கு நேரடியாகக் காரணமாயுள்ள குறைந்த கொடுக்கல் வாங்கல் செலவில் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டு, தொடர்ந்தும் நுஜசு முறைமையினைப் பயன்படுத்தி கடன்கழிப்புச் செலவில் அளவிடப்படுகின்றன. நுஜசு இன் ஒன்றிணைந்த பகுதியான ஏதேனும் விலைக்கழிவு அல்லது தவணைப்பணம் மற்றும் செலவுகள் ஆகியவற்றைக் கணக்கில் எடுப்பதன் மூலம் கடன்கழிப்புச் செலவு கணிக்கப்படுகின்றது.

பொறுப்பின் கீழுள்ள கடப்பாடு முடிவுறச் செய்தாலோ அல்லது இரத்துச் செய்தாலோ அல்லது காலாவதியானாலோ நிதிப் பொறுப்பினை இனங்காண்பது நிறுத்தப்படும். கணிசமான அளவு மாற்றப்பட்ட நடப்பிலுள்ள பொறுப்பொன்றின் விதிகள் அல்லது அதே தரப்பிலிருந்து கணிசமான அளவு வித்தியாசமான விதிகள் ஒன்றினால ஏற்கனவே உள்ள நிதிப்பொறுப்பு மாற்றீடு செய்யப்படும்போது அவ்வகை பரிமாற்றம் அல்லது மாற்றம் ஒரு புதிய பொறுப்பின் இனங்காணல் மற்றும் மூலப் பொறுப்பின் இணங்காணல் நிறுத்தப்படல் ஆகக் கருதப்படும். மூல நிதிப் பொறுப்பின் காவுகைப் பெறுமதி மற்றும் செலுத்தப்பட்ட கவனம் ஆகியவற்றுக்கு இடையிலான வித்தியாசம் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

### 2.8 சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள்

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் உருப்படிகள் ஆரம்பத்தில் செலவில் இனங்காணப்படும். செலவானது கொள்வனவு விலை, நேரடியாக ஈர்க்கக்கூடிய செலவு மற்றும் பிரித்தெடுத்தல் மற்றும் அகற்றும் பொருட்களின் எதிர்கால தவிர்க்கமுடியாத செலவுகளின் மதிப்பிடப்பட்ட நடப்புப் பெறுமதி ஆகியவற்றை உள்ளடக்கும். தொடர்புறும் பொறுப்பு ஏற்பாடுகளுள் இனங்காணப்படும்.

மீள உபயோகத்திற்கு எடுத்தல் அல்லது ஆரம்பத்தில் மதிப்படப்பட்ட செயலாற்றுகை அளவிற்கு எதிர்பார்க்கும் எதிர்கால பொருளாதார நன்மைகளைப் பேணுதல் பொருட்டு, சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகள் மீதான பழுதுபார்த்தல் அல்லது பராமரிப்புச் செலவுகள் நடைபெறும் போது வருமானக் கூற்றில் செலவினமாக இனங்காணப்படும்.

(முதலீட்டுச் சொத்துக்கள்) மெய் ஆதனங்களைத் தவிர ஒடுக்கிய சமப்படுத்தல் முறைமைப் பயன்படுத்தி பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடுகள் கணிக்கப்படும். இறையில் காணி பெறுமானத் தேய்விற்கு உட்படுவதில்லை. சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகளின் ஏனைய எல்லா உருப்படிகளும் மீது மீதிப் பெறுமானத்தைக் கழித்து, ஏதும் இருப்பின், அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தினுள் அவற்றின் காவுகைப் பெறுமானத்தை பதிவழிப்பதற்கு பெறுமானத் தேய்வு வழங்கப்படுகின்றது. சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்தரு பொருளாதார ஆயுட்காலம் பின்வருமாறு:

| | |
|---|---|
| கணினி கருவிகள் | - 20% |
| ஏனைய கருவிகள் | - 20% |
| தளபாடங்கள் | - 15% |
| மோட்டார் வாகனங்கள் | – 25% |
| பொருத்திகளும் துணைக்கருவிகளும் | – 33.33% |

கட்டடங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு பொருளாதார ஆயுட்காலம் எஞ்சிய சமப்படுத்தற் முறைமை மீது ஆண்டுக்கு 6.67% ஆக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

சொத்துக்களின் பெறுமானத் தேய்வு மாதத்தில் அது பாவனைக்கு கிடைக்கும் போது ஆரம்பிக்கின்றதுடன் அகற்றுகை மாதத்தில் பெறுமதி குறைக்கப்படுவதில்லை.

சொத்துக்கள், பொறித் தொகுதி சார்ந்த வற்றின் அகற்றுகை அல்லது எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார

நன்மைகள் இல்லாத போது இனங்காண்பது நிறுத்தப்படும். அவ்வாறு இனங்காணப்படாத காரணத்தினால் எழக்கூடிய ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் அந்த சொத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படாத வருடத்திற்குரிய வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படமாட்டாது.

சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகளின் உருப்படிகள் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் ஏதேனும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்களைக் கழித்து வரலாற்றுச் செலவில் அளவிடப்படும். சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் பெறுமானத் தேய்விற்கு பயன்படுத்தப்படும் வருடாந்த வீதங்களைக் கழித்து சொத்துக்களின் செலவினை ஒதுக்கீடு செய்யும் பொது பெறுமானத் தேய்வு விதிக்கப்படும்:

| | |
|---|---|
| கட்டடங்கள் மற்றும் அறுதியுள்ள காணிகள் | 2.5% |
| பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் | 10% |
| கருவிகள் | 10% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | |
| - சாலை வாகனங்கள் | 10% |
| - டிராக்டர்கள் மற்றும் டிரெய்லர்கள் | 20% |
| அபிவிருத்திப் பணிகள் | 20% |
| முதர்ச்சியுற்ற பெருந்தோட்டங்கள் - தென்னை | 2% |

பெறுமானத் தேய்வு வீதம், பயன்தரு ஆயுட்காலம் அல்லது ஒரு சொத்தின் எஞ்சிய பெறுமதி ஆகியவற்றில் முக்கியமான மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளமைக்கான அறிகுறி இருப்பின், சொத்தின் பெறுமானத் தேய்வு புதிய எதிர்பார்ப்புக்களைப் பிரதிபலிப்பதற்கு எதிர்காலத்தில் திருத்தியமைக்கப்படும்.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் ஓர் உருப்படியானது அகற்றுகை அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றுகை மூலம் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் இல்லாத போது இனங்காண்பது நிறுத்தப்படும். சொத்தினை இனங்காண்பது நிறுத்தப்படுவதால் எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றுகை வருவாய்கள் மற்றும் சொத்தின் காவுகைத் தொகை ஆகியவற்றிற்கு இடையிலான வித்தயாசமாகக் கணிக்கப்பட்ட) சொத்து இனங்காண்பது நிறுத்தப்பட்ட ஆண்டில் இலாபம் அல்லது நட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- **உயிர் சொத்துக்கள்**

உயிர் சொத்துக்கள், முதிர்ச்சி அடைந்த உயிர் சொத்துக்கள் மற்றும் முதிர்ச்சி அடையாத உயிர் சொத்துக்கள் என இரு வகைப்படும். முதிர்ச்சி அடைந்த உயிர் சொத்துக்களாக அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியுமான விசேட தரத்திலுள்ள அல்லது அடிக்கடி அறுவடையயைப் பெற்றுக்கொள்ள முடியுமான சொத்துக்களாகும். முதிர்ச்சி அடையாத உயிர் சொத்துக்களாக தற்காலம் அளவில் அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியாத விசேட தரத்திற்கு உட்படாத சொத்துக்களாகும். தெங்குப் பயிர்ச் செய்கை மற்றும் நாற்று மேடைகள் உயிர் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. உடமை உயிர் சொத்துக்கள் விற்பனை செய்வதற்கோ அல்லது அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்கோ எண்ணமில்லாத போதும் விவசாய உற்பத்திகளாக அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தாத உயிர் சொத்துக்கள் உள்ளடக்கப்படும். கடந்தகால நிகழ்வொன்றின் பெறுபேறாக ஏற்புடைய சொத்துக்களுடன் பின்னிப் பிணைந்து காணப்படும் எதிர்கால பொருளாதார நலன்கள் தன்னை நோக்கி வரும் என மற்றும் அந்தச் சொத்துக்களின் சாதாரணப் பெறுமதி அல்லது செலவு நம்பகமான முறையில் அளவிட முடியுமென நிறுவனம் அனுமானிக்கும் போது மற்றும் நிறுவனத்தினால் அந்த ஏற்புடைய சொத்துக்களை கட்டுப்படுத்துகின்ற போது மாத்திரம் அந்த நிறுவனம் தனது உயிர் சொத்துக்களை இனம் காணுகின்றது. உயிர் சொத்துக்கள் தொடர்பில் நிகழும் தேய்வு முழுமையாக இலாபம் அல்லது நட்டம் பற்றிய கூற்றுக்களில் அறவீடாக காட்டப்பட்டு ஏற்புடைய நட்டத்தை உறுதியாக அறிந்துகொண்ட பின்னர் அந்த நட்டம் ஏற்பட்ட ஆண்டில் அந்த சொத்துக்களுக்குரிய தேறியவைகள் முன்கொண்டு செல்லப்படும் கணக்குகளுக்கு குறைவு செய்யப்படும்.

- **உடமையுள்ள உயிர் சொத்துக்கள்**

உடமையுள்ள உயிர் சொத்துக்கள், இல 16 இலங்கை கணக்கீட்டுத் தரங்கள் - சொத்துக்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கு அமைய அவற்றின் திரண்ட தேய்மாணம் மற்றும் மற்றும் திரண்ட குறைவு நட்டங்கள் இருப்பின் அவையும் கழிக்கப்பட்ட செலவுகளின் மீது, அளவிடப்படும். கன்றுகளை நட்டுதல்

மற்றும் அறுவடையைப் பெற்றுக்கொள்ளும் (மரக் கன்றுகள் நடப்பட்ட பிரதேசம் முதிர்ச்சியடைந்து வளர்ந்த பின்னர்) காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட காணி சீறாக்கம், மறுசீரமைப்பு, புதிதாக கன்று நடல், மீண்டும் கன்று நடல், பயிர்களை பல்வகைப்படுத்தல், துணைப் பயிர்களை நடல் மற்றும் உரம் இடல் போன்றவற்றுக்கான செலவுகள் முதிர்ச்சியடையாத பயிர்செய்கைகள் என வகைப்படுத்தப்படும். இந்த முதிர்ச்சி அடையாத பயிர்ச் செய்கைகளுக்கான நிதியிடலுக்காக பயன்படுத்தப்படும் நீண்ட கால கடன் தொகைகளுக்குரிய வட்டி உட்பட ஏனைய ஏற்புடை அவசிய செலவுகளுக்குரிய நேரடிச் செலவுகளுக்கு அமைய எடுத்துக்காட்டப்படும். வருடத்தினுள் பயன்தரக்கூடிய உடமை உயிர்ச் சொத்துக்கள் (தெங்கு) மீது ஏற்படுத்தப்படும் செலவுகள் முதிர்ச்சியடைந்த சொத்துக்களுக்கு மாற்றப்படும்.

### 2.9 முதலீட்டுச் சொத்து

கொடுக்கல் வாங்கல் செலவுகள் உட்பட முதலீட்டுச் சொத்தக்கள் ஆரம்பத்தில் செலவில் அளவிடப்பட்டன. ஆரம்ப இனங்காணலின் பிற்பாடு, அறிக்கையிடும் தினத்தில் சந்தை நிலைமைகளைப் பிரதிபலிக்கும் நியாயமான பெறுமதியில் முதலீட்டுச் சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலீட்டுச் சொத்துக்கள் மீதான நியாயமான விலையில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் காரணமாக எழக்கூடிய இலாபங்கள் மற்றும் நட்டங்கள் அவை ஏற்பட்ட காலப்பிரிவில் வருமானக் கூற்றில் உள்ளடங்குகின்றன.

சபையின் முதலீட்டுச் சொத்து விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ள காவுகைப் பெறுமதியில் உள்ள மாற்றங்களுடன் திறந்த சந்தைப் பெறுமதிக்கு ஒவ்வொரு மூன்று வருடத்திலும் மீள் மதிப்பீடு செய்யப்படும்.

கிடைக்க வேண்டிய வாடகை குத்தகைக்கு விடப்பட்ட காலப்பகுதிக்குள் நேர் கோட்டு முறைமையின் அடிப்படையில் அமைக்கப்படும். வாடகைக் குடியிருப்பாளனுக்கு ஊக்குவிப்பொன்று (வாடகை அறவிடப்படாத காலப்பகுதி போன்ற) வழங்கப்படுகையில், முதலீட்டுச் சொத்தின் காவுகைப் பெறுமதி இவ்வடிப்படையில் வாடகை வருமானமாக இனங்காணப்பட்டதன் விளைவாக பிரத்தியேகமான சொத்தொன்றாக பதியப்பட்ட ஏதேனும் தொகையை நீக்கும்.

சபைக்குச் சொந்தமான கொழும்பு 02, நவம் மாவத்தையில் அமைந்துள்ள 2 ஏக்கர் 1 ரூட் 28 பேர்சஸ் விஸ்தீரணமுள்ள காணியொன்று காணப்படுகின்றது. அரசாங்க விலைமதிப்பீட்டாளரினால் 2017 நவம்பர் 15 ஆம் திகதி விலைமதிப்பு செய்யப்பட்டுள்ளது. அரசாங்க விலைமதிப்பாளரின் அறிக்கைகக்கு அமைய இந்தக் காணியின் சாதாரணப் பெறுமதி ரூ. 3,812,500,000/- ஆக அதிகரித்துள்ளது.

### 2.10 அருவச் சொத்துக்கள்

#### 2.10.1 வெளிவாரியாகப் பெறப்பட்ட அருவச் சொத்துக்கள்

பிரத்தியேகமாகப் பெறப்பட்ட அருவச் சொத்துக்கள் ஆரம்ப இனங்காணலின் போது செலவில் அளவிடப்பட்டன. அருவச் சொத்துக்கள் மீதான பின்வரும் ஆரம்ப இனங்காணல்கள், திரண்ட கடன் தீர்ப்பனவு மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்களைக் கழித்து செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அருவச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வரையறுக்கபட்ட அல்லது வரையறுக்கப்படாத விதத்தில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

அருவச் சொத்துக்கு பெறுமதி இழப்பு ஏற்படக் கூடும் என்ற குறிகாட்டி உள்ள போதெல்லாம், வரையறைக்குள்ளான ஆயுட்காலத்தை கொண்ட அருவச் சொத்துக்கள் அவற்றின் பயன்தரு பொருளாதார ஆயுட்கலத்தினுள் கடன் தீர்ப்பனவு செய்யப்படுவதுடன், பெறுமதி இழப்புக்காக மதிப்பீடு செய்யப்படும். வரையறைக்குள்ளான பயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்திற்கான கடன் தீர்ப்பனவு காலம் மற்றும் கடன் தீர்ப்பனவு முறைமை குறைந்தபட்சம் ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் மீளாய்வு செய்யப்படும். எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது சொத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளின் கொள்வனவின் எதிர்பார்க்கப்பட்ட முறைமை கடன்தீர்ப்பனவு காலம் அல்லது முறையை மாற்றுவதன் மூலம் கணிப்பீடு செய்யப்படுவதுடன், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படும். வரையறைக்குள்ளான ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் மீதான கடன் தீர்ப்பனவு செலவினமானது அருவச் சொத்துக்களின் தொழிற்பாட்டுடனான செலவின வகை இணக்கப்பாட்டில் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

அருவச் சொத்து ஒன்றின் இனங்காணலை நிறுத்துவதனால் ஏற்படும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் தேறிய அகற்றுகை வருவாய்களுக்கும் சொத்தின் காவுகைத் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக அளவிடப்படுகின்றன. மேலும் சொத்தினை இனங்காணுவதை நிறுத்தும் போது, அது வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

### 2.10.2 கணினி மென்பொருள் பொதியங்கள்

கணினி மென்பொருள் பொதியங்களைப் பெறுதல்/தரமுயர்த்துதலால் ஏற்படும் தொகை அருவச் சொத்தக்களாக இனங்காணப்படுவதுடன், 3 வருடங்களுக்கு மேலாகக் கடன் தீர்ப்பனவு செய்யப்படும்.

### 2.11 குத்தகைச் சொத்துக்கள்

மதிப்பீட்டில் குறிக்கப்பட்ட மற்றும் சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் கீழ் முன்னர் வகைப்படுத்தப்பட்ட நிலப் பயன்பாட்டு உரிமைகளைக் கொண்ட குத்தகைச் சொத்து ‘குத்தகைச் சொத்தாக’ மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஹம்பாந்தோட்டையில் உள்ள காணிக்கு செலுத்தப்பட்ட குத்தகைத் தொகை மூலதனமாக்கப்பட்டு 30 வருட குத்தகைக் காலத்திற்கு கடன்கழிப்புச் செய்யப்பட்டுள்ளது.

### 2.11.1 தொழிற்படு குத்தகை

உடைமையுரிமைக்கு உட்பட்ட கணிசமான அளவு இடர்கள் மற்றும் வெகுமதிகள் (தொழிற்படு குத்தகை) சபைக்கு மாற்றஞ் செய்யப்படாத போது, குத்தகையின் கீழ் செலுத்த வேண்டிய மொத்த வாடகை குத்தகைத் தவணைக்குள் நேர் கோட்டு முறைமை அடிப்படையில் விபரமான வருமானக் கூற்றுக்குச் சாட்டப்படும்.

### 2.12 பொருட்பதிவேடுகள்

வழக்கற்று போன மற்றும் மெதுவாக அசையும் உருப்படிகளுக்கு உரிய முற்பணங்கள் தீர்க்கப்பட்டதன் பின்னர் பொருட் பதிவேகள் குறைந்தளவிலான செலவிலும் தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதியிலும் மதிப்பிடப்படும்.

வழக்கற்று போன மற்றும் மெதுவாக அசையும் உருப்படிகளுக்கு உரிய முற்பணங்கள் தீர்க்கப்பட்டதன் பின்னர் பொருட்பதிவேகள் குறைந்தளவிலான செலவிலும் தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதியிலும் மதிப்பிடப்படும். பூர்த்தி செய்தல் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு மற்றும் விற்பனை மேற்கொள்வதற்கு தேவையான மதிப்பீடு செய்யப்பட்ட செலவு கழித்து பொருட்பதிவேடுகளை சாதாரண வியாபாரத்தில் விற்கக்கூடிய விலையே தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதி ஆகும்.

பொருட்பதிவேடுகளை அதன் தற்போதைய இடத்திற்கும் நிலைக்கும் கொண்டுவருவதில் ஏற்பட்ட செலவு பின்வரும் செலவுச் சூத்திரங்களைப் பிரயோகித்து கணக்கிடப்படும்:-

| | | |
|---|---|---|
| மூலப் பொருட்கள் | - | முதலில் வந்தது முதலில் வெளியேறல் என்ற செலவு அடிப்படையில் கொள்வனவுச் செலவில் |
| முடிவுப் பொருட்கள் | - | நேரடிப் பொருட்கள், நேரடி உழைப்பு மற்றும் பிராந்திய உற்பத்தி மேந்தலைகளின் பொருத்தமான விகிதம் ஆகியவற்றின் செலவில் |
| முடிவுறா வேலைகள் | - | 12 மற்றும் அதற்கு மேற்பட்ட அடர்த்தியான மட்டத்தில் உட்செலுத்தப்பட்ட உபபின் கணக்கிடப்பட்ட அளவை விட பகிர்ந்தளிக்கப்பட்ட கடந்த பருவத்தில் உப்புநீர் சுத்திகரிப்பு மற்றும் உப்புப் படுக்கைகளைத் தயாரித்தல் செலவினங்கள் 25% இல் நுகர்வுகள் மற்றும் |
| உதிரிப்பாகங்கள் | - | முதலில் வந்தது முதலில் வெளியேறல் அடிப்படையில் கொள்வனவுச் செலவில் |

பூர்த்தி செய்தல் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு மற்றும் விற்பனை மேற்கொள்வதற்கு தேவையான மதிப்பீடு செய்யப்பட்ட செலவு கழித்து சாதாரண வியாபாரத்தில் விற்கக்கூடிய மதிப்பிடப்பட்ட விற்பனை விலையே தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதி ஆகும்.

### 2.13. இளைப்பாற்று நலன் பொறுப்புக்கள்

### 2.13.1. ஊழியர் நலன்கள்

கம்பனி நிலையான நலன்கள் மற்றும் நிலையான பொறுப்புக்கள் திட்டங்களைக் கொண்டுள்ளது. நிலையான பங்களிப்புத் திட்டம் என்பது கம்பனி இன்னொரு நிறுவனத்திற்கு நிலையான பங்களிப்புக்களைச் செலுத்துகின்ற இளைப்பாற்றுத் திட்டம் ஆகும். நிலையான நலன் திட்டங்கள் சேவைக் காலம் மற்றும் இழப்பீட்டின் அடிப்படையில் இளைப்பாறுகையில் ஓர் ஊழியர் பெற்றுக் கொள்ளும் இளைப்பாற்று நலன் தொகையினை நிர்ணயிக்கின்றது.

### 2.13.2 நிலையான பங்களிப்புத் திட்டங்கள்

உரிய சட்ட விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்க, சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புக்களை மேற்கொள்வதற்கு ஊழியர்கள் தகுதியுடையவர்களாவர். ஊழியர்களின் மொத்த வருவாயிலிருந்து 15% மற்றும் 3% இனை முறையே ஊழியர்கள் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புக்களை சபை வழங்குகின்றது.

வழக்கிலுள்ள சட்ட விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்க, சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புக்களை மேற்கொள்வதற்கு ஊழியர்கள் தகுதியுடையவர்களாவர். ஊழியர்களின் மொத்த வருவாயிலிருந்து 12% மற்றும் 3% இனை முறையே ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புக்களை கம்பனி வழங்குகின்றது.

### 2.13.3 நிலையான நலன் திட்டங்கள் – பணிக்கொடை

ஊழியர் நன்மைகள் – இலங்கை கணக்கீட்டு நியமங்கள் டுமுயுளு 19 இன் உறுதிப்பாட்டுடன் எல்லா ஊழியர்களினதும் சேவைக்காலத்தின் முதல் வருடத்திலிருந்தே இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. எவ்வாறெனினும், 1983 இன் பணிக்கொடைக் கொடுப்பனவு சட்ட இல 12 இன் கீழ் ஓர் ஊழியருக்கான பொறுப்பு தொடர்ச்சியான ஐந்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யும் போதே எழுகின்றது. பொறுப்பானது வெளிவாரியாக நிதியிடப்படுவதில்லை.

நிலையான பங்களிப்புத் திட்டத்திற்கு மாறாக நிலையான நலன்கள் திட்டமானது தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டமாகும். நிலையான இளைப்பாற்றுத் திட்டம் தொடர்பில் தாபனத்தின் தேறிய கடப்பாடு, நடப்பு மற்றும் முன்னைய காலப்பகுதிகளில் ஊழியர்கள் தமது பணிக்காக ஈட்டிய எதிர்கால நன்மை மீதான தொகையை மதிப்பீடு செய்வதன் மூலம் கணிக்கப்படுகின்றது. அந்நன்மையானது அதன் நடப்புப் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு கழிவீடு செய்யப்படும். இனங்காணப்படாத கடந்த சேவைச் செலவினங்கள் கழிக்கப்படும்.

கழிவீட்டு வீதமானது அறிக்கையிடும் காலப்பகுதியில் தாபனத்தின் கடப்பாட்டு நிபந்தனைகளைப் பெரிதும் ஒத்திருக்கக்கூடிய முதிர்ச்சி நாட்களைக் கொண்ட உயர் தரக் கூட்டு முறிகள் மீதான வருவாயாகும். மேலும் அவை நன்மைகள் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் அதே நாணயத்தில் குறிக்கப்படும். நிலையான நன்மைகள் கடப்பாடு வருடாந்தம் நெறிப்படுத்தப்பட்ட அலகுப் பற்று முறைமையைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

ஒரு திட்டத்தின் நன்மைகள் விருத்தி செய்யப்படும் போது, ஊழியர்களால் வழங்கப்பட்ட கடந்த சேவை காலம் தொடர்பாக அதிகரிக்கப்பட்ட நன்மையில் ஒரு பகுதி, நன்மைகள் பொறுப்பில் விடப்படும் வரையிலான சராசரி காலப்பகுதிக்குள் நேர் கோட்டு முறைமை அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும். நன்மைகள் உடனடியாக அளிக்கப்படும் அளவின் படி செலவினம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் உடனடியாக இனங்காணப்படும். தாபனமானது நிலையான நலன்கள் திட்டங்களினால் எழும் எல்லா காப்புறுதி இலாபங்களையும் நட்டங்களையும் ஏனைய விபரமான வருமானத்தில் இனங்காண்கின்றது.

கம்பனி நிதியளிக்கப்படாத, சேவை செய்த வருடங்கள் மற்றும் சமீபத்திய மாதாந்த சம்பள வீதம் ஆகியவற்றின் அடிப்படையிலான நலன்கள் கொண்ட அதன் வழமையான ஊழியர்களையும் உள்ளடக்கிய பங்களிக்காத நிலையான நலன் திட்டத்தைக் கொண்டுள்ளது. மதிப்பிடப்பட்ட எதிர்கால சம்பள அதிகரிப்புகள், தற்போதைய ஊழியர்களின் எதிர்கால சேவை மற்றும் 28.19 ஆம் பிரிவின் பிரகாரம் தற்போதைய ஊழியர்களின் பணியில் உள்ளபோது இறப்பு ஆகியவற்றின் மீதான எளிமையாக்கல்கள் பொறுப்பின் பெறுமதியை கணக்கிடுவதில் பயன்படுத்தப்படும். பணிக்கொடைக்கு ஏற்புடைய பொறுப்புக்கள் தொடர்பில் நிதியங்கள் வழங்கப்படவில்லை. அத்தோடு அது ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டும் கணக்கிடப்படவில்லை.

### 2.14 உரிமையாண்மை

### 2.14.1 அங்கத்தவர் நிதி

அங்கத்தவர்களிடமிருந்து கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டிய பங்களிப்பு, ஆண்டிற்குள் அவரக்ளுக்கான சேரும் பங்கிலாபம் மற்றும் வட்டியுடனான தேறிய மீளளிப்புக்கள் அங்கத்தவர் நிதியத்தில் உள்ளடங்குகின்றன.

### 2.14.2 பங்கிலாபங்கள்

பங்கிலாபங்களாவன பெறுவதற்கான நிதியத்தின் உரிமை உறுதிப்படுத்தும் போது இனங்காணப்படுகின்றன.

### 2.14.3 ஒதுக்குகள்

மீள்மதிப்பீட்டு ஒதுக்கு இறையில் காணி மற்றும் கட்டடங்களின் மீள்மதிப்பீட்டினை தொடர்புறுத்துகின்றதுடன் மீள்மதிப்பீட்டு திகதியில் உள்ளவாறு காணி மற்றும் கட்டடங்களின் நியாயமான பெறுமதி மாற்றங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அதன்படி, நவம் மாவத்தை காணியின் கொள்வனவுக் கிரயம் மீதான சந்தைப் பெறுமதி அதிகரிப்பால் ஒதுக்கு கட்டியெழுப்பபட்டுள்ளது.

பங்கிலாபத்தினையும் வட்டியையும் பொடுப்பனவு செய்த பின்னர் நிறுத்திவைத்த வருவாய்கள் மற்றும் மிகை இலாபம் சபையினால் பங்கிலாபம் சமப்படுத்தும் ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. இவ் ஒதுக்கினை அமைப்பதற்கான நோக்கம் சாத்தியமான பங்கிலாபக் கொடுப்பனவுகளைப் பூர்த்தி செய்வதும் நிறுத்தி வைத்த வருவாய்களலிருந்து வெளிப்பாய்ச்சல்களைக் குறைப்பதும் ஆகும்.

சொத்துக்களை இனங்காண்பது நிறுத்தப்படல் அல்லது மதிப்பிழக்கப்படல் வரை விற்பனைக்கு கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகளின் நியாயமான பெறுமதியில் திரண்ட தேறிய மாற்றத்தினை விற்பனைக்கு கிடைக்கக்கூடிய ஒதுக்கு கொண்டுள்ளது.

### 2.15 ஏற்பாடுகள்

நிச்சயமற்ற கால முன்னேற்பாடு மற்றும் தொகைகள் மீதான பொறுப்புக்களுக்கான ஏற்பாடுகளை சபை இனங்கண்டுளளது. ஏற்பாடானது அறிக்கையிடும் காலப்பகுதியல் கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் செலவினத்தின் மிகச் சிறந்த மதிப்பீட்டில் அளவிடப்படுவதுடன், பொறுப்புக்கான குறிக்கப்பட்ட இடர்கள் மற்றும் பணத்தின் காலப் பெறுமதி மீதான நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கக் கூடிய வரிக்கு முன்பான கழிவு வீதத்தினைப் பயன்படுத்தி அவற்றின் நடப்புப் பெறுமதிக்கு கழிவீடு செய்யப்படும்.

சட்டரீதியான கோரல்களுக்கான ஏற்பாடுகள், கடந்த கால நிகழ்வுகளின் விளைவாகக் கம்பனி தற்போதைய சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாட்டினைக் கொண்டுள்ள போது இனங்காணப்படும், பொருளாதார நலன்களின் மாற்றம் கடப்பாடுகளைத் தீர்ப்பதற்கு தேவைப்படும் என்பதும் தொகை நம்பகமான முறையில் மதிப்பீடு செய்யப்படலாம் என்பதும் சாத்தியமாகின்றது.

ஏற்பாடுகளானது பொறுப்புக்கான குறிக்கப்பட்ட இடர்கள் மற்றும் பணத்தின் காலப் பெறுமதி மீதான நடைமுறை மதிப்பீட்டினைப் பிரதிபலிக்கும் வரிக்கு முன்பான கழிவு வீதத்தினைப் பயன்படுத்தி கடப்பாட்டினைத் தீர்ப்பதற்குத் தேவையான எதிர்காலத் தொகையின் தற்போதைய பெறுமதியில் அளவிடப்படும். காலஎல்லை காரணமாக ஏற்பாட்டில் அதிகரிப்பானது வட்டிச் செலவினமாக இனங்காணக்கட்டுள்ளது.

### 2.16 வியாபாரம் மற்றும் வருமதிகள்

பெரும்பாலான விற்பனைகள் சாதாரண கடன் விதிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன, மற்றும் கிடைப்பனவுகள் வட்டியைக் கொண்டிருப்பதில்லை. சாதாரண கடன் விதிகளுக்கு அப்பால் கடன் நீடிக்கப்பட்டால், வருமதிகள் பயனுறுதிமிக்க வட்டி முறைமையினைப் பயன்படுத்தி கடன்கழிப்புச் செலவில் அளவிடப்படும். ஒவ்வொரு அறிக்கையிடும் இறுதிக் காலத்திலும், தொகைகள் மீட்கமுடியாதவை என்ற ஏதேனும் புறநிலை ஆதாரம் இருக்கின்றதா எனத் தீர்மனிப்பதற்கு வியாபாரம் மற்றும் ஏனைய வருமதிகளின் காவுகைத் தொகைகள் மீளாய்வு செய்யப்படும். அவ்வாறெனின், மதிப்பிழப்பு நட்டம் உடனடியாக இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும்.

### 2.17 வியாபாரச் செலுத்தவேண்டியவை

சாதாரண கடன் விதிகளின் அடிப்படை மீதான கடப்பாடுகள் வியாபாரச் செலுத்த வேண்டியவை ஆகும், மற்றும் வட்டியைக் கொண்டிருப்பதில்லை. வெளியநாட்டு நாணயத்தில் குறிக்கப்படும் வியாபாரச் செலுத்த வேண்டியவை அறிக்கையிடும் திகதியில் பரிமாற்ற வீதத்தைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவிற்கு மாற்றப்படும். வெளிநாட்டு பரிமாற்ற ஆதாயங்கள் அல்லது இழப்புக்கள் ஏனைய வருடானங்கள் அல்லது ஏனைய செலவினங்களில் உள்ளடக்கப்படும்.

### 2.18 காசும் காசுக்கு சமமானவையும்

பெறுமதியில் உள்ள மாற்றங்களின் முக்கியமற்ற இடருக்கு ஆளாதல் மற்றும் காசின் அறியப்பட்ட தொகைகளுக்கு உடனடியாக மாற்றக்கூடியவை, குறுங்கால உயர் திரவ முதலீடுகள், கேள்வி வைப்புக்கள் மற்றும் கையிலுள்ள காசு என்பன காசும் காசுக்கு சமமானவையும் ஆகும்.

காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசும் காசுக்கு சமமானவையும் கையிலுள்ள காசு, வங்கிகளிலுள்ள வைப்புக்கள் தேறிய நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்கள் என்பவற்றைக் கொண்டுள்ளன. குறுகிய

முதிர்வுகளுடனான முதலீகள் அதாவது மூன்று மாதங்கள் அல்லது கையகப்படுத்திய திகதியில் இருந்து அதற்கு குறைவானவையும் காசுக்கு சமமானவையாகக் கணிக்கப்படுகின்றன.

### 2.19 மானியங்கள் மற்றும் உதவித்தொகைகள்

மானியம் கிடைக்கப் பெறும் மற்றும் எல்லா தொடர்புபட்ட நிபந்தனைகளும் இணக்கத்திற்கு உள்ளாகும் என்ற நியாயமான உத்தரவாதம் இருக்கும் போது மானியங்கள் இனங்காணப்படும். மானியம் செலவின உருப்படி ஒன்றுடன் தொடர்புறுகையில் ஈடுசெய்வதற்கு நோக்காகக் கொண்ட செலவுகளுக்கு முறைப்படுத்தப்பட்ட அடிப்படை மீது மானியத்திற்கு பொருந்துவதற்கு தேவையான காலப்பமுதியில் வருமானமாக இனங்காணப்படும். மானியம் சொத்தொன்றுடன் தொடர்புறுகையில் பிற்போடப்பட்ட வருமானமாக அமையப்பெறும். கம்பனி நாணயமல்லாத மானியங்களைப் பெறும் போது, சொத்து மற்றும் மானியம் பெயரளவு தொகைகளாக பதிவு செய்யப்படுவதுடன், அது பின்வருமாறு சமமான வருடாந்த தவணைக் கட்டணங்களால் உரிய சொத்தின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் மீது வருமானக் கூற்றிற்கு விடுவிக்கப்படும்.

கிடைக்கப்பெற்ற மானியங்கள் பின்வருமாறு ஒதுக்குக் கணக்கில் பற்று வைக்கப்பட்டு வருமானக் கூற்றில் கடன்கழிப்புச் செய்யப்படும்.

| | |
|---|---|
| அயடிசேக்ஷன் பொறித்தொகுதிக்கான மானியம் | 10% |
| கட்டடத்திற்கான மானியங்கள் | 2.5% |
| பம்பும் நிலையத்திற்கான மானியம் | 2.5% |
| ஊழியர்களுக்கு இழப்பீட்டிற்கான மானியம் | - செலுத்தப்பட்ட இழப்பீட்டினால் குறைத்தல் |

### 2.20 சொத்துக்களின் பெறுமதி இழப்பு

#### 2.20.1 நிதிச் சொத்துக்களின் பெறுமதி இழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் நுவுகு சபை நிதிச் சொத்தொன்றோ அல்லது நிதிச் சொத்துக்கள் தொகுதியொன்றோ மதிப்பிழந்துள்ளமைக்கு ஏதேனும் புறநிலை ஆதாரம் இருக்கின்றதா என மதிப்பீடு செய்யும். நம்பகமான முறையில் மதிப்பீடு செய்யப்படக்கூடிய நிதிச் சொத்தொன்றின் அல்லது நிதிச் சொத்துக்கள் தொகுதியொன்றின் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மீது தாக்கத்தை உடைய இழப்பீட்டு நிகழ்வு (அல்லது நிகழ்வுகள்) மற்றும் சொத்தின் ஆரம்ப இனங்காணலின் (நடைப்பெற்ற இழப்பீட்டு நிகழ்வொன்றின்) பின்னர் ஒன்றோ அல்லது அதிகமான நிகழ்வுகள் நடைபெற்றதன் விளைவாக பெறுமானத் தேய்விற்கான புறநிலை ஆதாரம் இருந்தால், மற்றும் இருந்தால் மாத்திரம், மதிப்பிழப்பிற்கு உட்படுதாகக் கருதப்படும்.

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் கம்பனி நிதிச் சொத்தொன்றோ அல்லது நிதிச் சொத்துக்கள் தொகுதியொன்றோ மதிப்பிழந்துள்ளமைக்கு ஏதேனும் புறநிலை ஆதாரம் இருக்கின்றதா என மதிப்பீடு செய்யும். நம்பகமான முறையில் மதிப்பீடு செய்யப்படக்கூடிய நிதிச் சொத்தொன்றின் அல்லது நிதிச் சொத்துக்கள் தொகுதியொன்றின் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மீது தாக்கத்தை உடைய இழப்பீட்டு நிகழ்வு (அல்லது நிகழ்வுகள்) மற்றும் சொத்தின் ஆரம்ப இனங்காணலின் (நடைப்பெற்ற இழப்பீட்டு நிகழ்வொன்றின்) பின்னர் ஒன்றோ அல்லது அதிகமான நிகழ்வுகள் நடைபெற்றதன் விளைவாக பெறுமானத் தேய்விற்கான புறநிலை ஆதாரம் இருந்தால், மற்றும் இருந்தால் மாத்திரம், மதிப்பிழப்பிற்கு உட்படுதாகக் கருதப்படும். கடன்பட்டோர் கணிசமான நிதிநெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர், வட்டியில் அல்லது பிரதான கொடுப்பனவுகளில் தவறுதல் அல்லது விட்டுவிடுதல், அவர்கள் முறிவடைந்த நிலைக்கு அல்லது ஏனைய நிதி அமைப்பிற்கு உட்படுவர் என்ற சாத்தியப்பாடு மற்றும் தவறுவிடுதலுடன் தொடர்புற்ற நிலுவைகள் அல்லது பொருளாதார நிலைமைகளில் உள்ள மாற்றங்கள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலில் அளவிடக்கூடிய வீழ்ச்சி இருப்பதாக அவதானிக்கக்கூடிய தரவுகள் குறிப்பிடுகினற்மை ஆகிய குறிகாட்டிகளை பெறுமானத்தேய்வின் ஆதாரம் உள்ளடக்கலாம்.

#### 2.20.2. நிதிசாரா சொத்துக்களின் பெறுமானத் தேய்வு

**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையினதும் அதனை நிருவகிப்பதினதும் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இணைந்த நிதிக் கூற்றுக்கள் மீது 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் 10(7) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையினதும் அதனை நிருவகிப்பதினதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணைந்த நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அக்ல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இணைந்த நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் 10(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிச் சட்டத்தின் 10(7) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டிறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துாவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.
எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 2. நிதிக் கூற்றுக்கள்

---

### 2.1 அபிப்பிராயம் - தொகுதி

---

இணைந்த நிதிக் கூற்றுகளில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையினதும் அதனது நிர்வகிப்பதினதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார்

செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பராயமாகும்.

**அபிப்பிராயம் - சபை**

-----------------------------------------

இணைந்த நிதிக் கூற்றுகளில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி**

---------------------------------------------------------------------------

சபைக்கு 90 சதவீத பங்குகளின் உரிமைவகிக்கும் நிருவகிக்கும் கம்பனி ஒன்றான லங்கா ஸொல்ட் லிமிடட் கம்பனியின் 2017 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நேர் கணக்காய்வு செய்யப்பட்டதுடன் அங்கு முனைபளிப்புள்ள கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்று தெரிவிக்கப்பட்டது.

**2.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

-------------------------------------------------------------

**2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

-------------------------------------------------------------

இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இல் 34 ஆம் பிரிவின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையில் ரூபா 441,163,000 தொகைக்கான கிரயத்தை உடைய நிலையான சொத்துகளில் 25 வருடங்களை விட மிகையான காலம் முதல் ஒடுங்குபாக முறைப்படி தொடர்ந்தும் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு காணப்படும் சொத்துக்கள் காணப்பட்ட போதிலும், அதனது நியாயமான பெறுமதியினை காட்டுவதற்காக சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்திருக்கவில்லை.

**2.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

---------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறை பொறுப்புகளின் கீழ் இனங்காணப்படாத மீதியாக ரூபா 588,000 தொகை காட்டப்பட்டிருந்ததுடன் அந்த மீதியை இனங்கண்டு தீர்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1994 ஆண்டு முதல் 2009 வரையான காலப்பகுதிகளில் உயர்தரம் சித்தியடைந்த மாணவர்களுக்கு செலுத்த வேண்டிய உரிமை சேரப்படாத புலமை பரிசில் தொகை ரூபா 1,865,000 தொகை 2017 திசெம்பர் 31 திகதி வரையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1995 ஆண்டு முதல் இடையறாமல் அதிகரித்து செல்லும் உரிமை கோரப்படாத மரண நலன்கள் ரூபா 10,170,557 தொகை 2001 ஆண்டு முதல் காணப்படும் பிடித்துவைத்த நலன்கள் ரூபா 17,341,449 தொகை மற்றும் விண்ணப்பிக்காத நலன்கள் ரூபா 6,534,199 தொகை ஆக கூட்டுத்தொகை ரூபா 34,046,205 தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை குறிப்பிட்ட அங்கத்தவர்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை எவ்வாறாயினும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையின் தலைவரின் கருத்துரையின் பிரகாரம் 2018 ஜனவரி முதல் ஜுலை வரையான காலப்பகுதியில் உரிமை கோரப்படாத மரண நலன்களில் இருந்து ரூபா 69,454 தொகையும் பிடித்துவைத்த நலன்களில் இருந்து ரூபா 4,499,697 தொகையும் விண்ணப்பிக்காத நலன்களில் இருந்து ரூபா 2,514,785 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது என அறிவித்திருந்தார்.

(இ) பல வருடகாலமாக சபைக்கு கிடைக்க வேண்டிய தொகை என பலவின கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 7,515,346 இற்கான பெற வேண்டிய ஆதன வருமானங்களை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்வதற்கு இயலாதிருந்தது.

**2.5 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள் விதிகள் ,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் 1985 பிரிவு III அத்தியாயம் 13.1 (ஆ) | பதில் கடமை நியமனம் ஒன்று செய்ய வேண்டிய பதவி ஒன்று நிரந்தரமாக வகிக்க கூடியவாறு காணப்படாத சந்தர்ப்பத்தின் போது அல்லது தற்காலிக வெற்றிடம் ஒன்றினை நிரப்புவதற்கு அல்லது தமது கடமைகளுக்கு மேலதிகமாக பதவி ஒன்றில் பதில் கடமையாற்றுவதற்கு மாத்திரமே. எவ்வாறாயினும், சபையி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்பட்ட வெற்றிடம் அல்லாத நிருவாக மற்றும் மனித வள முகாமைத்துவ பதவிக்காக மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாத பதவி ஒன்றான தபால் முகாமைத்துவ பதவிக்காக முறையே 2016 ஏப்ரல் 01 திகதி மற்றும் 2014 நவம்பர் 03 திகதி முதல் பதில் கடமை நியமனம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பின்னர் அப்பதவிகளில் 2016 அக்தோபர் 01 திகதி முதல் நிரந்தரப்படுத்தப்பட்டிருந்தது |
| (ஆ) 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/ 12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) பிரிவு 9.3.1 (vii) | சுற்றிக்கையின் பிரகாரம் பதில் கடமை நியமங்கள் 03 மாதங்களுக்கு வரையறுக்கப்பட வேண்டுமெனினும் சபையினால் மீளாய்வாண்டின் போது அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 7 உத்தியோகத்தர்களுக்கு 1 ½ வருடம் முதல் 4 வருடங்கள் வரையான காலம் பதில் கடமை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளது. |
| (ii) பிரிவு 9.14.2 | சபையில் தற்போது செயல்படும் நிருவாக மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை முறை கோவை திறைசேரிக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

**3 நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த இணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தொகுதியின் இலாபம் ரூபா 17,153 மில்லியன் மற்றும் சபையின் இலாபம் ரூபா 16,828 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் முறையே ரூபா 14,346 மில்லியன் மற்றும் ரூபா 13,648 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் முறையே ரூபா 2,807 மில்லியன் மற்றும் ரூபா 3,180 மில்லியன் தொகையினால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது சபையின் வட்டி வருமானம் ரூபா 3,747 மில்லியனால் அதிகரித்தல் மேலே நிதி விளைவுகளின் அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது, 2013ஆண்டில் ரூபா 14,913 மில்லியன் தொகையாக காணப்பட்ட இலாபம் 2014 ஆண்டின் போது ரூபா 17,072 மில்லியன் வரை அதிகரித்திருந்த போதிலும் 2016 ஆண்டளவில் ரூபா 13,648 மில்லியன் தொகை வரை குறைந்திருந்ததுடன் மீண்டும் மீளாய்வாண்டில் ரூபா 16,828 மில்லியன் தொகை வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதன வருமான வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துகளுக்காக பெறுமானத் தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த போது 2013 ரூபா 15,905 மில்லியன் காணப்பட்ட சபையின் பங்களிப்பு 2016 ஆண்டின் போது ரூபா 17,051 மில்லியன் வரையும் 2017 ஆண்டின் போது 20,610 மில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன் 2016 ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பங்களிப்பு அதிகரிப்பு 20.87 சதவீதமாக இருந்தது.

**3.2 நிறுவனத்தினால் ஆரம்பிக்கபட்டுள்ள சட்ட சம்பவங்கள்**

சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,902,318 இற்கான தொகையை அறவீடு செய்வதற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு எதிராக மற்றும் ரூபா 166,687,328 தொகை பங்களிப்பு தொகை மற்றும் மிகை விதிப்பு அறவீடு செய்வதற்காக நாடுபூராகவும் உள்ள நீதி மன்றங்களில் 2,321 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------------

**4.1 செயலாற்றுகை**

------------------------

**4.1.1 திட்டமிடல்**

-------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் "சக்திகள், சந்தர்பங்கள், பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல் SWOT" இன் பிரகாரம் வெற்றிகரமான செயற்பாட்டு நடைமுறை வசதிகள் பற்றாக்குறையாக இருத்தல், தனக்கு சொந்தமான அலுவலக தொடர் கட்டிடம் காணப்படாமை மற்றும் செயற்பாட்டு விடயங்களுக்காக தற்போது காணப்படும் இடவசதிகள் போதியளவாகக் காணப்படாமை, தரவு கலஞ்சிய போதியளவு காணப்படாமை மதிநுட்ப திறமையுள்ள திறந் தொழிலாளர்களை கவர்ந்திருக்காமை பதவியனியினரின் எதிர்கால தனிப்பட்ட முன்னேற்றத்திற்கு காணப்படும் வரையறைகள் ஆகிய பலவீனங்கள் மற்றும் முதலீடுகள் தொடர்பாக வர்த்தக உலகத்தில் காணப்படும் .கடினத்தன்மை மற்றும் உயர்ந்த வெற்றி ஒன்றினை பெற்றுக் கொள்வதற்காக முதலீடுகள் காணப்படாமை ஆகிய சவால்களை அழிக்கும் காரணிகளாக இனங்கண்டிருந்த போதிலும் கட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் அந்த தடைகளை வெற்றிகொள்ளும் மூலோபாயங்களை இனங்கண்டிருக்கவில்லை.

(ஆ) முதலீட்டு பிரிவின் 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்தில் முதலீட்டு கொத்தணியை முகாமைத்துவப்படுத்தும் குறிக்கோளை நோக்கி நெருங்கும் மூலோபாயங்களின் கீழ் அரச பிணைமுறிகள் மற்றும் அரச வங்கிகள் வைப்புக்களை 87 சதவீதத்தில் பேணுவதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், சபையின் முதலீட்டு கொள்கை வெளியீட்டின் பிரகாரம் அரச பிணைமுறிகள் (திறைசேரி பிணை முறிகள், ,திறைசேரிஉன்டியல்கள் மற்றும் ரூபா கடன்) என்பவற்றில் மாத்திரம் குறைந்தளவு 87 சதவீதம் பேணப்பட வேண்டும். நிலையான வைப்புக்கள், ,கடன் பத்திரங்கள், வாணிபத் பத்திரம் ஏனைய நிலையான வருமான பிணை முறிகளின் கீழ் வருவதுடன் அம் முதலீடுகளை உச்ச வரையறை 5 சதவீதமாக இருக்க வேண்டும். அதன் பிரகாரம் முதலீட்டு பிரிவில் செயலாற்றுகை அறவிடுவதற்காக செயலாற்றுகை அளவு கோள்களை (KPI) சரியான முறையில் இனங்கண்டிருக்கவில்லை.

### 4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சுயதொழில் செய்வோர் 2000 பேர் அங்கத்துவர்களாக்குவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் சுய தொழில் செய்வோர் 996 பேருக்கு மாத்திரமே அங்கத்துவம் வழங்கப்பட்டிருந்தது.

(அ) 1988 இன் 47 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய (திருத்திய) சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் திருத்தப்பட்ட 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் 20 (1) பிரிவின் பிரகாரம் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு சுயதொழில் செய்வோர் களையும் சேர்த்துக் கொள்வதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன அவ்வாறாயினும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் பிரகாரம், இலங்கையில் சுயதொழில் செய்வோர் என அறிவிக்கப்பட்டிருந்த எண்ணிக்கை 2,571,023 தொகை எனினும் சபையின் அங்கத்தவர்கள் என அவர்களில் சேர்க்கப்பட்டிருந்தது 40,265 தொகை அங்கத்தவர்கள் அதாவது 1.57 சதவீதம் மாத்திரம் காணப்பட்டது. நிதியச் சட்டத்தின் மூலம் விஷேடமாக விதித்துள்ள இந்த பரப்பினை மேம்படுத்துவதற்காக சபையில் வேறு பிரிவு ஒன்று நிறுவி செயல் நடவடிக்கை திட்டத்தில் தந்தரோபாயம் சுட்டிகாட்டி இருந்த போதிலும், 2017 இறுதி அளவில் அதற்காக செலுத்திய கவனம் மிகவும் குறைந்த மட்டத்திலே காணப்பட்டது.

(ஆ) மனித வள முகாமைத்துவ பிரிவின் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் பதவியணியினால் செயலாற்றுகை மதிப்பாய்வு செய்யும் முறைமைகள் முன்னேற்றுதல் மற்றும் நாளதுவரை ஆக்கலின் உபாயமுறைகளின் முன்னேற்றம் திட்டமிட்ட மட்டத்தை விட 30 சதவீதம் குறைவாக நெருங்கியிருந்தது. அதே போல் மாதாந்த ஊக்குவிப்பு முறைமை தனிநபர் செயலாற்றுகையுடன் தொடர்படுத்தும் உபாய முறைகளின் நெருங்கியிருந்த செயலாற்றுகைக் 25 வீதம் மாத்திரம் காணப்பட்டது.

(இ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 14 ஆம் பிரிவு மற்றும் 22 பிரிவின் பிரகாரம் நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய வட்டி நலன்கள் 2010 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை 12.5 சதவிதம் முதல் 10 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் கடந்த 02 ஆண்டகளில் மற்றும் மீளாய்வாண்டின் போது அது 9 சதவீதம் சமமான வட்டி விகிதம் ஒன்றினை கொண்டிருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

சபையினால் தயாரித்திருந்த நிதி செயல் நடவடிக்கை முறை பணிப்பாளர் சபைக்கு மற்றும் திறைசேரிக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.3 நிதிய முதலீடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிச் சபையின் முதலீட்டு கொத்தனி நடாத்தும் போது வருமானம் உச்ச மட்டமாக இருப்பதுடன் குறைந்த மட்டத்தில் இருக்கும் விதமாக முதலீடு செய்யப்பட வேண்டிய கட்டமைப்பு தொடர்பாக சபையின் முதலீட்டு கொள்கை வெளியீட்டில் 4 ஆம் அத்தியாயத்தில் காட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அரச பிணை முறிகளில் 87 சதவீதம் எனைய நிரந்தர வருமான பிணை முறிகளில் (உச்ச அளவு) 5 சதவீதம், குறுகிய கால மீள் கொள்வனவுகளின் 2 சதவீதம் மற்றும் பங்கு முதலீடுகளில் (உச்ச அளவு) 6 சதவீதம் ஆக வரையரைகளை நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு மற்றும் கடந்த 2 ஆண்டுகளில் முதலீட்டுக் கொத்தனி அமைந்திருந்த முறை கீழ் வருமாறு அகும்.

| முதலீட்டு கொத்தனி | 2015 | | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி | மொத்த முதலீடு கொத்தனி யின் சதவீதமாக | பெறுமதி | மொத்த முதலீடு கொத்தனி யின் சதவீதமாக | பெறுமதி | மொத்த முதலீடு கொத்தனி யின் சதவீதமாக |
| | (ரூபா மில்லியன்) | % | (ரூபா மில்லியன்) | % | (ரூபா மில்லியன்) | % |
| அரச பிணை முறிகள் | 194,723 | 93.08 | 202,295 | 86.18 | 207,295 | 79.29 |
| ஏனைய நிலையான வருமானம் பிணை முறிகள் | 1,917 | 0.92 | 17,970 | 7.65 | 40,382 | 15.45 |
| ) குறுகிய கால மீள் கொல்வனவு | 1,751 | 0.84 | 2,846 | 1.21 | 2,940 | 1.12 |
| ) பங்கு சந்தை | 10,803 | 5.16 | 11,636 | 4.96 | 10,828 | 4.14 |
| | 209,194 | | 234,747 | | 261,445 | |

அதன் பிரகாரம் 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது ஒட்டு மொத்த முதலீட்டு கொத்தனியில் முறையே 93 சதவீதம் மற்றும் 86 சதவீதம் ஆக காணப்பட்ட அரசாங்க பிணை முறிகளில் முதலீடு 2017 ஆண்டின் போது 79 சதவீதம் வரை குறைவடைந்திருந்ததுடன் அது முதலீட்டு கொள்கை வெளியீட்டில் பிரகாரம் காணப்பட வேண்டிய வரையரையாகிய 87 சதவீதத்தைவிட 8 சதவீதம் குறைவாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும் 2015 ஆண்டின் போது 0.92 தொகையாக காணப்பட்ட ஏனைய நிலையான வருமான பிணை முறிகளில் முதலீடு அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மிகைத்து முறையே 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது 7.65 சதவீதம் மற்றும் 15.45 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன் 2015 ஆண்டின் போது ரூபா 70 மில்லியன் ஆக காணப்பட்ட நிலையான வைப்புகளில் முதலீடு 2017 ஆண்டளவில் ரூபா 38,100 மில்லியன் வரை அதிகரித்தல் அதனை நேரடியாக பாதித்திருந்தது. அதன் பிரகாரம், குறுகிய காலத்தில் முதிர்வடையக் கூடிய் பிணை முறிகளில் முதலீடுகள் அதிகரித்தல் குறைந்த ஆபத்தை உடைய அரசு பிணைமுறிகளில் முதலீடுகள் குறைவடைதலும் ஒட்டு மொத்த முதலீட்டு கொத்தனியில் ஆபத்து அதிகரிப்பதற்கு காரணமாக முடியும் என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2017 ஆண்டின் போது இலங்கை மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட 16 திறைசேரி பிணைமுறி ஏல விற்பனைவுகளின் கூறுவிலைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட 15 ஏல விற்பனை நடத்தப்பட்ட சபையினால் அவற்றில் 14 ஏல விற்பனைகள் பங்குபற்றியிருந்தனர் அவ்வாறு பங்குபற்றிய 14 ஏல விற்பனவுகளில் 4 சந்தர்பங்களில் கூறுவிலைகள் சமர்பித்திருந்த விலை கூறல் அனைத்தும் 4 சந்தர்பங்களில் சந்தர்பித்திருந்த விலைகூறல் பெறுமதியில் 90 சதவீதத்தை விட மிகையான தொகை நிரகாரிக்கப்பட்டிருந்தது.

(இ) சபையினால் திறைசேரி பிணை முறிகளுக்காக விலைகூறல் சமர்பிக்கும் போது சந்தை நிலைமை தொடர்பாக சிறந்த அறிவு ஒன்று இன்றி ஒரு ISIN இலக்கத்தின் கீழ் சமர்பிக்கப்படும் விலை கூறல் பெறுமதி சிறிய பகுதிகளாக பிரசுரிக்கப்பட்டு ஒவ்வொரு பங்கிற்குமாக உயர்ந்த விளைவு விகிதாசாரத்தின் கீழ் கூறுவிலை சமர்பித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு சந்தையில் நிலவும் சராசரி விளைவு விகிதாசரங்களையும் மிகைத்து உயர்ந்த விளைவு விகிதாசாரத்தின் கீழ் விலைகூறல் சமர்பிக்கப்பட்ட காரணத்தினால் இரண்டாம் நிலை விலை கூறல்கள் நிராகரிப்பதற்கு காரணமாகியது என அவதானிக்கப்பட்டது.

(ஈ) சபையினால் ஆரம்ப மற்றும் இரண்டா சந்தை ஊடாக கொல்வனவு செய்யப்படும் திறைசேரி பிணை முறிகள் "முதிர்வடையும் வரை தடுத்து வைக்கும் பிணைமுறி" என வகைப்படுத்தி நடத்துவதனால் அதனை இரண்டாம் நிலை சந்தையில் விற்பனை செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய நிதி அனுகூலங்களை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(உ) சபை, அரச பிணை முறிகளில் நிதி முதலீடு செய்யும் முக்கிய நிருவனம் ஒன்றாக இருந்த போதிலும், பிணைமுறி ஏல விற்பனவுகளில் நேரடியாக கூறுவிலைகள் சமர்பிக்கும் வசதிகள் (Direct Bidding Facility) இலங்கை மத்திய வங்கியில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு 2017 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) 2016 ஆண்டின் பின்னர் திறைசேரி, பிணைமுறி இரண்டாம் நிலை சந்தை கொடுக்கல் வாங்கல்களின் இருந்து சபை விலகியிருந்ததுடன் 2018 ஜூன் 30 திகதி அளவில் மீண்டும் இரண்டாம் நிலை சந்தை கொடுக்கல் வாங்கல்களும் இறங்குதல் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்காமையின் காரணமாக மேலதிக பணத்தை முதலீடு செய்வதன் சிக்கல் தன்மை காணப்படுகின்றது எனவும் மேலே 43(அ) குறிப்பிட்டுள்ளவாறு முதலீட்டு கொத்தனியினை நெறிப்படுத்தும் போது ஆபத்துக்கள் குறைந்த அரச பிணைமுறிகளை முதலீடு செய்யும் சந்தர்பங்கள் இழப்பதாகவதாகவும் கண்டறிப்பட்ட திறைசேரி பிணைமுறி இரண்டாம் தர சந்தைக்கு தொடர்புபடும் போது தேவைப்படும் தொழில் நுட்ப வசதிகளை முதலீட்டு செய்முறை தெடர்பாகவுள்ள உள்ளக கட்டுபாட்ட முன்னேற்றம் மற்றும் மனித வள அபிவிருத்தி ஆகிய கருமங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப் பட்டியிருக்கவில்லை.

(எ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு விற்பனவுக்காக காணப்பட்ட நிதிச் சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்ட 7 கம்பனிகளில் மேற்கொள்ளப் பட்டிருந்த சராசரி ரூபா 200,402,855 கிரயத்தையுடைய முதலீடுகள் தொடர்பாக 2017 ஆண்டின் போது பங்குலாப வருமானம் ஏதும் கிடைத்திருக்காததுடன் அவற்றில் 05 கம்பனிகள் இருந்து 2016 ஆண்டிற்காகவும் பங்குலாப கிடைத்திருக்கவில்லை.

### 4.4 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் சேவை நாடும் நிறுவனங்களில் இருந்து 1981 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலப்பகுதியில் அறவிடப்பட்டிருந்த 2017 திசெம்பர்

31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 2,166,965,613 இற்கான மற்றும் 1996 ஆண்டு முதல் 2002 ஆண்டுவரை காலப்பகுதிக்கான இனங்காணப்படாத ரூபா 1,307,367 இற்கான பங்களிப்புத் தொகை, நிதியச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்காமல் வேறு தற்காலிக கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. உரிய அங்கத்துவ இலக்கங்களை இனங்கண்டு அந்த கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாமல் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்தமையால் குறிப்பிட்ட அங்கத்தவர்களுக்கு தமது பணம் கிடைக்காமை ஆபத்து ஒன்று காணப்பட்டது.

(ஆ) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையில் மாத்திரம் பதிவு செய்யும் தொழில் வழங்குனர்களை சபையினால் போலி (Dummy) வேலை வழங்குனர்கள் என பதிவு செய்திருந்ததுடன் 1984 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரை அவ்வாறு பதிவு செய்துள்ள போலி தொழில் வழங்குனர்களின் எண்ணிக்கை 14,139 ஆக காணப்பட்டது . அவ்வாறான போலி மதி தொழில் வழங்குனரின் பங்களிப்பு தெகை தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாமல் 'XX' என்ற பேரில் கணக்கு ஒன்றிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு அதன் மீதி ரூபா 142,751,290 தொகாயக இருந்து. இவ்வாறு போலி தொழில் வழங்குனர்கள் என பதிவு செய்யப்படும் தொழில் வழங்குனர்களை சபையின் உண்மையான தொழில் வழங்குனர்களாக பதிவு செய்யப்படுவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

(இ) சபையின் ஊழியர்களுக்கு தங்குமிட வசதி வழங்குவதற்காக சபையின் செலவில் நடாத்தப்பட்டு வரும் அநுராதபுர விடுமுறை வாசஸ்தலம் தொடர்ச்சியாக நட்டமடையும் நிலைமை ஒன்று அறியக் கூடியதாக இருந்ததுடன் 2017 ஆண்டின் போது ரூபா 3,415,000 இற்கான தேறிய நட்டமொன்றினை பெற்றிருந்தது. கடந்த காலப் பகுதிகளின் போது அதாவது 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது பெற்றிருந்த தேறிய நட்டங்கள் முறையே ரூபா 2,938,000 தொகை மற்றும் ரூபா 2,817,000 தொகை ஆகும். இவ்வாறு நட்டமடைதல் சபையின் அங்கத்தவர்களின் நலன்கள் செலுத்துவதற்காக காணப்படும் நிதியம் குறைவடைதலை பாதித்துள்ளது.

**4.5 சர்ச்சைக்குறிய தன்மையுள்ள கெடுக்கல் வாங்கல்கள்**

---

சபை கடைகள் மற்றும் அலுவல்கள் ஊழியர்கள் சட்டத்தின் கீழ் செயற்படும் நிறுவனம் ஒன்று குறிப்பிட்டு மேலதிக நேரம் ஒரு மணித்தியாலத்திற்கு ஒன்றறை மணித்தியாலம் மற்றும் சனி/ஞாயிறு தினங்களில் மேலதிக நேரம் 8

மணித்தியாலங்கள் பூர்த்தியடைந்தவுடன் ஒரு நாள் சம்பளத்துடன் மேலதிக வேலை சம்பளம் செலுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மேலதிக நேரம் செலவுகள் ரூபா 22,238,000 தொகையாக இருந்தது. அது 2016 ஆண்டிற்கு ஒப்பாக 36 சதவீத அதிகரிப்பு ஒன்றாகும். மேற்கூறிய சட்டத்தின் பிரகாரம் மேலதிகப் படி பெற்றுக்கொள்வதற்கு சபையின் அங்கத்தவர் ஒருவாரத்திற்கு ஐந்தரை நாட்கள் சேவை ஆற்ற வேண்டியதும் வருடாந்த விடுமுறை 21 நாட்கள் என வரையறுக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு முரணாக உத்தியோகத்தர்களுக்கு வருடாந்த விடுமுறை 42 நாட்கள் வழங்குதல் மற்றும் வாரத்திற்கு 05 நாட்கள் சேவையாற்றுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

### 4.6 பதவியணி நிருவாகம்

--------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையில் 19 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 16 பதவிகள் மிகைப்பதவியணி ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. வெற்றிடமாக காணப்பட்ட பதவியணியில் பொது முகாமையாளர் பதவி 2013 ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்டமையால் சபையின் நிறுவாக அலுவல்களுக்கு மற்றும் உயர் முகாமைத்துவ மேற்பார்வைக்கு நேர் தாக்கம் ஒன்றினை ஏற்படுத்தியிருந்தது.

(ஆ) சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் முகாமைத்தவ உதவியாளர் (MA 1-2) iii பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பகிரங்க அறிவித்தலின் மூலம் வெற்றிடத்தை பகிரங்கப்படுத்தி விண்ணப்பம் கோருதல் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் செயற்படாமல் மீளாய்வாண்டின் போது சபை பதவியணியினரின் பிள்ளைகளிடம் கிடைத்திருந்த விண்ணப்பங்கள் பிரகாரம் அப்பதவியில் 39 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(இ) நிருவாக மற்றும் மனித வள வட்டார சுற்றறிக்கையின் பிரகாரம், பதவி உயர்வுகள் வழங்கும் போது சம்பளம் அற்ற விடுமுறை பெற்றிருத்தல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தும் படி குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறயினும், தபால் பகுதியின் முகாமையாளர் என பதில் கடமை நியமனம் ஒன்று பெற்றிருந்த உத்தியோகத்தர் தொடர்பாக கடமை அறிவுரைகளுக்கு கீழ்படியாமை, வலய அலுவல்களில் தொடர்ந்தும் ஒழுக்க நெறி தவறி செயற்படல் மற்றும் முறைகேடான செயல்கள் செய்திருத்தல் தொழில் வழங்குனர்களுடன் உத்தியோக பூர்வ அலுவல்களின் போது நேர்மையாகவும் தெள்ளத் தெளிவு தன்மை

தொடர்பாக சிக்கல் தன்மை நிலைமையொன்று காணப்படல் ஆகிய விடயங்களின் போதிலும் 2016 அக்தோபர் 01 திகதி முதல் அப்பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், அவ்வாறு நிரந்தரப்படுத்தும் போது அந்த உத்தியோகத்தரின் பிரிவு தலைவரிடம் செயலாற்றுகை அறிக்கை பெற்றிருந்தற்காக சான்றுகள் கண்டறியப்படவில்லை.

(ஈ) 2013 ஆண்டு பதவியனியினர் இணைத்துக் கொள்ளும் போது தொடர்ந்தும் தேவைப்படாத ஆனால் தற்போது சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் சேவை காலம் முடியும் வரை மாதத்திரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இருக்க வேண்டிய பதவி ஒன்றாக "சுய தொழில் முகாமையாளர்" பதவி இணங்காணப்பட்டிருந்தது. எனினும் அக்காலப் பகுதியில் கடமையாற்றிய உத்தியோகத்தரின் சேவையை முடிவுறுத்திய பின்னரும் அந்த பதவியை தொடர்ந்தும் பேணப்பட்டு 2015 ஆண்டு முதல் அதற்காக புதிய நியமனம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி மீது தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரின் என்ஜி/எஸ்பீ/எஸ்டீஜி/17 ஆம் இலக்கம் கொண்ட கடிதம் மற்றும் ஐக்கிய நாடுகளின் "2030 ஆண்டு நிகழ்ச்சி நிரல்" இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டியிருந்தது. அவ்வாறு சபையினால் தனது நோக்கெல்லையின் கீழ்வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிந்திருக்காமையால் நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய திருப்பு முனைகள் இலக்குகள் மீது நெருங்குவதை அளவீடு செய்வதற்கான சுட்டிகளையும் இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளக கணக்காய்வு

(அ) 2017 அண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்துடன் சமர்பிக்கப்பட்டிருந்த உள்ளக கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம், அட்டவணைபடுத்தப்பட்ட பங்குகள் மற்றும் அட்டவணைபடுத்தப்படாத பங்குகளின் முதலீடுகள்

தொடர்பாக பரிசோதனை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அவ் அலுவல்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், உள்ளக கணக்காய்வு பிரிவினால் சபையின் இறுதி கணக்குகள், வருடாந்த பாதீடு, வருடாந்த அறிக்கை மற்றும் கூட்டிணைந்த திட்டம் தொடர்பாக வருடாந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும், அவ்வாறு செயற்பட்டிருக்காததுடன் நிதியத்தின் பிரதான கடமையாகிய நிதியத்தின் மூதலீடு மற்றும் அதன் மீதான நலன்கள் ஆகிய பரப்புகள் அடங்கும் விதமாக உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6.2 பாதீட்டு கட்டுபாடு

--------------------------------

2017 ஆண்டிற்கான சபையின் பாதீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் இணக்கஞ் செய்த போது விலைகூறப்பட்ட பங்குகளின் விற்பனவின் இலாபம் மற்றும் ஆதன வருமானம் வாடகை முறையே 84 சதவீதம் மற்றும் 28 சதவீதம் ஆக பாதிடப்பட்டிருந்த தொகையை விட குறைவாக இருந்ததுடன் 31 செலவு விடயங்களில் 25 சதவீதம் முதல் 200சதவீதத்திற்கு இடையே முரண்கள் அவதானிக்கப்பட்டது. இயந்திர உபகரணங்களின் பராமரிப்பு செலவு, விளம்பர செலவு, பலவின கணக்குகள் மற்றும் அலுவலக பராமரிப்பு மற்றும் தேவைகளின் செலவுகள் முறையே 200 சதவீதம், 174 சதவீதம், 149 சதவீதம் 69 சதவீதம் ஆக பாதிடப்பட்ட தொகையை விட அதிகரித்திருந்ததுடன் 14 செலவு விடயங்களில் மிகை மதிப்பீட்டின் காரணத்தினால் உள்ளவாறான செலவு 35 சதவீதம் முதல் 95 வரை குறைந்திருந்தது. அதன் பிரகாரம் பாதீட்டு எண்ணிக்கை மற்றும் உள்ளவாறான எண்ணிக்கை இடையே கணிசமான முரண்கள் பாதீடு, முகாமைத்துவ கட்டுபாடு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6.3 பெறுகைகள்

------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 1,423,750 இற்கான மதியுரை சேவை பெற்றிருந்த போதிலும் அதற்காக பெறுகை விடயங்களை நிறைவேற்றும் போது “மதியுரையாளர்கான தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்தல்” தொடர்பாக தேசிய பெறுகைகள் முகவராண்மையால் 2007 ஆகஸ்ட் மாதத்தில் வெளியிட்டிருந்த வழிகாட்டல்

கோவையின் ஏற்பாடுகளை கடைபிடித்திருக்காத சந்தர்பங்கள் கீழ் வருமாறு ஆகும்.

(i) வழிகாட்டல் கோவையின் 5.2.1 பந்தியின் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பிரதான பெறுகை திட்டத்தில் மேற்கூறிய மதிஉரை சேவையை பெற்றுக் கொள்ளும் விடயங்கள் உட்படுத்தியிருக்காததுடன் அந்த விடயங்களுக்கு வழிகாட்டல் கோவையின் 3.4 பந்தியின் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடு ஒன்றும் தயாரித்திருக்கவில்லை.

(ii) வழிகாட்டல் கோவையின் 2.6.3 பந்தியின் பிரகாரம் சபைக்கு மதியுரை சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக பெறுகை குழு ஒன்று நியமனம் செய்திருந்ததுடன் மேற்கூறிய மதியுரை கருமங்கள் நிறைவேற்றிக் கொள்ள அந்த வழிகாட்டல் கோவையின் 8 ஆம் அத்தியாயத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மதியுரை சேவை பெறுகை குழு ஒன்றின் மதிப்பாய்வு ஒன்று இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) மேற்கூறிய மதியுரை சேவையை பெற்றுக் கொள்ளும் போது வழிகாட்டல் கோவையின் 3.3 பந்தியின் பிரகாரம் மதியுரை விடயத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கெல்லை என்பவற்றை தெளிவாக விவரிக்கும் Terms of Reference (TOR) தயாரித்திருக்காததுடன் ஆபத்தினை மதிப்பீடு செய்யும் கருமத்தின் பூர்த்தி செய்வதற்காக காலத்தை இனங்கண்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆண்டிற்கான பெறுகை திட்டம் காலத்திற்கு காலம் மீளாய்விற்கு ஆளாக்கப்பட்டிருக்காமையால் உண்மையான கொல்வனவு மற்றும் திட்டமிட்ட கொல்வனவுகள் இடையே கடுமையான முரண்பாடுகள் காணப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் போது 47 சந்தர்பங்களின் கொல்வனவு செய்வதற்கு திட்டமிட்டிருந்த விடயங்கள் திட்டமிட்ட காலப் பகுதியில் கொல்வனவு செய்திருக்காமை, 15 சந்தர்பங்களில் கொல்வனவு செய்வதற்கான திட்டமிடப்படாத விடயங்கள் கொல்வனவு செய்தல் மற்றும் ஆண்டின் போது 05 சந்தர்பங்களில் பாரிய அளவில் கொல்வனவு செய்வதற்கு திட்டமிட்டிருந்த விடயம் மிகவும் குறைவாகக் கொள்வனவு செய்தல் நடைபெற்றுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டமை என்பன சபையினால் தேவைகளை உரிய முறையில் இனங்காணாமல் 2017 அண்டிற்காக பெறுகைகள் திட்டமிடப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(இ) சபையின் உத்தியோகத்தர்களுக்கு 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 10,325,914 இற்கான சீருடைகள் பெறுகை தொடர்பான பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 4.3 இன் பிரகாரம் மேற்கூறிய பெறுகை விடயத்திற்காக மொத்த கிரய மதிப்பீடு ஒன்று தயாரித்திருக்காததுடன் அதன் காரணத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 5.3.13(ஆ) இற்கு முரணாக மதிப்பீட்டு பெறுமதிக்கு பதிலாக விலை கூறல் தொகையில் இருந்து சதவீதமொன்று விலை கூறல் பாதுகாப்பு பிணை முறி கேட்கப்பட்டிருந்தது.

(ii) வழிகாட்டல் கோவையின் பந்தி 6.2.2 இன் பிரகாரம், தேசிய போட்டி அடிப்படையிலான கூறுவிலை அழைக்கும் போது விலை கூறல் சமர்பிக்க வேண்டிய குறைந்த கால வரையறை 21 நாட்கள் வழங்கப்பட வேண்டுமெனினும் அதற்கு முரணாக விலைகூறல் சமர்பிப்பதற்காக 18 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) 2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கைநூலின் பந்தி 2.8.4 இன் பிரகாரம், தொழிலநுட்ப மதிப்பாய்வு குழுக்களில் அங்கத்தவர்கள் எண்ணிக்கை 3 இற்கும் 5 இற்கும் இடையில் இருக்க வேண்டுமெனினும் மேற்கூறிய பெறுகை விடயத்திற்கான தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு 20 அங்கத்தவர்களை கொண்டிருந்ததுடன் பந்தி 2.8.4(உ) இற்கு முரணாக ஒரு பிரிவின் பகுதி தலைவர் மற்றும் அவரின் கீழுள்ள உத்தியோகத்தர் ஒருவர் ஆகிய இருவருமே தொழில் நுட்ப மதிப்பாய்வு குழுவை பிரதிநிதித்துவப்படுத்தினர்.

(iv) விலைகூறல் சமர்பித்திருந்த விலை கூறல்தாரர்களிடம் 10 பேரில் 02 பேரினால் விலை கூறல் பாதுகாப்பு பிணை முறிக்குப் பதிலாக காசோலைகள் சமர்பித்திருந்ததுடன் மேலும் 2 விலை கூறல் தாரர்கள் விலை கூறல் பெறுமதியில் 1 சதவீதத்தை விட குறைந்த சதவீதத்தில் விலைகூறல் பாதுகாப்பு பிணைமுறி சமர்பித்திருந்தனர். விலைகூறல் பதிவேடுகளின் பிரகாரம் 120 நாட்கள் செல்லுபடியாகும் காலத்தை கொண்ட விலை கூறல் பாதுகாப்பு பினைமுறி சமர்பிக்க வேண்டுமெனினும் 4 நிறுவனங்களினால் அதை விட குறைவான செல்லுபடியாகும் காலத்தை உடைய பாதுகாப்பு பிணைமுறை சமர்ப்பித்திருந்தது. பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பந்தி 7.8.4 இன் பிரகாரம் விலைகூறலை மதிப்பாய்வு செய்யாமல் தொழிலநுட்ப

மதிப்பாய்வு குழுவின் அங்கத்தவர்களின் விருப்பத்தின் பிரகாரம் விலைகூறல் தாரர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தமையால் பாரிய விலகல்கள் காணப்பட்ட 3 நிறுவனங்களில் இருந்து கால்சட்டை துணிகளுக்காகவும், பாரிய விலகல் காணப்பட்ட ஒரு நிறுவனத்தில் இருந்து மேலங்கிகளுக்காக மாதிரிகள் பெற்றுக் கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(v) பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.3 (ஆ) பந்தியின் பிரகாரம் பெறுகைகள் குழுவினால் மற்றும் தொழிலநுட்ப மதிப்பாய்வு குழு கூட்ட அறிக்கை பெறுகை கைநூல் அடங்கியுள்ள குறிப்பிட்ட படிவத்தின் பிரகாரம் அனுப்பப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(vi) பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 4.1.1 (அ) இன் பிரகாரம் பெறுகை செயல் முறையினை வினைத்திறனுடன் திட்டமிடப்படாமையினால் சீருடை பயன்படுத்துவோர்களில் விருப்பத்தின் பிரகாரம் கால்சட்டை துணி மற்றும் சாரிகள் தெரிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நியமக் குறியீடுகளுடன் இணக்கமின்றி சீருடைகள் கொல்வனவு செய்திருந்ததுடன் அந்த சீருடைகள் தரப் பரிசோதனையின் போது தோல்வியடைந்திருந்தது.

## 6.4 தீர்கப்படாத கணக்காய்வு பந்திகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் இரண்டு கம்பனிகளில் கடன் பத்திரங்களில் செய்யப்பட்ட முதலீடுகளுக்காக 2006 திசெம்பர் 31 திகதி வரை பெறவேண்டியிருந்த ரூபா 27,497,905 இற்கான வட்டி வருமானம் மீளாய்வாண்டு இறுதிவரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதனை அறவீடு செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அல்லது அறவீடு செய்வதற்கு இயலுமை தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் பிரகாரம் நிதிக் கூற்றுகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளல் அல்லது தேவையான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் ரூபா 25,227,541 தொகை முதலீடு செய்யப்பட்ட பட்டியலிடப்பட்ட 2 கம்பனிகள் ஒழிக்கப்பட்டிருந்ததுடன் அந்த முதலீடுகளின்

பெறுமதி, மீண்டும் அறவீடு செய்யக் கூடிய இயலுமை தொடர்பாக குறிப்பிட்ட உறுதியொன்று சபையிடம் காணப்படவில்லை.

(இ) வணிக கம்பனியின் வாக்குறுதி பத்திரங்கள் முதலீடு செய்திருந்த ரூபா 12,174,382 தொகை மற்றும் கடன்பத்திரங்கள் முதலீடு செய்திருந்த ரூபா 7,450,259 தொகை முறையே 2002 மற்றும் 2007 ஆண்டுகளின் போது தேறப்பட்ட வேண்டியிருந்த போதிலும், அந்தப்பணத்தை தேறச் செய்வதற்காக 2017 திசெம்பர் 31 திகதி சபைக்கு இயலுமாக இருக்கவில்லை.

(அ) ஊழிய நம்பிக்கை பொறுப்பு நிதி சட்டத்தின் பிரிவு 5(2) இன் பிரகாரம், சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சபையின் தலைவராக இருக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ள பிரிவுகளை திருத்தப்பட வேண்டுமென 2016 ஆகஸ்ட் 26 திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் விதந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் 2018 மே 31 திகதி அளவிலும் அதற்குரிய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**7. முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமை மற்றும் கட்டுபாடு குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுபாடு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) அங்கத்துவ நிதிய முகாமைத்துவம் | (i) சபையின் அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு இதுவரை செலவு வைக்கப்படாத பங்களிப்பு தொகை அந்த கணக்குகளும் விரைவாக செலவு வைக்கப்படாமை மற்றும் தடுத்து வைத்த நலன்கள் உரிய உரிமையாளர்களுக்கு தாமதமின்றி செலுத்துவதற்காக நடவடிக்கை எடுக்காமை. |

| | | |
|---|---|---|
| | | (ii) தொழில் வழங்குனரிடம் சேகரிக்கப்படும் பணத்தை கூடிய பாதுகாப்பு தன்மையுடன் மற்றும் மிகையான நலன்கள் பெறக் கூடிய விதத்திலும் முதலீடு செய்யாமை. |
| (ஆ) | பாதீட்டு கட்டுபாடு | பாதிட்டு வருமானம் மற்றும் செலவுக்காக இணங்க நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | பெறுகை நடவடிக்கை முறை | தேவையினை இனங்கண்டு பெறுகைகளுக்கான திட்டமிடல் மற்றும் பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க பெறுகை மேற்கொள்ளப்படாமை. |
| (ஈ) | பதவியணி நிருவாகம் | சிறந்த பதவியணி நிரவாகம் ஒன்று சபையில் செயற்படுத்தப்படாமை. |
| (உ) | திட்டமிடல் | வியாபார சுழலில் காணப்படும் சந்தர்பங்கள் மற்றும் தடைகளை இணங்கண்டு அதன் பிரகாரம் மூலோபாயங்களை இனங்காணாமை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 கான சபையின் அவதானிப்புக்கள்

### 2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள செலவு 441 மில்லியன் ரூபா நிலையான சொத்துக்களின் திரண்ட மீதியை கழித்த பின்னர் தேறிய பெறுமதி 173 மில்லியன் ரூபா ஆகும்.

இலங்கை கணக்கீட்டு நியமம் இல 16 இன் 30 ஆவது பிரிவின் பிரகாரம் சபையின் சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் செலவு மாதிரியின் (Cost Model) கீழ் கணக்குகளில் பதிவுசெய்யப்படுவதனால் கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள படி இலங்கை கணக்கீட்டு நியமம் இல 16 இன் 34 ஆம் பிரிவு ஏற்புடையதன்று.

மேலும், சபையின் நிலையான சொத்துக்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை சாதாரண அலுவலக நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படும் சொத்துக்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்களாகும். அத்தகைய வகையீடுகளின் எண்ணிக்கையளவில் விலைமாற்றங்கள் நிகழாத காரணத்தினால் அந்த சொத்துக்கள் விற்பனை செய்யப்படுவதில்லை. எனவே, இலங்கை கணக்கீட்டு நியமத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக உள்ள ஆலோசனைகளின் பிரகாரம் சபையின் நிலையான சொத்துக்களை அடையாளம் காணல் மற்றும் கணக்கீட்டுக்கு (Recognition and Measurement) மிகச் சிறந்த முறை செலவு மாதிரி (Cost Model) ஆகும். அது கடந்த 37 வருடங்களாக தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 2.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அடையாளம் காணப்படாத மீதிகளின் பெறுமதி ரூ. 588,000 ஆகும். இந்த மீதிகளில் உள்ளடங்குவது பங்களிப்புத் தொகை சேகரிப்புக்கு ஏற்புடைய காசுப் புத்தக சாராம்சங்கள் 09 இல் அடையாளம் காணப்படாத பங்களிப்புத் தொகை வருமதிகளின் மொத்தமாகும். எதிர்கால கணக்கீட்டு காலப் பகுதிக்குள் இந்தப் பங்களிப்புத் தொகைகளை அடையாளம் கண்ட பின்னர் திருத்தமாக கணக்குகளில் பதியப்படும் என்பதோடு அங்கத்துவக் கணக்குகளிலும் வரவு வைக்கப்படும்.

### 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கு ஏற்புடைய உரிமைக் கோரப்படாத உயர் தரம் சித்தியடைந்த மாணவர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய புலமைப் பரிசில் தொகை ரூ. 1,865,000 கணக்குகளில் வெளிக்காட்டப்படவில்லை. 2017 நிதி ஆண்டிற்குள் 1994 வருடத்ததிலிருந்து 2009 வருடம் வரையிலான காலப் பகுதிக்குரிய உயர் தரம் சித்தியடைந்த மாணவர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய பணத் தொகை ஏதும் இல்லாததோடு, சகல உரிமைக் கோரல்களும் செலுத்தப்பட்டுள்ளன.

(ஆ) உரிமைக் கோரப்படாத மரண நலன்கள் கணக்கில் 2017.12.31 ஆம் திகதி நிலவிய மீதி ரூ.10,170,557,24 ஆகும். (நலன் கோரிய விண்ணப்பதாரிகள் - 841) அங்கத்தவர்களின் மரணத்தின் பின்னர் அந்த அங்கத்தவரின் நலன்களுக்கு ஒருவருக்கு மேற்பட்டவர்கள் இருக்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன. அந்த உரிமையாளர்கள் அனைவரும் ஒரே சந்தர்ப்பத்தில் தோற்றாமை மற்றும் சிலருக்கு போதியளவு எழுத்தாவண தகவல்கள் (சான்றிதழ்களை துரிதமாக சமர்ப்பிக்காமை) சமர்ப்பிக்கவுள்ள அசௌகரியங்கள் காரணமாக அவர்களது பங்குகள், சபையின் கணக்குகளின் நிறுத்தி வைக்கப்பட்டு, ஆவணங்களை சமர்ப்பித்துள்ள உரிமையாளர்களின் பங்குகளை மாத்திரம் செலுத்துவது தற்போது பின்பற்றப்படும் நடைமுறையாகும். அதற்கமைய, 2018 ஜனவரி முதல் செப்டம்பர் மாதம் வரை மரண நலன் உரிமையாளர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற்கொண்டு ரூ.69,454.13 தொகை உரிமையாளர்கள் 04 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது. 2018.09.30 ஆம் திகதிக்கு உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய பொறுப்புக்களின் பெறுமதி ரூ.10,101,103.11 ஆகும். (மரண நல விண்ணப்பங்கள் 837)

மீண்டும் திருப்பி அனுப்பப்பட்ட நலன்கள் (Returned Benefits - Slips) கணக்கில் 2017.12.31 ஆம் திகதிக்கு மீதி ரூ.17,341,449.36 ஆகும். (பயனாளிகள் 1061) இந்த அங்கத்தவர்களுக்கு உரிய நலன் தொகைகள் வங்கிகளுக்கு இடையிலான செலுத்தல் முறைகளின் கீழ் நலன் கோரல் விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் அந்த விண்ணப்பதாரர்களின் வங்கிக் கணக்குகளில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக ஏற்புடைய வங்கிகள் மூலம் அவை திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. அவை ஒன்று சேர்ந்து இந்தத் தொகை உருவாகியுள்ளது.

இந்த நலன் விண்ணப்பதாரர்களில் 2018 ஜனவரி மாதம் முதல் 2018 செப்டம்பர் மாதம் வரை நலன் உரித்தாளர்கள் 245 பேரால் கோரப்பட்டுள்ள ரூ.5,669,220.77 தொகை நலன் கொடுப்பனவாக செலுத்தப்பட்டுள்ளது. 2018.09.30 ஆம் திகதிக்கு செலுத்த வேண்டியுள்ள பொறுப்புக்களின் பெறுமதி ரூ.11,672,248.59 ஆகும். (பயனாளிகள் 816)

உரிமைக் கோரப்படாத நலன்கள் (Returned Benefits - Cheques) கணக்கில் 2017.12.31 ஆம் திகதிக்கு மீதி ரூ.6,534,199.35 ஆகும். (பயனாளிகள் 1004) வங்கிகளுக்கு இடையிலான செலுத்தல் முறையின் கீழ் நலன்களைச் செலுத்துவதற்கு கணக்கு விபரங்கள் இல்லாத நலன் கோரிய விண்ணப்பதாரிகள் 1004 பேருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட காசோலைகள், அந்த நலன் கோரிய விண்ணப்பதாரர்களினால் வங்கியில் இடப்படாத காரணத்தினால் கோரிக்கை விடுக்காத நலன் கணக்கு மீதிகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

இந்த நலன் கோரிய விண்ணப்பதாரிகள் 1004 பேரில் பயனாளிகள் 482 பேருக்கு 2018 ஜனவரி மாதம் முதல் 2018 செப்டம்பர் மாதம் வரையில் ரூ.4,199,314.54 மீண்டும் செலுத்தப்பட்டுள்ளதோடு, பணம் செலுத்தப்படாத பயனாளிகளுக்கு மேலும் 2018.09.30 ஆம் திகதிக்கு கொடுப்பனவு செலுத்த வேண்டியுள்ள பெறுமதி ரூ.2,334,884.81 ஆகும். (பயனாளிகள் 522)

2015.12.09 ஆம் திகதி நடைப்பெற்ற முகாமைத்துவக் குழு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய 2001 முதல் 2005 ஆம் திகதி வரை இந்தப் பேரேடுகளில் காணப்படும் கணக்கு மீதிகளை ஏற்புடைய அங்கத்துவக் கணக்குகளில் செயல்படுத்தி அந்தந்தக் கணக்குகளை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து அதன் பெறுமதியை பேரேட்டிலுள்ள அங்கத்துவக் கணக்குகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, அதற்கமைய திருப்பி அனுப்பப்பட்ட நலன்கள் (Returned Benefits - Slips) பேரேட்டில் அங்கத்தவர்கள் 223 பேரின் (ரூ.1,818,867.42) அங்கத்துவக் கணக்குகளை செயற்படுத்தி அந்தந்தக் கணக்குகளின் பெறுமதிகள் பேரேட்டில் உள்ள அங்கத்துவக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. உரிமைக் கோரப்படாத நலன்கள் (Returned Benefits - Cheques) பேரேட்டில் அங்கத்தவர்கள் 67 பேரின் (ரூ.118,719.57) அங்கத்துவக் கணக்குகளை செயற்படுத்தி அந்தந்த கணக்குகளின் பெறுமதிகள் பேரேட்டிலுள்ள அங்கத்துவக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

2018.07.23 ஆம் திகதி நடைப்பெற்ற கணக்காய்வுக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை இந்தப் பேரேடுகளில் காணப்படும் கணக்கு மீதிகள் ஏற்புடைய அங்கத்தவர்களின் அங்கத்துவக் கணக்குகளை செயற்படுத்தி அந்தந்த கணக்குகளை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் பெறுமதிகள் பேரேட்டிலுள்ள அங்கத்துவக் கணக்குகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) எசட் புரொபர்டி டிவலொபர்ஸ் நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூ.7,512,346 தொகை சபைக்கு அறவீட்டுக் கொள்வதற்கு தற்போது ஹொரணை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் 9109ஃஎம் கீழ் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த வழக்கு விசாரணை 2018.11.27 ஆம் திகதி நடைப்பெறவுள்ளது.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

(அ) பதில் கடமை நியமனம்

எமது சபையில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள EISA மற்றும் ICTA கருத்திட்டங்களுக்கு இணைவாக மனிதவள அபிவிருத்தியை முறையாகவும் தொடர்ச்சியாகவும் மேற்கொள்ளும் நோக்கில் அந்தப் பணிக்காக தனியான முகாமையாளர் ஒருவரின் கீழ் பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவொன்று நிறுவப்பட வேண்டுமென முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய சபையின் நிர்வாகம் மற்றும் மனிதவள அபிவிருத்திப் பிரிவு பின்வருமாறு மூன்று கிளைகளாக பிரிக்கப்பட்டது.

- நிர்வாகக் கிளை
- மனிதவள அபிவிருத்திக் கிளை
- மனிதவள முகாமைத்துவக் கிளை

அதற்கிணங்க, தற்போது அனுமதிக்கப்பட்ட ஆளணி மதிப்பீட்டில் முகாமைத்துவப் பதவிகளை விஞ்ஞாத வண்ணம் முகாமையாளர்கள் மூவரின் கீழ் அந்தக் கிளைகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்காக இந்த பதில் கடமை நியமனங்கள் நேர்முகப் பரீட்சையின் பின்னர் திறமையை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் 2 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டவருக்கு வழங்கப்பட்டது. பின்னர் அவரது செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டதனால் 2016.10.01 ஆம் திகதி பணிப்பாளர் சபையின் அனுமதிக்கு உட்பட்ட வகையில் அவரது சேவை உறுதிப்படுத்தப்பட்டது.

அவ்வாறே, நிர்வாக விடயங்களுக்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு முகாமையாளர் பதவிக்கு பதவி உயர்வு வழங்கப்படாத காரணத்தினால் உத்தியோகத்தர் ஒருவர் சமர்ப்பித்த முறைப்பாட்டுக்கு வழங்கப்பட்ட சிபாரிசுக்கு அமைய அனுமதிக்கப்பட்ட மொத்த முகாமையாளர் பதவி எண்ணிக்கையை விஞ்சாத வகையில் அந்த உத்தியோகத்தரை பதில் கடமை அடிப்படையில் முகாமையாளர் பதவிக்கு 2014.11.03 ஆம் திகதி முதல் நியமித்து அவர் கடமைப் புரிந்த அஞ்சல் பிரிவுக்கே இணைப்புச் செய்யப்பட்டது. அதன் பின்னர் அவரது வருடாந்த செயலாற்றுகை அறிக்கை திருப்திகரமானதாக இருந்த காரணத்தினால் 2016.10.01 ஆம் திகதி முதல் பணிப்பாளர் சபையின் அனுமதிக்கு உட்பட்ட வகையில் அவரது சேவை உறுதிப்படுத்தப்பட்டது. அவரது நியமனத்திற்கான கட்டளை சபைக்கு வெளியிலிருந்து கிடைக்கப்பெற்றதனால் அது சபையின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் செய்யப்பட்ட ஒரு நியமனமாகும்.

(ஆ)

(i) பதில் கடமை நியமனம் தொடர்பாக தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளை நேரடியாக அரச சார்பு நிறுவனமொன்றாக சபை பின்பற்றாது. எவ்வாறெனினும், பதில் கடமை காலத்தை நீடித்தல் முடிவுறுத்தல் அல்லது பதில் கடமை மேற்கொண்ட பதவியில் நிரந்தரமாக்கல் போன்ற விடயங்கள் மேற்கொள்ளப்படுவது உத்தியோகத்தரின் செயலாற்றுகை மற்றும் நடத்தை உள்ளிட்ட பல்வேறுபட்ட காரணிகள் திருப்திகரமான மட்டத்தில் காணப்படுமிடத்து மாத்திரமேயாகும். எனவே, ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் பதில் கடமைக் காலம் அந்தக் காரணிகள் மீது மாற்றமடையலாம்.

(ii) சபையின் நிர்வாக மற்றும் ஒழுக்காற்று நடைமுறைக்கு பணிப்பாளர் சபையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதோடு, அவற்றை இற்றைப்படுத்தி திறைசேரியின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

இணங்குகிறேன்.

### 3.2 நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகள்

சபையினால் ரூ.1,902.318 தொகையை அறவீட்டுக் கொள்வதற்காக ஒரு தனியார் கம்பனிக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்கு தற்போது இணக்கப்பாட்டுக்காக குற்றம்சாட்டப்பட்ட தரப்பினரின் வழக்கறிஞரால் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இணக்க நிபந்தனைகளை எழுத்துமூலம் சபைக்கு வழங்கும் பொருட்டு கட்டளையொன்று நீதினமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளதோடு, அந்த எழுத்துமூல நிபந்தனைகளை 2018.08.28 ஆம் திகதிக்கு முன்னர் சபைக்கு வழங்குவதற்கு தவறுமிடத்து விசாரணைக்காக 2018.11.27 ஆம் திகதி நாள் குறிக்கப்பட்டுள்ளது.

ரூ.166,687.328 பங்களிப்புத் தொகை மற்றும் தண்டப் பணங்களை அறவிடுவதற்காக நாடு பூராகவும் 2321 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1

(அ) எதிர்வரும் 3 வருடங்களுக்காக தயாரிக்கப்பட்ட இணைந்த திட்டத்தில் காணப்படும் பலங்கள், சந்தர்ப்பங்கள், பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் பற்றிய பகுப்பாய்வின் போது (SWOT) அடையாளம் காணப்பட்ட சபையினால் கட்டுப்படுத்த முடியுமான பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு சபையினால் முன்னெடுக்கப்படவுள்ள சகல உபாய முறைகளும் எதிர்வரும் 3 வருடங்களுக்கும் தயாரிக்கப்பட்ட இணைந்த திட்டத்தில் விபரமாக காட்டப்பட்டுள்ளது.

மனிதவள அபிவிருத்தி, புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்தல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், புதிய முதலீட்டு உத்திகளை அறிமுகப்படுத்தல், புதிய கட்டிடமொன்றுக்கு இடம் மாறுதல் மற்றும் ஆட்சேர்ப்புத் கொள்கைத் திட்டத்திற்கு அறிமுகப்படுத்தியுள்ள புதிய மாற்றங்கள் என்பன மேற்குறிப்பிடப்பட்ட பலவீனங்களை தவிர்ப்பதற்கு சபையினால் முன்னெடுக்க உத்தேசிக்கப்படும் சில இலக்குகளாகும். அதன் இலக்குகளை அடைந்துகொள்ளும் முறை, கால எல்லைகள், நிதிப் பெறுமதி மற்றும் பொறுப்புக்களை சுமக்கும் உத்தியோகத்தர்களின் விபரங்கள் என்பன இணைந்த திட்டத்தில் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) சபையினால் முறையான முதலீட்டுக் கொள்கையொன்று 2012 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டுள்ளதோடு, அது பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. பிற்பட்ட காலங்களில் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமொற்றின் அடிப்படையில் அரச வங்கிகளில் நிலையான வைப்புக்களில் செய்யப்படும் முதலீடுகள் ‘முதலீட்டுக் கொள்கையில் 5% பகுதிக்கு அப்பால் கருத்திற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கான காரணம் அரச வங்கிகளின் முதலீடுகளின் அபாயம் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் இல்லை எனக் கருதியாகும். மேலும், 2017 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையின் மிகப் பெரிய மூன்று வங்கிகளில் நிலையான வைப்புக்களில் வைப்பிலிடப்படுவது பணிப்பாளர் சபையினால் அனுமதிகப்படும் எல்லைக்கு உட்பட்ட வகையிலாகும். முதலீட்டுக் கொள்கைக்குச் செய்யப்பட்ட மேற்படி திருத்திற்கு அமைய 87% ஆகக் குறைந்த வீதம் அரச பிணையங்களில் மற்றும் அரச வங்கிகளின் நிலையான வைப்புக்களின் மொத்தமாக கருதப்படுகின்றது. அதற்கிணங்க செயலாற்றுகையை அளவிடும் செயலாற்றுகை அளவீட்டுச் சுட்டிகள் (KPI) சரியாக இனம் காணப்பட்டிருந்தன.

மேலும் 2012 ஆம் ஆண்டில் முதலீட்டுக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட காலப் பிரிவில் எமது சபைக்கு (Private Placement) என அறியப்படும் ஆரம்ப சந்தையில் அரச பிணையங்களை கொள்வனவு செய்யும் முறை அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. அந்த முறையின் (Private Placement) கீழ் 100% ஆன அளவு கூட தேவை ஏற்படின் அரச பிணையங்களில் முதலீடு செய்ய முடியுமாக இருந்தது. அதற்கான காரணம் எமது நிறுவனத்திடமிருந்த எந்தவொரு தொகையும் எந்தவொரு நாளிலும் மத்திய வங்கியினால் அன்றைய நாளில் காணப்படும் வட்டி வீதங்களின் அடிப்படையில் (Weight Average Yield) எமது நிறுவனத்திற்கு பிணையங்கள் விற்பனை செய்யப்பட்டன. அதற்கிணங்க, 87% அரச வங்கிகளில் முதலீடு செய்வதற்கும் “அதிக வட்டியைப் பெற்றுக்கொள்வதற்கு உள்ள சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்வதற்கும் 5% ஐ வேறு நிலையான வட்டி வீதங்களில் முதலீடு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது. ஆயினும்,

2015 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தின் பின்னர் இந்த Private Placement முறை நீக்கப்பட்டு கட்டாயமாக கூறுவிலை முன்வைத்து ஏலத்தில் பங்குகொண்டு அரச பிணையங்களை கொள்வனவு செய்யும் முறை அறிமுகம் செய்யப்பட்டது.

அதற்கிணங்க, சபைக்கு அரச பிணையங்களை கொள்வனவு செய்வதற்கு முடியுமாவது 2015 ஆம் ஆண்டிலிருந்து ஏல முறை நடைமுறைப்படுத்தப்படும் ஆரம்ப சந்தையிலிருந்து மற்றும் போட்டித்தன்மை மிகு இரண்டாம் நிலை சந்தையிலிருந்து மாத்திரமாகும். 2016 ஆம் ஆண்டு காணப்பட்ட நிலமைக்கு அமைய இரண்டாம் நிலைச் சந்தையிலிருந்து திறைசேரிப் பிணைமுறிகள் கொள்வனவு நிறுத்திவைக்கப்பட்டது. அதற்கமைய, ஆரம்ப சந்தையில் விலை மனுக்கள் நிராகரிக்கப்படும் போது மற்றும் பிணைமுறி ஏலம் நடைபெறாத சந்தர்ப்பங்களில் காணப்படும் நிதியங்களை முதலீடு செய்வதற்கு உள்ள ஒரே மாற்றுவழி பிரதான 03 அரச வங்கிகளிலும் முதலீடு செய்வதாகும். மேலும், 87% சதவீதத்தினுள் காணப்படும் ரூபா கடன் விநியோகம் மத்திய வங்கியினால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, சபை மூலம் திறைசேரிப் பிணைமுறிகளுக்கான வட்டி வீதம் குறைந்த அளவில் காணப்பட்டதனால் அந்த ஆரம்ப சந்தையில் முதலீடு செய்யப்படவில்லை. அத்தோடு, 87மூ சதவீதத்திற்குள் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதற்கு எவ்வித மட்டுப்பாடுகளும் காணப்படவில்லை. அவ்வாறெனினும், பணிப்பாளர் சபையினால் ஆரம்பமாக அனுமதிக்கப்பட்ட முதலீட்டு எல்லைகளின் கீழ் அரச வங்கிகளில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது.

### 4.1.2 தொழிற்பாட்டு மீளாய்வு

(அ) இலங்கை முழுவதும் பரந்துள்ள சுயதொழிலாளர்கள், சபையின் சுயதொழில் அங்கத்துவத்திற்கு இணைத்துக்கொள்வதற்காக அரச, அரச சார்பு மற்றும் தனியார் நிறுவனங்களை ஒருங்கிணைப்புடன் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்து செயல் திட்டத்திற்கு அமைய, சுயதொழிலாளர்களை அறிவூட்டல் மற்றும் ஆட்சேர்ப்புக்காக பல கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. சுயதொழிலாளர்களை அறிவூட்டும் கூட்டங்களுக்கு குறிப்பிடத்தக்க அளவு எண்ணிக்கையினர் பங்குபற்றிய போதிலும் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களில் சிலரே முன்வருகின்றனர்.

1988 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்திய) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் சுயதொழிலாளர்களை இணைத்துக்கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாக்கப்படாத காரணத்தினால் சுயமாக முன்வருபவர்கள் மாத்திரம் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்கின்றனர்.

மீளாய்வுக்குரிய வருடத்தில் தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்திற்கு அமைய, சுயதொழிலாளர்கள் 2000 பேரை இணைத்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், 996 பேர் அவர்களது சுய விருப்பத்தின் பேரில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் காணப்படும் பிரதேச அலுவலகங்கள் 18 இன் மூலம் பல்வேறுபட்ட கண்காட்சிகள், நடமாடும் சேவைகள் மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக சுயதொழிலாளர்களை அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுயமாக முன்வருபவர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(அ) இலங்கை மத்திய வங்கி அறிக்கைக்கு அமைய 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி இலங்கையில் சுய தொழிலாளர்கள் 2,571,023 என அறிக்கையிடப்பட்டுள்ளது. மாகாண மற்றும் மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் நிலைப்படுத்தப்பட்டுள்ள சுயதொழிலாளர்களை ஒன்றுசேர்த்து இந்த அங்கத்துவதத்தைப் பெற்றுக்கொள்வதன் மூலம் அவர்களுக்கு கிடைக்கும் பாதுகாப்பு தொடர்பாக சரியான புரிதலை வழங்கிய போதிலும் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாக்கப்படாத காரணத்தினால் சுயமாக முன்வருவோரின் எண்ணிக்கை குறைவாக உள்ளது.
சுயதொழிலாளர்கள் ஊ.ந.பொ.நிதியத்தின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாக்கப்பட்ட சட்டங்கள் அரச மட்டத்தில் மேற்கொள்வதன் மூலம் சுயதொழிலாளர்களுக்கு அங்கத்துவத்தை வழங்க முடியும் என்பதையும் முன்மொழிகின்றேன்.

(ஆ) சபையின் செயல் திட்டத்தினுள் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் ஊழியர் செயலாற்றுகை மதிப்பீட்டு முறையை விருத்தி செய்தல் மற்றும் மாதாந்த ஊக்குவிப்பு முறையை ஊழியர் செயலாற்றுகையுடன் இணைத்தல், சபையின் மொத்த செயலாற்றுகையை விருத்தி செய்யும் உபாய முறையாகக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, அந்தப் பணியை மேற்கொள்வதற்காக வெளிவாரி ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அவர்கள் அந்த ஒப்படைகளின் முன்னேற்றம் 30% மற்றும் 25% என குறிப்பிடப்பட்டுள்ளனர். அந்தக் கருத்திட்டங்களை 100% மட்டத்தில் பூரணப்படுத்துவதற்கு குறிப்பிட்டதொரு காலம் செலவாகும்.

(இ) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டத்தின் 14 மற்றும் 22 ஆம் பிரிவின் பிரகாரம் வட்டி மற்றும் பங்கிலாபங்கள் வருடாந்த உழைப்புக்களிலிருந்து செலுத்தப்படும். சங்கத்தின் முதலீடுகளின் கட்டமைப்பில் 95% அரசாங்க பிணையங்கள் மற்றும் அரச வங்கிகளிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டி வருமானத்தைக் கொண்டாகும். எனவே, நாட்டில் காணப்படும் வட்டி வீதங்கள் சபையின் இலாபத்தில் நேரடியாக தாக்கம் செலுத்துகின்றது. கணக்காய்வு விசாரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள படி 2010 ஆம் ஆண்டில் 12.5% அளவு செலுத்த முடியுமாக இருப்பதற்கான காரணம் அப்போது முதலீட்டு அமைப்பு (Investment Portfolio) உயர் வட்டி வீத

பெறுமதி வழங்கப்படும் அரசாங்கப் பிணையங்களினால் ஆக்கப்பட்டிருந்த காரணத்தினாலும் 2017 ஆம் ஆண்டளவில் தேய்மான வட்டி வீதம் 10% வரை குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்த காரணத்தினாலும் சபையின் உழைப்பும் ஒப்பீட்டு ரீதியில் குறைவான பெறுமானத்தைக் கொண்டிருந்தது. அரசாங்க நிதிக் கொள்கைகள் நேரடியாக சபையின் உழைப்பின் தாக்கத்தை ஏற்படுத்துவதால் சபையின் வருடாந்த உழைப்பு உற்பத்திறனும் வருடாந்தம் தலம்பலுக்கு உட்படுகின்றது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

சபை ஒரு நியதிச்சட்ட நிறுவனம் என்பதனால் நிதி கொடுக்கல் வாங்கல்களின் போது நிதி ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகள் அச்சொட்டாக பின்பற்றப்படுகின்றது. ஆயினும், தொழிற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வசதி கருதி உள்ளக ரீதியில் தயாரிக்கப்பட்ட நிதி நடவடிக்கை முறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதோடு, அது வெறுமனே, ஆலோசனைத் தொகுதியொன்றாக பயன்படுத்தப்படுவதே அன்றி அது ஒரு சட்ட ரீதியான ஆவணமாக பயன்படுத்தப்படுவதில்லை. ஆயினும் கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி நடவடிக்கை முறை பணிப்பாளர் சபையின் பூரண அனுமதியுடன் அது தயாரிக்கப்பட்ட வருடத்திலேயே பொது திறைசேரியின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 4.3

(அ) மேற்படி 4.1.1 (ஆ) பதில் இதற்கும் பொருந்தும்.

மேலும், முதலீட்டுக் கொள்கை பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. நடப்பு தேவைக்காக அது திருத்தப்படுவதும் பணிப்பாளர் சபையின் அனுமதியுடனே ஆகும். நிலவும் வியாபாரச் சூழலில் சவால்களை வெற்றிகொள்வதற்காக சபைக்கு நன்மைப் பயக்கும் விதத்தில் அதனை மாற்றியமைக்க வேண்டியது கட்டாயத் தேவைப்பாடாகும். பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் செய்யப்படும் திருத்தங்களுக்கு அமைய செய்யப்படும் முதலீடுகள் அதன் ஆபத்தை தணிப்பதற்கும் வருமானத்தை உச்சமாக அதிகரித்துக் கொள்வதற்காகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தோடு வருடாந்த முதலீடுகள் செயல் திட்டத்திற்கும் திருத்தப்பட்ட முதலீட்டுக் கொள்கைகளுக்கும் அமையவே மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க, ஆகக் குறைந்த 87% இன் கீழ் அரசாங் பிணையங்கள் மற்றும் அரச வங்கிகளின் நிலையான வைப்புக்கள் கருதப்படுகின்றன. அதற்கமைய 2017 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த அரச பிணையங்கள் மற்றும் அரச வங்கிகளில் நிலையான வைப்புப் பிரிவின் முதலீட்டு வீதத்தின் மொத்தம் 93.87% ஆக இருந்ததோடு, அது 87% விடவும் அதிகமான பெறுமதியாகும். 2017 ஆம் ஆண்டளவில் அரச பிணையங்களில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட முதலீடு 79.29% ஆக இருந்தது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் அதிக அபாயம் மிக்க வேறு நிலையான பிணையங்களில் முதலீடு 0.88% மாத்திரமாகும். ஆயினும், அதற்கான அனுமதிக்கப்பட்ட வீதம் 5% ஆகும். அதற்குள் பயன்படுத்தாத சதவீதம் 4.12% ஆகும். குறுகியகால மீள் கொள்வனவுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வீதம் 2% ஆகும். பயன்படுத்தப்பட்ட வீதம் 1.12% ஆகும். அதன் பயன்படுத்தாத வீதம் 0.88% ஆகும். பங்குச் சந்தைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வீதம் 6ூ ஆகும். பயன்படுத்தப்பட்ட தொகை 4.14% ஆகும். பயன்படுத்தப்படாத வீதம் 1.86% ஆகும். அவ்வாறு பயன்படுத்தாத தொகையையும் பயன்படுத்தி 2017 ஆம் ஆண்டின் இறுதியில் அரச பிணையங்கள் மற்றும் அரச வங்கிகளில் முதலீடு செய்யப்பட்ட வீதம் உச்ச அளவில் பேணப்பட்டது.

2017 ஆம் ஆண்டு தொடக்கம் சபையின் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படுவது பணிப்பாளர் சபையினால் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்கு உள்ளாகும். அவ்வாறே, அது இலங்கையின் பிரதான அரச வங்கிகள் 03 உடன் மேற்கொள்ளப்படுகின்றது. ஆயினும், அரச பிணையங்களாக கருதப்படும் வருடத்திற்கு அல்லது அதற்கு குறைவான காலத்திற்குள் முதிர்ச்சி அடையும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதற்கு எவ்வித தடையும் இல்லை. அதற்கிணங்க, திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரச வங்கிகளில் வைப்பு ஆகிய இரு வகையினதும் முதலீடுகள் ஒரு வருடத்திற்கு அல்லது அதற்கு குறைந்த குறுகிய கால முதலீடுகளாகும். அதற்கமைய, காணப்பட்ட முதலீட்டுச் சூழலுக்குள் நிலையான வைப்பு முதலீடுகளுக்கு மாற்று வழியான முதலீடுகளாக குறைந்த வட்டி வீதங்களுடைய திறைசேரி உண்டியல்களே காணப்பட்டன. அதற்கமைய இரண்டாம் நிலை சந்தையில் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்ட போது அரச பிணையங்களின் முதலீட்டு வீதத்தை படிப்படியாக விருத்தி செய்வதன் மூலம் அரச வங்கிகளின் நிலையான வைப்புக்களின் வீதத்தை படிப்படியாக குறைக்க முடியும்.

(ஆ) ஏலத்திற்கு சமர்ப்பிக்கப்படும் கூறு விலைகள் முழுமையாக நிராகரிக்கப்படல் மற்றும் கூடிய வீதத்தில் நிராகரிக்கப்படுவது சாதாரண சந்தை நிலைமையாகும். அவ்வாறு நிகழ்வதற்குரிய காரணம் W.A.Y இழிவுப் பெறுமதி அடைதல் அல்லது எதிர்பார்த்த படி W.A.Y அதிகரிக்காமையினாலாகும். மேற்படி சில சந்தர்ப்பங்களில் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் உயர் கூறுவிலைகளை ஏற்றுக்கொள்ளும் வீதம் பேணப்பட்டுள்ளது.

(இ) இரண்டாம் நிலைச் சந்தையில் காணப்படும் சாதாரண பயன் வீதம் ஆரம்ப சந்தையின் பயன் வீதத்தை தீர்மானிப்பது தொடர்பில் தாக்கம் செலுத்தும் ஒரே காரணி அல்ல. சில சந்தர்ப்பங்களில் இரண்டாம் நிலைச் சந்தையில் பயன் வீதங்களை விட உயர் மட்டத்தில் ஆரம்ப சந்தையின் பயன் வீதங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில்

சிறு பகுதிகளுக்கு பிரித்து உயர் வீதத்தின் கீழ் கூறு விலைகள் சில முன்வைக்கப்படுவதற்குரிய காரணம் ஆரம்ப சந்தையில் விலைகள் அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பிலாகும். அவ்வாறு உயர்வடையும் போது அதனால் உச்ச நன்மையை அடைந்துகொள்ளும் நோக்கிலாகும். சபை எல்லா சந்தர்ப்பங்களிலும் கூறு விலைகளை சமர்ப்பிப்பது சந்தை தொடர்பான சிறந்த ஆய்வின் பின்னராகும். ஆயினும் பல்வேறுபட்ட காரணங்களினால் ஏற்புடைய ஏலங்களின் போது விலைகள் எதிர்ப்பார்க்காத முறையில் கூடிக் குறையலாம்.

(ஈ) நிதியத்திற்கு நீண்டகால நோக்கு உள்ளது. அதற்கிணங்க, உயர் வட்டி வீதங்களுடன் கொள்வனவு செய்யப்பட்டுள்ள பிணைமுறிகள் அவ்வாறே வைத்திருப்பதன் மூலம் பிணைமுறை முதிர்ச்சி அடையும் வரையில் அந்த உயர் வட்டி வீதம் எமது சபைக்கு கிடைக்கின்றது. உயர் வட்டியுடன் கூடிய பிணைமுறிகளை விற்பனை செய்வதன் ஊடாக மூலதன இலாபங்களைப் பெற்றுக்கொள்ள அந்த வட்டி வீதங்களை விட சந்தை வட்டி வீதங்கள் குறைவாக இருத்தல் வேண்டும். அவ்வாறு வட்டி வீதங்கள் குறையும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலாபம் அடைவதற்காக விற்பனை செய்தல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் இலாபமொன்று பெறப்பட்ட போதிலும் விற்பனை மூலம் கிடைக்கப்பெறும் பணம் மீண்டும் குறைந்த வட்டி வீதத்தில் பிணைமுறிகளில் உடனடியாக முதலீடு செய்யப்படுகின்றது. அது 87மூ ஆக தக்க வைத்துக்கொள்வதற்கு பங்களிப்புச் செய்வதற்காக வேண்டியாகும். இவ்வாறானதொரு நிலைமை தொடர்ந்தும் நிலவினால் நிதியத்தில் குறைந்த வட்டி வீதமுள்ள பிணைமுறிகள் மாத்திரமே எஞ்சும். ஏதேனும் மூலோபாய சந்தர்ப்பங்களில் மாத்திரம் அவ்வாறு விற்பனை செய்ய முடியுமெனினும் கொள்கை அளவில் நீண்ட காலத்திற்கு அவ்வாறு செய்வது பொருத்தமற்ற செயற்பாடாகும்.

எவ்வாறெனினும், இரண்டாம் நிலை சந்தையில் கொள்வனவுகளை ஆரம்பித்த பின்னர் இரண்டாம் நிலை சந்தையில் பிணைமுறிகளை விற்பனை செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமான நலன்கள் தொடர்பில் செயல்முறை ரீதியில் ஆய்வொன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

(உ) இது தொடர்பில் மத்திய வங்கியிடமிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதோடு, பல சந்தர்ப்பங்களில் ஞாபகமூட்டல் செய்யப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவதற்காக மேலதிக செலவு ஏற்படுகின்றது. தற்போதுள்ள முறைக்கு அமைய அதற்காக மேலதிக செலவொன்றை செய்ய வேண்டிய தேவை இல்லை. ஆயினும் Direct Bidding Facility பெற்றுக்கொள்வதற்கு தேவையான சூழலை அமைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. முதலீட்டுப் பிரிவை விரிவுபடுத்துவதற்கு தேவையான ஆளணியை ஆட்சேர்ப்பதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளதோடு, மேலதிக அனுமதிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மத்திய வங்கியின் அனுமதி பெறப்பட்டவுடன் தேவையான ஊழியர்களை ஆட்சேர்த்த பின்னர் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் இதனை நடைமுறைப்படுத்த முடியும்.

(ஊ) இதற்குத் தேவையான பின்னணி உருவாக்கப்பட்டுவருகின்றது. சிறந்த உள்ளக நிர்வாகத்துடன் மற்றும் அபாயத்தை குறைத்த வண்ணம் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தேவையான மனிதவளத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் முதலீட்டுக்குத் தேவையான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கும் பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. ஏற்புடைய ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்காக முகாமைதத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, ஊழியர்கள் தற்போதைய வியாபார உலகிற்கு ஏற்ற வகையில் பயிற்றுவிக்கப்படுகின்றனர். மேலும், கணினிகளை கொள்வனவு செய்வதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டு கணினிகளைப் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அத்தோடு, இரண்டாம் நிலை சந்தையில் கொடுக்கல் வாங்கல்களுக்கு தேவையான தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான பின்னணி தயாரிக்கப்பட்டுள்ளது.

(எ) சபையினால் இலாபமீட்டல் அல்லது இலாபமீட்டாமை அந்தந்த கம்பனிகளின் செயற்பாடுகளில் தங்கியுள்ளது. அதற்கு உள்ளக மற்றும் வெளிப்புற காரணிகளும் தாக்கம் செலுத்துவதோடு, இந்த ஆபத்தான நிலமை பங்குச் சந்தையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்கே உரிய சாதாரண நிலமையாகும். அத்தோடு, ஏற்புடைய 7 கம்பனிகளினதும் செலவு ரூ.மில். 200 ஆக கொள்ளும் போது அது பங்குச் சந்தைக்குள் சபையின் மொத்த முதலீடுகளின் பெறுமதி 1'68ஸ ஆன சிறய அளவாகும். மேலும், 7 கம்பனிகளில் ஒரு கம்பனியைத் தவிர ஏனைய கம்பனிகள் அனைத்தும் பழைய முதலீடுகள் என்பதோடு, அந்த 7 கம்பனிகளுக்கும் மீளாய்வுக்குரிய வருடத்தில் பங்கிலாபங்கள் கிடைக்கப்பெறவில்லை என்பதோடு, 5 கம்பனிகளின் முதலீட்டுத் தினத்திலிருந்து பல்வேறுபட்ட வருடங்களில் பங்கிலாபமாக ரூ.42இ789இ484 தொகை கிடைக்கப்பெற்றுள்ளது. மேலும் 03 கம்பனிகளுக்கு 2018 ஆம் வருடத்தின் மார்ச் மாதத்தில் பங்கிலாபமாக ரூ.5இ850இ004 கிடைக்கப்பெற்றுள்ளது. மேலும், கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள பங்குகளின் சந்தை விலை அதிகரிக்கும் போக்கொன்று நிலவும் சந்தர்ப்பங்களில் முலதன இலாபங்களுடன் விற்பனை செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

### 4.4 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

(அ) 1981 ஆம் ஆண்டு முதல் 2016.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் பங்களிப்புத் தொகையாக ரூ.மில். 174'184 கிடைக்கப்பெற்றுள்ளதோடு, 2017.12.31 ஆம் திகதி ஒவ்வொரு அங்கத்துவக் கணக்கிலும் வைப்பிலிடுவதற்கு எஞ்சியுள்ள பெறுமதி ரூ.மில். 2,167 ஆகும். அந்த பெறுமதி கிடைக்கப்பெற்றுள்ள அங்கத்துவக் கணக்கின் பெறுமதியின் வீதமாக எடுத்து நோக்கினால் அது 1.24% ஆகும்.

2017.12.31 ஆம் திகதிக்கு ஒரு அங்கத்துவக் கணக்கில் வைப்பிலிடப்பட வேண்டியிருந்த பெறுமதியில் 2018.01.01 ஆம் திகதி முதல் 2018.10.01 ஆம் திகதி வரை கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பெறுமதி ரூ.மில். 653 ஆகும். அதற்கிணங்க, 2018.01.01 ஆம் திகதிக்கு 2016.12.31 ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்றுள்ள அங்கத்துவக் கணக்குகளில் பின்வரும் காரணங்களுக்காக அங்கத்துவக் கணக்குகளில் வைப்புச் செய்ய வேண்டிய பெறுமதி ரூ.மில். 1,532 ஆகும். இந்தப் பெறுமதி கிடைக்கப்பெற்றுள்ள அங்கத்துவக் கணக்குகளின் பெறுமதியின் வீதமாக எடுத்து நோக்கினால் அது 0.88%ஆகும்.

1. தொழில் வழங்குநர்கள் அங்கத்துவக் கணக்குகளை செலுத்தியுள்ள போதிலும் அந்த தொகைகளை வைப்புச் செய்வதற்கு தேவையான ஊழியர்களின் விபரங்கள் தரப்படவில்லை.

2. பல நிறுவனங்களுக்கு ஒரு காசோலை மூலம் அங்கத்துவப் பணம் செலுத்தியுள்ள போது அந்த தொகைகளை வெவ்வேறாக நிறுவனங்களுக்கு பகுக்க வேண்டிய முறையை விளக்குவது சிரமமாகும். (ஏற்புடைய தொழில் தருநர் நிறுவனம் தற்போது செயலற்று காணப்படுதல்)

3. நிறுவனத்தினால் வழங்கப்படும் அரையாண்டு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தரவுகள் தெளிவின்மை. (ஏற்புடைய தொழில் தருநர் நிறுவனம் தற்போது செயலற்று காணப்படுதல்)

4. நிறுவனங்களின் முகாமைத்துவம் மாறுபடும் காரணத்தினால் அதற்கு முன்னரான காலப்பகுதிகளுக்குரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் மற்றும் அக்காலப் பிரிவில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு புதிய முகாமைத்துவம் ஒத்துழைப்பு வழங்காமை.

5. விசேடமாக தோட்டத்துறை நிறுவனங்களில் தொழில் புரியும் ஊழியர்களுக்கு தேசிய அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் மற்றும் பெயர்களில் ஒரு பகுதியை மாத்திரம் தொழில் வழங்குநர்களினால் வழங்கப்படுவதனால் சரியான அங்கத்தவர்களை அடையாளம் காண முடியாமை.

மேலும், அங்கத்துவக் கணக்குகளை சீறாக்கம் செய்வதற்கு தற்போது உள்ள அங்கத்துவக் கணக்குகளின் சரியான அங்கத்துவத் தகவல்களை தொழில் வழங்கும் நிறுவனத்தினால் பெற்றுக்கொண்டு அங்கத்துவக் கணக்குகளில் சீறாக்கம் செய்வதற்கு தனியான விசேட பிரிவொன்று 2016.01.10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதியத்துடன் மாதாந்தம் பதிவு செய்யும் தொழில் தருநர் தகவல்கள் பரிமாற்றம் செயன்முறையொன்று இடம்பெறுவதோடு. அந்தத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு போலி இலக்கங்கள் (Dummy) நிலையான தொழில் தருநர் இலக்கங்களுக்கு மாற்றப்படும்.

மேலும், சபையின் பிராந்திய அலுவலகங்கள் மூலம் நிறுவனங்களை பரீட்சிக்கும் போது பெற்றுக்கொள்ளப்படும் நிலையான தொழில் தருநர் இலக்கங்களுக்கு அமையவும் தொழில் தருநர்களினால் ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்த பின்னர் அந்தத் தகவல்கள் எமக்கு அறிவிக்கப்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களிலும் போலி இலக்கங்களின் கீழ் (Dummy) கொடுப்பனவு செய்யப்படும் பங்களிப்புத் தொகைகள் நிலையான தொழில் தருநர் இலக்கங்களுக்கு மாற்றப்படும்.

(இ) சபையின் சகல அங்கத்தவர்களுக்கும் நலன் ஏற்படும் வகையில் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக்கொள்வதற்காக அனுராதபுர நகரத்தில் நிறுவப்பட்டுள்ள சுற்றுலா விடுதி வெறுமனே இலாபமீட்டும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டம் அல்ல. அது 2.6 மில்லியன் எண்ணிக்கையைக் கொண்ட சபையின் அங்கத்தவர்களின் நலன்புரிக்காக வழங்கப்பட்டுள்ள நலத்திட்டமொன்றாகும். இந்த சுற்றுலா விடுதி தற்போது சபையினால் அங்கத்தவர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ள சுகாதார, வீடமைப்பு மற்றும் கல்விக்கான நலத்திட்டங்கள் 10 க்கு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ள விசேட நலனாகும். இதன் காரணமாக இந்த சுற்றுலா விடுதியை நடாத்திவரும் போது நலன்புரி அடிப்படைகளின் மீது செயற்படுத்தப்படுவதே அன்றி செலவு நலன் மற்றும் தேறிய இலாபம் அடிப்படையில் நடாத்திவரப்படும் கருத்திட்டமொன்றல்ல.

### 4.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டுள்ள சாப்புகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருப்பது மேலதிக நேரம் கொடுப்பனவு ஒரு மணித்தியாலத்திற்கு 1 1/2 மணித்தியால வீதத்திலாகும். அவ்வாறே, அந்தச் சட்டத்திற்கு அமைய ஒரு நாளைக்கு பணியாற்ற வேண்டிய காலம் 08 மணித்தியாலங்களை விஞ்சக் கூடாதென ஒரு கிழமைக்கு வேலை மணித்தியாலம் 45 மணித்தியாலங்களை விட குறைவாக வேலை செய்வதற்கும் அலுவலக பரீட்சயம் உள்ள போது அது சட்டரீதியானதாகும் என இலங்கை முதலாளிமார் சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள Monograph -17 க்கு அமைய குறிப்பிடப்பட்டுள்ளது.

### 4.6 ஆளணி நிர்வாகம்

(அ) சபையின் ஒவ்வொரு பதவி வகுதிகளுக்கும் அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கு மேற்படாத வண்ணம் தேவையான பிரிவுகளுக்கும் பகுதிகளுக்கும் ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அது சபையின் பணிகளை சீராக மேற்கொள்வதற்கு இன்றியமையாததாகும். சபையில் வெற்றிடமாக உள்ள பொது முகாமையாளர் பதவிகளை நிரப்புவதற்கு பல சந்தர்ப்பங்களில் பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்ட போதிலும் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் அதாவது 2016.12.27 மற்றும் 2017.01.06 ஆகிய திகதிகளில் தகுதிவாய்ந்த அபேட்சகர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் அவர்களது பின்னணி மற்றும் நடத்தைகளை ஆராயும் போது அவர்கள் பொருத்தமற்றவர்களென தகவல்கள் கிடைக்கப்பெற்றமையினால் அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை.

ஆயினும், சபையின் நிறுவன ஒழுங்கமைப்பில் தவிசாளர் பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் மேலதிக பொது முகாமையாளர் பதவிகள் தொடர்ந்தும் செயற்பாட்டில் உள்ளதோடு, சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு மற்றும் உயர் முகாமைத்துவ மேற்பார்வை நடவடிக்கைகளுக்கு பாரிய தாக்கம் ஏற்படவில்லை.

(ஆ) சபையின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்களை கோரப்படும் மூலங்களை திருத்தியமைத்து அதற்காக பின்வரும் புதிய மூலங்களை அறிமுகப்படுத்தி முகாமைத்துவத் திணைக்களத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

- பகிரங்க பத்திரிகை விளம்பரங்கள்
- இணையத்தளம்
- தொழில் தேடுபவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள்
- தொழில் வங்கிகள்

அதற்கிணங்க, 2017 ஆம் ஆண்டின் முகாமைத்துவ உதவியாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அந்த அனுமதிக்கப்பட்ட மூலங்கள் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

(இ) இது தொடர்பில் இந்த கடிதத்தின் 2.2.4 (அ) பதிலுக்கு மேலதிகமாகும். அந்த பதில் கடமை நிறைவேற்றிய உத்தியோகத்தரின் பதவியை உறுதிப்படுத்தும் போது பிரிவுத் தலைவரிடமிருந்து செயலாற்றுகை அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

(ஈ) பாராளுமன்ற பொதுமனுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டுக்கு வழங்கப்பட்ட சிபாரிசுக்கு அமைய அப்போது சுயதொழில் பிரிவில் கடமைப்புரிந்த உத்தியோகத்தர் அனுமதிக்கப்பட்ட மொத்த முகாமையாளர் பதவிகளை விஞ்சாத வண்ணம் சுயதொழில் முகாமையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இது சபையின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் நிகழ்ந்த ஒரு விடயமாகும்.

## 5 நிலையான அபிவிருத்தி

### 5.1 நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

தற்போது இது தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதோடு, எதிர்காலத்தில் சபைக்குரிய இலக்குகள் அடையாளம் காணப்படவுள்ளன.

## 6 கணக்களிப்பொறுப்பும் நல்லாழுகையும்

### 6.1 உள்ளக கணக்காய்வு

(அ) அங்கத்துவ நலன்கள், வியன மற்றும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் வீட்டுக் கடன் மீளளிப்பு, ஊழியர் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள், வெகுமதி கொடுப்பனவு மற்றும் எஞ்சிய லீவுக்கான கொடுப்பனவு, சேவை முடிவுறுத்தும் போதான கொடுப்பனவு, ஊழியர் மருத்துவ பட்டியல்கள் மீளளிப்பு போன்றன முனாமைத்துவத்தின் தேவைப்பாட்டுக்கு அமைய கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது.

இந்த முன்கூட்டிய கணக்காய்வுக்கு மேலதிகமாக பின்வரும் பின் கணக்காய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

கம்பஹா பிராந்திய அலுவலக பரிசோதனை, ஊழியர்கள் வரவு மற்றும் வெளியேறல் ஏடுகளை பரிசோதித்தல், பங்களிப்பு மற்றும் தண்டப் பண வருமானங்களின் முன்னேற்றத்தை பரிசோதனை செய்தல், வாகனக் கொள்வனவுக்கான கடன், சபையில் சேவையை முடிவுறுத்திய ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகை, கணினிமயப்படுத்தப்பட்ட

வருமதிகள், காசுப் புத்தகத்தைப் பேணிவரல், ஹம்பாந்தோட்டை பிராந்திய அலுவலகம் கணக்காய்வு, வாகன விபத்துக்கள் பற்றிய காப்புறுதி நக்ஷ்டஈடுகள் பெற்றுக்கொள்ளல், சுய தொழில்களுக்கான மேலதிகக் கட்டணம் அறவிடல், சிட்டைகளை விநியோகித்தல் மற்றும் வைப்பிலிடுதல்.

(ஆ) சபையின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள வருடாந்த கணக்குகளை வருடாந்தம் உள்ளக கணக்காய்வு செய்யப்படுவதோடு, வருடாந்த அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய பேரினப் பொருளாதாரங்களை விபரித்தல் மற்றும் ஏனைய விஸ்தீரன கணக்குகளை விபரித்தல் என்பன பொதுவான விடயங்கள் என்ற காரணத்தினால் உள்ளக கணக்காய்வுக்கு உட்படுத்த வேண்டிய தேவைப்பாடு இல்லை. இணைந்த திட்டம் என்பது எதிர்வரும் மூன்றாண்டுகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் விடயங்களே அன்றி உள்ளக கணக்காய்வுக்கு உட்படுத்த வேண்டிய தற்போதைய தகவல்களை உள்ளடக்கிய ஆவணம் அல்ல. அதற்கிணங்க இணைந்த திட்டமும் உள்ளக கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியதொரு ஆவணமல்ல.

## 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

சபையின் பதீட்டு வருமானம் 94% அளவு தங்கியிருப்பது ஆபத்தற்ற அரசாங்க பிணையங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடு மற்றும் நிலையான வட்டி வருமானமுள்ள முதலீடுகள் தீர்வையாகும் தினத்திற்கு நிதிச் சந்தையில் காணப்படும் நிதி விகிதங்கள் மற்றும் சந்தை பட்டியிலிடப்பட்ட கம்பனிகளினால் கிடைக்கப்பெறும் பங்கிலாபங்கள் மற்றும் மூலதன இலபங்களினாகும். அதற்கமைய, ஒவ்வொரு முதலீட்டு வகைகளிலிருந்தும் கிடைக்கப்பெறும் வருமானங்கள் பாதீட்டை விட தற்போதைய பெறுமதி மாறுபட்ட பேதிலும் முதலீட்டு அமைப்பாக கருதி (Investment Portfolio) பாதீட்டு வருமானத்தை அடைந்துகொள்வதற்கான உத்தியாகும். (Stratergy). அதற்கிணங்க, 2017 ஆம் ஆண்டில் பாதீட்டு மொத்த வருமானம் மற்றும் உண்மையான மொத்த வருமானத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை 7.12% பயனுள்ள வகையில் பேணிவருவதற்கு சபைக்கு இயலுமாகியது.

கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள படி செலவின் வீச்சை கருத்திற்கொள்ளும் போது சபையினால் கட்டுப்படுத்த முடியுமான அனைத்து செலவுகளையும் மிகவும் கட்டுப்பாட்டின் கீழ் (Tight Control) முகாமை செய்யப்படுவதோடு, அங்கத்துவ நலன்கள் போன்ற சில செலவுகள் சபையினால் எந்த வகையிலும் கட்டுப்படுத்த முடியாது. வருடாந்த பாதீட்டைத் தயாரிக்கின்ற போது அங்கத்துவ நலன்கள் சபையினால் எதிர்வரும் வருடத்தில் செலவு செய்ய உத்தேசிக்கப்படும் பெறுமதிகளை குறிப்பிடப்பட்ட போதிலும் உண்மையான செலவுகள் அங்கத்தவர்களினால் நலன்கள் கோரப்பட்டால் மாத்திரமே தீர்மானிக்கப்படும். அங்கத்துவ நலன்கள் தொடர்பில் பாதீட்டுச் செலவு மற்றும் உண்மைச் செலவை ஒப்பிட்டுப் பார்த்து பாதீட்டு முகாமைத்துவ கட்டுப்பாட்டு உத்தியொன்றாக பயன்படுத்தப்படவில்லை எனக் குறிப்பிடுவது நடைமுறைச் சாத்தியமானதல்ல.

எவ்வாறெனினும், வருடத்தின் பாதீட்டு வருமானம் மற்றும் செலவு, உண்மைச் வருமானம் மற்றும் செலவுக்கு இடையிலான வித்தியாசம் முறையே, 7.12% மற்றும் 18.25% இடையே பேணிவருவதன் மூலம் உறுதிப்படுத்தப்படுவது மிகவும் சிறந்த பாதீட்டுக் கட்டுப்பாடொன்றை சபை பேணிவருகின்றது என்பதாகும்.

மேலும், பாதீட்டு வருமானம் மற்றும் செலவு என்பவற்றுக்கு இடையிலான ஒப்பீட்டு ரீதியான அறிக்கையொன்று பணிப்பாளர் சபையிடம் மாதாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்ற அதே வேளை அங்கு வீச்சுக்கள் தொடர்பில் (Variances) விரிவாக கலந்துரையாடி அத்தகைய வீச்சுக்களை சபைக்கு நன்மை பயக்கும் விதத்தில் மாற்றியமைத்துக்கொள்வதற்கு தேவையான அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

## 6.3 பெறுகை நடைமுறைகள்

(அ) i, ii, iii

- ஆபத்தை மதிப்பீடு செய்வதற்காக ஆலோசனை சேவையைப் பெற்றுக்கொள்ளல் (ரூ 1,050,000)

ரூபா பில்லியன் 263 க்கு மேற்பட்ட நிதி முதலீடும், ரூபா பில்லியன் 274 க்கு மேற்பட்ட அங்கத்துவக் கணக்கு மீதிகளுக்கான பொறுப்புக்களுடன் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் முகம் கொடுக்கும் ஆபத்தைக் கருத்திற்கொள்ளும் போது கணக்காய்வுக் குழுவினால் வழங்கப்பட்டுள்ள சிபாரிசுகளுக்கு அமைய பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி ஏற்றுக்கொள்ளப்பட்ட 04 கம்பனிகளிலிருந்து இந்தச் சேவைக்காக பெறுகைப் பிரிவினால் விலைமனுக்கள் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. (2016.02.25 ஆம் திகதிய பணிப்பாளர் சபை தீர்மான இலக்கம் 09/2016). இந்த விலைமனு கோரலுக்கு அமைய 02 கம்பனிகள் மாத்திரம் விலைமனுக்களை சமர்ப்பித்திருந்தன ^Ernst & Young, BDO Partners)

பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு அமைய இந்த விடயத்தை நிறைவேற்றிக்கொள்வது தொடர்பில் சமூகமளித்து முன்வைப்பை (Presentation) சமர்ப்பிக்குமாறு மேற்குறித்த 02 கம்பனிகளுக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டது. அதன் பின்னர் Ernst & Young கம்பனி மாத்திரம் சமூகமளித்து மேற்படி முன்வைப்பை செய்தது. முன்வைப்பு தொடர்பில் திருப்தியடைந்த பணிப்பாளர் சபையினால் Ernst & Young கம்பனியிடமிருந்து அந்தச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. (2016.10.27 ஆம் திகதிய பணிப்பாளர் சபை தீர்மான இலக்கம் 194/2016)

தற்போது மேற்படி கம்பனியினால் சகல நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு, பின்வரும் ஆவணங்கள் எம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1. அபாய முகாமைத்துவக் கொள்கைகள் (Risk Management Policy)
2. அபாய மதிப்பீடு மற்றும் பதிவேடு (Risk Assessment Dev. Risk Register)

தற்போது பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மூவரை உள்ளடக்கிய அபாய முகாமைத்துவக் குழு நீசுஆஊளூ மற்றும் முகாமைத்துவ அபாயக் குழு நீஆசுஊளூ நியமிக்கப்பட்டு மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

- ஒன்றிணைந்த நிதிக் கூற்றை தயாரிப்பதற்கு ஆலோசனை சேவையைப் பெற்றுக்கொள்ளல் (&. 293,250)

மேற்படி சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாடு எதிர்பாராது நிகழ்ந்த காரணத்தினால் 2017 ஆம் ஆண்டுக்குரிய 2016 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் இந்தப் பணி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

ஆயினும், இந்த ஆலோசனை சேவையை 2 வார குறுகிய காலப் பிரிவுக்குள் நிறைவுசெய்ய வேண்டி இருந்த காரணத்தினால் கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்துரையாடல் நடாத்துதல், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் தரங்கள் ஆய்வுச் சபையின் (SLAASMB) உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல், அந்த இரு தரப்பினர்களுடனும் எழுத்துமூல கடிதத் தொடர்புகளைப் பேணுதல் மற்றும் அவ்விரு தரப்பினர்களதும் சிபாரிசுகளுக்கு அமைய ஒன்றிணைந்த கணக்குகளைத் தயாரிப்பதற்கு அறிவுரை வழங்குதல் அல்லது தயாரிக்காமை தொடர்பிலான முன்கூட்டியே தீர்மானிக்க முடியாத மிகவும் சிக்கலான ஆயினும், 2 வாரங்களுக்குள் நிறைவு செய்யவேண்டிய ஆலோசனை சேவை என்றபடியால் தேசிய பெறுகை வழிகாட்டு நெறிகள் கோவையின் பிரிவு 3.13.1 பிரகாரம் ஒருதலைப்பட்சமான (Sole Source Selection) தேர்வின் அடிப்படையில் இந்த ஆலோசனைச் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டது.

மேலும், இந்த ஆலோசனைச் சேவையைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் விரிவாக பொருள்கோடப்பட்ட விடயப் பரப்பு (TOR) ஆலோசனை சேவை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததோடு, பணிப்பாளர் சபையின் முழுமையான அனுமதி அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டது. அத்தோடு, ஊ.ந.பொ.நிதியம் ஆலோசனை சேவை நிறுவனத்துடன் முறையான ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளது.

எனவே, இந்த ஆலோசனை சேவைக்காக ஆலோசகர் ஒருவரை நியமித்தல் தேசிய பெறுகை வழிகாட்டலுக்கு அமைய மற்றும் சபையின் நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படாத வண்ணம் சிறந்த முறையில் மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நிபுணத்துவ சேவையைப் பெற்றுக்கொள்ளல் (&.80,500)

போட்டித்தன்மையுடைய விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வது நடைமுறைச் சாத்தியமற்ற நிலையில் காணப்பட்டதனால் தொழிற்துறை நிபுணர் ஒருவரைக் தேடிக் கண்டுபிடிப்பது மிகவும் சிரமமான காரியமாக இருந்தமையால் தேசிய பெறுகை வழிகாட்டுக் கோவையின் 3,131) உளூ பிரகாரம் சபையின் வருடாந்த பணிக்கொடைப் பொறுப்பை நிர்ணயித்தல் மற்றும் உறுதிப்படுத்துவதற்கு இந்த ஆலோசனைச் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டது.

எனவே, நிபுணத்துவ பகுப்பாய்வாளர் ஒருவரின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான செலவு ரூ.80,500 தொகை மேற்படி வழிகாட்டு நெறிக் கோவையின் படி நகர்த்தப்பட்ட ஒரு செலவாக கணிக்கமுடியதென்பது எமது அவதானிப்பாகும்.

(ஆ) வருடாந்த பெறுகைக்காக திட்டமிடப்பட்ட போதிலும் அந்த நிதியங்களை பெறுகைக்காக உண்மையில் பயன்படுத்தாத போது அந்த நிதியங்கள் சபையின் முதலீட்டுக்காக ஈடுபடுத்தப்படுகின்றது. எனவே, பெறுகை திட்டமிடப்படி நடைப்பெறாத காரணத்தினால் சபைக்கு நிதி நன்மையே தவிர நிதி இழப்பு எவ்வாறும் நிகழாது. மேலும், சபையின் வருடாந்த இலாபத்தை உச்ச அளவில் அங்கத்தவர்களுக்கு உச்ச அளவிலான நன்மையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் செலவுக் கட்டுப்பாடு தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படுவதனால் பெறுகை மேற்கொள்ளும் போது கூடிய கட்டுப்பாடு நீவுபைாவ ஊழவெசழடளூ பேணப்பட்டு வருகின்றது. எந்த நேரமும் புதிய கொள்வனவு தொடர்பில் அதிக நாட்டம் காட்டாமல் உபகரணங்களை சிக்கனத்துடன் பாவிப்பதற்கு உத்தியோகத்தர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். குறைபாடுடையதாக காணப்படும் போது பழுதுபார்த்து மீண்டும் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றது. எனவே, வரவுசெலவு மயப்படுத்தப்பட்ட பெறுகையை விட உண்மையான பெறுகை செலவை குறைந்த மட்டத்தில் பேணிவருவதற்கு சபை முயற்சி செய்கின்றது. கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள படி பாதீட்டுப் பெறுமதியை விட குறைந்த பெறுமதி பெறுகைக்கான அர்ப்பணிப்பு எனும் சபையின் ‘செலவுக் கட்டுப்பாடு’ சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டிருப்பதற்கு சிறந்த உதாரணமாகும்.

(i) சீருடைகளை தெரிவு செய்யும் போது பயன்படுத்துபவர்களின் விருப்பத்திற்கேற்ப முன்னுரிமை வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எனவே, அதன் தரம் அத்தோடு தெரிவு செய்யப்படும் மூலப்பொருட்களின் கலவை மற்றும் தரக்குறியீடு போன்றவை ஆடைகள் தெரிவு செய்யும் முன்னர் மதிப்பீடு செய்ய முடியாது என்பதனால் பெறுகை

வழிகாட்டு நெறிகள் கோவையின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான மதிப்பீடொன்று தயாரிக்கப்படாத போதிலும் வருடாந்த பாதீட்டைத் தயாரிக்கும் போது உத்தேச ஊழியர் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் உச்ச செலவை கருத்திற்கொண்டு பாதீடு தயாரிக்கப்படுகின்றது.

(ii) விலைமனு கோரும் அறிவித்தல் 2017 ஜுன் மாதம் 20 மற்றும் 21 ஆகிய தினங்களில் பிரசித்திபெற்ற பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டு விலைமனு கோரும் 2017/07/12 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க பத்திரிகை அறிவித்தல் தினத்திலிருந்து 22 நாட்கள் விலைமனு திறப்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

(iii) பெறுகை நடைமுறைக்கு அமைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு உறுப்பினர்கள் 03-05 வரை ஆகும். எமது சபை சீருடைகளை கொள்வனவு செய்யும் போது மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் மற்றும் உயர் தரத்திலான ஆடைகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு சபையின் பணிப்பாளர்களினால் புடவை தொடர்பிலான விசேட நிபுணர், பிரதி பொது முகாமையாளர்கள், உதவி பொது முகாமையாளர்கள் மற்றும் ஒவ்வொரு தொழிற் சங்கத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் இரு உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட அதிக எண்ணிக்கையிலான (20 பேரைக் கொண்ட) தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு நியமிக்கப்படுகின்றது.

(iv) சபையின் விலைமனு பிணைமுறி வங்கியொன்றினூடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இன்ஸ்ரீ எபரல் மற்றும் சலுசல நிறுவனம் வங்கியுடன் பினக்கொன்றை ஏற்படுத்திக் கொண்டிருப்பதனால் அதற்கு மாற்று வழிமுறையில் பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு சபையினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. விலைமனு பிணைமுறி தொடர்பில் பெறுகை வழிகாட்டு நெறிக் கோவையின் 7 (ñ5'3'11ரூ பிரகாரம் மீண்டும் பெற்றுக்கொள்ளும் நிதிப் பிணைமுறையொன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குரிய காசோலையொன்றைப் பெற்றுக்கொண்டு அவர்கள் விலைமனு கோருவதற்கு தகுதிபெற்றவர்களாக கருதப்பட்டனர். பெறுகை வழிகாட்டு நெறிக் கோவையின் பிரிவு 5'3'10 பிரகாரம் விலைமனு காப்புறுதி 90 நாட்களுக்கு இருத்தல் வேண்டும். தரக் காப்புறுதி 120 நாட்களுக்கு எம்மால் கோரப்பட்டிருப்பது அதனை மேலும் பயனுள்ள விதத்தில் மேற்கொள்வதற்காகும். அனைத்து விலைமனு தாரர்களும் ஆகக் குறைந்த நாட்களுக்கு இடையில் இருப்பதனால் அனைத்து விலைமனுதாரர்களும் பெறுகை வழிகாட்டு நெறிக் கோவையின் 5.3.10 இன் படி மாற்றீடு செய்யப்படவில்லை.

(v) சீருடைகளை தெரிவு செய்யும் போது விலைக்கு மேலதிகமாக ஊழியர்களின் தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு அறிவித்தலின் பிரகாரம் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

(vi) ஆடைகளுக்கு பிரசித்திபெற்ற நிறுவனங்கள் இந்த விலைமனுவை சமர்ப்பிப்பதற்கு முன்வந்த போதிலும் இறுதியில் எந்தவொரு வழங்குநருக்கும் 100ஸ வகையீட்டுக்கு அமைய வழங்கல் செய்ய முடியவில்லை. இது எமது சபையின் தவறன்று. வகையீட்டுக்கு அமைய முடியுமான அளவு கொள்வனவு செய்வதற்கு முயற்சி எடுத்த போதிலும் சந்தையில் இல்லாமலிருப்பது வருத்தத்திற்குரிய விடயமாகும். இறுதியாக பெற்றுக்கொள்ள முடியுமான சிறந்த ஆடைகளைக் கொண்டு திருப்தியடைய நேரிட்டது.

### 6.4 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

(அ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தொகையான ரூ.27,497,905கூ- ஏற்புடையதாவது இரண்டு கம்பனிகளுக்குரிய கடனீட்டுப் பத்திர முதலீடுகள் தொடர்பிலாகும். ஒரு கம்பனிக்கு ரூ.12,291,556கூ- மற்றும் மற்றைய கம்பனிக்கு ரூ.15,206,349கூ- வீதம் ஆகும். ரூ.12,291,556கூ- செலுத்த வேண்டிய நிறுவனத்திற்கு எதிராக கலைப்பதற்கான வழக்கொன்று காணப்படுகின்றது. சபைக்கு ஏற்புடைய தெகையை அறவிட்டுக்கொள்வதற்கு சபையும் தலையீட்டுத் தரப்பாக முன்னிற்கின்றது.

மற்றைய நிறுவனம் ஏற்புடைய ரூ. 15,206,349கூ- அறவீட்டுக்கொள்வதற்கு கலந்துரையாடல்கள் பல நடாத்தப்பட்டுள்ளதோடு அத்தொகையை தவணை முறையில் செலுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட போதிலும் நிதிக் கஷ்டங்கள் காரணமாக அந்த நிறுவனம் சில தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்தி எஞ்சிய கொடுப்பனவுகளை இடைநிறுத்தியுள்ளது. இந்த நிறுவனம் தற்போது செயற்பாடுள்ள நிறுவனமொன்றாக காணப்படுவதனால் நிதியை அறவீட்டுக்கொள்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் இந்த நிறுவனம் அரச சார்பு நிறுவனமொன்று என்ற காரணத்தினால் ஏற்புடைய தொகையை அறவீட்டுக்கொள்ளும் நோக்கில் சபைக்குரிய நிரல் அமைச்சின் ஊடாக அவ்வப்போது அரச தொழில் முயற்சித் திணைக்களத்தின் உதவி கோரப்பட்டுள்ளது. இறுதியாக இது தொடர்பில் 2018 ஜூலை மாதம் 20 ஆம் திகதி உதவி கோரப்பட்டுள்ளது.

முதலாவது கம்பனிக்குரிய சட்ட நடவடிக்கைகள் கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, இரண்டாவது கம்பனியிடமிருந்து நிதியை அறவிடும் முறையையும் அவ்வாறே குறிப்பிட முடியும்.

(ஆ) 2 கம்பனிகளில் செய்யப்பட்ட ரூ.25,227,541 பெறுமதியான முதலீடு மிகவும் பழைய முதலீடாகும். இந்த 2 கம்பனிகளும் கலைக்கப்பட்டுள்ளதோடு, அவற்றுக்குரிய வழக்குகள் இன்னும் விசாரிக்கப்பட்ட வண்ணம் உள்ளன. மேற்படி முதலீடு செய்யப்பட்ட தொகை தீர்க்க முடியாத முதலீடாகக் கருதி புத்தகங்களில் பதிவழிப்புச் செய்வதற்கு பொதுச் திறைசேரியிடம் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. அந்த முடிவை நடைமுறைப்படுத்துவதற்கு நிரல் அமைச்சினால் அரச தொழில் முயற்சி திணைக்களத்திற்கு முன்னளிப்புச்

செய்யப்பட்டுள்ளது. அரச தொழில் முயற்சித் திணைக்களத்தின் தீர்மானத்திற்கு அமைய எதிர்காலத்தில் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) இந்தக் கம்பனியை கலைப்பதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டில் கலைப்பதற்கு கட்டளை கிடைக்கப்பெற்றுள்ளது. அதன் பின்னர் அந்த கட்டளைக்கு எதிராக மேல் நீதிமன்றங்களில் மேன்முறையீட்டு மனுக்கள் 03 பல்வேறு திறத்தவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த மேன்முறையீட்டு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் இந்த வழக்கு மாவட்ட நீதிமன்றத்தில் 2018.02.14 ஆம் திகதி கலைப்பாளர் ஒருவரை நியமிப்பதற்காக அழைக்கப்பட்டது. அதன் பின்னர் இந்த வழக்கு 2018.03.28 ஆம் திகதி அழைக்கப்பட்டு முறையீட்டாளரினால் கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்படும் வரையில் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

ஏற்புடைய வழக்கில் தலையிட்டுத் தரப்பாக சபையும் பங்கேற்றுள்ளது. கலைக்கும் பணி நிறைவடைந்த பின்னர் சபைக்கு வரவேண்டிய தொகை ஏதும் உள்ளதா என்பது பற்றியும் அறவிட வேண்டிய தொகை தொடர்பில் உறுதியான தீர்மானமொன்றுக்கு வர முடியும்.

(ஈ) சட்டத்தை திருத்துவது தொடர்பில் ஆராய்சி செய்யப்பட்டு வருவதோடு, எதிர்காலத்தில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**7**

(i) சபையின் அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு இது வரையில் வைப்புச் செய்யப்படாத பங்களிப்புத் தொகைகள்.

(ii) நிதிய முதலீடு

சபை எப்போதும் நிலவும் வெளிவாரி வியாபார சூழலில் உயர் பாதுகாப்பு மற்றும் கூடிய நலன் கிடைக்கப்பெறும் வகையில் முதலீடுகளை மேற்கொள்கின்றது. 2017 ஆம் ஆண்டின் இறுதியாகும் போது திறைசேரி பிணைமுறி மற்றும் அரசாங்க வங்கிகளில் நிலையான வைப்புக்களில் செய்யப்பட்ட முதலீடுகளின் சதவீதம் 93‘87மூ ஆகும். திறைசேரிப் பிணைமுறிகளில் மாத்திரம் செய்யப்பட்ட முதலீடுகளின் வீதம் 79‘29மூ ஆகும். மேலும், அதிக அபாயமுள்ள வேறு நிலையான வருமான பிணையங்களில் முதலீடு 0‘88மூ மாத்திரமாகும். பங்குச் சந்தைப் போன்ற கூடிய அபாய நிலமையுள்ள மூலங்களில் செய்யப்பட்ட முதலீடு 4‘14மூ அளவிலான குறைந்த வீதத்தில் பேணப்பட்டது. மேலும், வருடத்தினுள் உழைப்பு சதவீதம் 11ஸ ஆக பேணப்பட்டுள்ளது. உயர் பாதுகாப்பு மற்றும் கூடிய நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு தற்போதுள்ள வியாபாரச் சூழலுக்கு ஏற்ற வகையில் முதலீட்டுக் கொள்கையை தொடர்ச்சியாக மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) பதீட்டுக் கட்டுப்பாடு

வருடத்தின் வரவுசெலவுத்திட்ட வருமானம் மற்றும் செலவு, உண்மைச் செலவு மற்றும் உண்மை வருமானம் என்பவற்றுக்கு இடையிலான வித்தியாசம் முறையே 7‘12ஸ மற்றும் 18‘25ஸ இடையில் பேணிவருவதன் மூலம் உறுதிப்படுத்தப்படுவது யாதெனில் சிறந்த பாதீட்டுக் கட்டுப்பாட்டை சபை பேணிவருகின்றது என்பதாகும்.

(இ) பெறுகை செயன்முறை

சபையின் பெறுகைத் திட்டம் அந்த வருடத்தின் வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகின்றது. சபையின் வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தை தயாரிக்கின்ற போது நிலையான சொத்துக்களாக தற்போது பயன்படுத்தப்படும் ஆயினும், மிகவும் பழைய சொத்துக்களில் குறைபாடுகள் ஏற்படுமாயின் அந்தச் சொத்துக்களை மீளமைவு (ரீசுநிடயஉநஅநவெ) செய்வதற்கும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுகின்றது.

அதற்கிணங்க, 2017 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய பெறுகைத் திட்டத்தை தயாரிக்கின்ற போது புதிய வகைகள் ரீசுநிடயஉநஅநவெ ஐவநஅரூ பெறுகைக்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. 2017 ஆம் ஆண்டுக்கான மீளமைவு (ரீசுநிடயஉநஅநவெ) ஆக திட்டமிடப்பட்ட அதிகமான வகைகள் குறைபாடுகள் அற்றவைகளாக இருந்த காரணத்தினால் மற்றும் பழுதுபார்க்கப்பட்டு பழைய பொருட்கள் மீண்டும் பயன்படுத்தப்பட்டதனால் அவ்வாறான வகைகள் கொள்வனவு செய்யப்படவில்லை. மேலும், புதிய வகைகளாக வருடத்தின் ஆரம்பத்தில் பெறுகைத் திட்டங்கள் வகுக்கப்பட்ட போதிலும் புதிய வகைகளை வைத்திருப்பதில் இடப் பற்றாக்குறை, திட்டமிட்ட படி பௌதீக மாற்றங்களை செய்யாமை, சேவை நிலயங்கள் மாற்றம் அடைதல், செலவுகளை குறைத்துக்கொள்வதற்கு பெறுகை நடவடிக்கைகளை அடுத்துவரும் வருடத்திற்கு காலம் தாழ்த்துதல் போன்ற காரணங்களினால் சில புதிய வகைகள் (ீநேற ஐவநஅ) 2017 ஆம் ஆண்டு திட்டமிட்ட படி கொள்வனவு செய்யப்படவில்லை.

(ஈ) ஆளணி நிர்வாகம்

சபையின் ஆளணி நிர்வாகத்திற்கு நிர்வாக மற்றும் ஒழுக்காற்றுக் கோவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு ஊழியர்களுடன் தொடர்புடைய ஏனைய சட்ட திட்டங்களின் ஏற்பாடுகளுக்கு அமைய ஊழியர் நிர்வாகம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதில் ஊழியர் வினைத்திறனை அதிகரிப்பதற்கான முகாமைத்துவ மூலோபாயங்களாக திரண்ட திட்டங்கள் மற்றும் செயல் திட்டங்களை வகுத்தல், கடமை விபரங்களை அறிமுகம் செய்தல், பதிலீட்டுத் திட்டங்களை அறிமுகம் செய்தல், ஊழியர்களுக்கான செயலாற்றுகை இலக்குகளை அறிமுகம் செய்தல் மற்றும் அவற்றை ஒப்பீட்டு நோக்கும் செயல்முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

(உ) திட்டமிடுதல்

எதிர்வரும் 3 வருட காலத்திற்குள் சபை நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் அனைத்து இலக்குகளையும் அடைந்துகொள்ளும் முறைகள் மற்றும் கால எல்லைகள் என்வற்றை உள்ளடக்கிய விரிவான திட்டமொன்று 2018 – 2021 இணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



மஹிந்த மடிஹஹேவா
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை